# நளன் சரிதை

சென்னை, பச்சையப்பன் கலாசாலை
மாஜித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
கா. ர. கோவிந்தராஜ முதலியார்
அவர்கள் இயற்றியது

நான்காம் பதிப்பு

ஓரியன்டல் பப்ளிஷிங் ஹவுஸ்
286, எஸ்பிளநேட் (அப்பா பில்டிங்ஸ்)
சென்னை
1946

மூன்றாம் பதிப்பு 1945
நான்காம் பதிப்பு 1946

Printed by Shakti Press Ltd., Royapettah, Madras.
P. I. C. No. MS. 22—1946 for Oriental Publishing House,
P. I. C. No. MS. 29-A.—Esplanade, Madras.

# முகவுரை

நளன் சரிதை என்னும் இந்நூல் பெரும்பான்மையும் நளவெண்பாவையும், சிறு பான்மை நைடதத்தையும் தழுவி எழுதப்பட்டது. ஆயினும், இந்நூலைக் கற்பதில் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் விருப்ப மிகும்படி களவழி, சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரத முதலிய நூற்களின் வருணனைகளும் இடத்துக் கேற்றபடி இந்நூலின்கண் சேர்த்து எழுதப்பட்டிருக் கின்றன. என் சிற்றறிவிற் கேற்றவாறு என்னால் எழுதப் பட்ட கற்பனைகளும் இதில் சில உள. கலிநீங்கு காண்டத் தில் நளனும் தமயந்தியுங் காணும் உருவெளித் தோற்றங் களும், அவற்றை முன்பின் சார்ந்துள்ள செய்திகளும் அங் ஙனம் என்னாற் கற்பித் தெழுதப் பட்டனவே யாகும். இங்ஙனமே இந் நூலின் இடை இடை மற்றுஞ் சில உள.

இந்நூலில் தன்மை, உவமை, உருவகம், தற்குறிப்பு, உயர்வுநவிற்சி முதலிய அணிகள் இடத்திற் கேற்றாற் போல இனிதின் அமைக்கப்பட் டிருக்கின்றன. அன்றி யும், இதில் இன்பம், அவலம், வீரம், நகை முதலிய சுவை களும் அமைந்திருக்கின்றன.

ஆதலின், இந்நூல் மாணவர்களுக்கும், மாணவிகளுக் கும் நன்கு பயன்படும் என்பது என் கருத்து.

இந்நூலின் முதற்பதிப்பு 1923ஆ இந்தியன் பப்ளி ஷிங் ஹவுஸ் என்னுங் கம்பெனியாரால் பதிப்பிக்கப் பெற் றது. அப்பதிப்புப் புத்தகங்கள் முழுதுஞ் செலவாய்விட் டன; ஆதலின், இவ்விரண்டாம் பதிப்பு ஓரியண்டல் பப்ளிஷிங் ஹவுஸ் கம்பெனியாரால் பதிப்பிக்கப் பெற்றது; பளபளப்பாகிய உயர்ந்த காகிதத்தில் புதிய அழகிய படங்களுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

இப்புத்தகம் அச்சாகையில் என்னுடைய மாணவர்களில் ஒருவரும், சென்னை, லூதரன் மிஷன் ஹைஸ்கூல் மாஜித் தலைமைத் தமிழ்ப் பண்டிதருமாகிய திருவாளர்-வித்துவான் - மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் ஒப்பு நோக்குதல் முதலிய உதவிகளைப் புரிந்தனர். அவருக்கு ஆயுளும், செல்வமும், அருங்கலைப் புகழும் நீடு பெருகுவனவாகுக.

அறிஞர்கள் இந்நூலை மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் பயன்படும்படி செய்வார்களென முற்றும் நம்புகின்றேன்.

கற்பா லுமிழ்ந்தமணி யுங்கழு வாதுவிட்டால்
நற்பா லழியுநகை வெண்மதி போனிறைந்த
சொற்பா லுமிழ்ந்தமறு வும்மதி யாற்கழூஉவிப்
பொற்பா லிழைத்துக்கொ ளற்பாலர் புலமைமிக்கார்.

—சிந்தாமணி

சென்னை
15-3-33

இங்ஙனம் :
கா. ர. கோவிந்தராஜன்.

9 JUL 1946
MADRAS

# பொருள் அடக்கம்


| | |
|---|---|
| சுயம்வர காண்டம் | ... 7—48 |
| கலி தொடர் காண்டம் | ... 49—80 |
| கலி நீங்கு காண்டம் | ... 81—110 |
| அரும்பதவுரை | ... 111 |



ஸ்ரீ

# நளன் சரிதை

---

## 1. சுயம்வர காண்டம்

### நிடத நாடு

பரதகண்ட மென்னும் பெயர் பெற்ற இவ்விந்து தேயத்தில் பண்டைக்காலத்தில் நிடதம் என்னும் நாடு ஒன்றிருந்தது. அது கங்கை கங்கை என்றுல கேத்துங் கடவுண் மாநதியின் பாய்ச்சலால் மிகவும் வளம் பெற்றது. அப்பேராற்றின் புனல், நெற்றுக்களையுடைய தென்னையின் ஓலைகளைப் போல நெருங்கிப் பாய்ந்து மதகுகளின் உட்கரையை உடைத்தலால் அங்கு மள்ளர்கள் பலருங் கூடிக் கால்களில் படலிட்டு, அவ்வெள்ளத்தின் வேகத்தைத் தணிப்பார்கள். அங்ஙனம் வேகம் தணிக்கப்பட்ட வெள்ளமானது, முன்பு மத மிகுந்து வழியி லுள்ளாரை வருத்திச் சென்ற யானை, அறிவுள்ள பாகன் தோட்டியாற் குத்தி மதத்தை அடக்கியபின் அமைந்து செல்லுதல்போல வாய்க்கால்களின் வழியாகச் சென்று பல நீர் நிலைகளை நிரப்பும். அங்குப் பட விடுகையில் குதித்துப் பாய்கின்ற புனல் ஒலியும், கரை காப்பாருடைய கலிப்பும், வெள்ளப் பெருக்கினைப் பலர்க்குந் தெரிவிக்கும் பொருட்டு அடிக்கப்படும் பறையின் சும்மையும் கட லொலியின் பெருமையினை அடக்கும். மாமனும் மருமகனும் போலும் அன்புடையனவும், மன்மதனும் அவன் தம்பியும் போன்ற தோற்றத்தை யுடையனவுமாகிய எருமைகளையும்; கயிலை மலையைப் போன்ற காட்சியையும், வயப் புலிகள் கண்

டஞ்சும் வன்மையையும் உடையனவாகிய எருதுகளையும் ஏரிற் பூட்டிக் கழனிகளில் வரால்கள் இரிய உழுகின்ற உழுநர்களின் தொகை கணக்கில் அடங்குவ தன்று.

அங்ஙனம் உழுகின்ற மள்ளர்களிற் சிலர் நிலமகளைத் தொழுது சேறமைந்த செய்களிலே செந்நெல்லின் சிறந்த விதைகளை விதைப்பார்கள். சிலர் பதமுற்ற நாற்றுக்களைப் பறித்துத் தக்கபடி நடுவார்கள். சிலர் முன்னரே 'எம் பகுதிக்கு உரியவர்கள் இவர்கள்' என்று கூறிவைத்த உழத்தியர்களை அழைத்துக்கொண்டு வயல்களுக்குச் செல்லுவார்கள்.

கழனிகளிலே வளமுடி நடுகின்றவர்களுடைய ஆர்ப்பினைக் கேட்டுச் சோலைகளிலே மயில்கள் மழையின் முழக்க மென்றெண்ணி அகவக் குயில்கள் வாயடங்கி வருந்தி யிருக்கும்.

வயலிலே களைகளைப் பறிக்க விரும்பிய உழவர்கள், உழத்தியர்களின் கண்களைப் போன்ற நீலோற்பலமும், கை, கால், முகங்களை ஒக்கும் செந்தாமரையும், வாயை நிகர்க்கும் செவ்வல்லியுமாகிய களைகளை யன்றி வேறு களை யில்லாமையின் அவற்றைப் பறிக்க மனம் வராதவர்களாய் அவர்களிற் சிலர் மருதப் பண்ணை எழுத்தின் வடிவு தோன்றப் பாடச் சிலர் அதனைக் கேட்டுக்கொண்டு உலாவுவார்கள்.

செந்நெற் பயிர்கள் கருக்கொண்ட பாம்பின் தோற்றம் போலக் கருக்கொண்டு, செல்வ முற்ற கீழ் மக்களை ஒப்பத் தலை நிமிர்ந்து நின்று, கலையறிவு நிரம்பிய மாந்தர்களை மான நென் முற்றி வணங்கி விளையும்.

மீன் கண்ணளவும் வெற்றிடம் இல்லாத அவ்வயல்களில் யானையை மறைக்கும்படி வளர்ந்த செந்நெற் பயிர்களும், முடியில் தேனிறுலின் திரட்சியைக் கொண்டுள்ள கரும்பின் காடுகளும் காண்பார் கண்களுக்குக் களிப் பூட்டி விளங்கும்.

அங்ஙனம் விளைந்த நெற்களை அரிவார் ஆர்ப்பும், அரிந்த நெற்களைக் களங்களிற் போர் செய்து எருமைகளால் அவற்றை மிதிப்பித்து வைக்கோலை நீக்கித் தூற்றித் தூயன வாக்கிப் பல பொலிகளாகக் குவிப்பார் ஓசையும், அவற்றைப் பண்டிகளில் நிரப்பிக்கொண்டு செல்வார் ஒலியும், விண்ணவர்களும் கேட்டு வியக்கும்படி மிகுந்து, மேகத்தின் இயலைப் புகழ்வது போலத் தோன்றும்.

சோலைகள் தம்முள் மரங்களும் செடிகளும் கொடிகளும் செறிந்து இருள் நிரப்பப் பெற்றிருத்தலின் சூரியனாகிய வானேற்றினால் துரத்தப்பட்ட இருட் கூட்டங்களாகிய யானைகள் ஓடித் தங்குதற்குரிய முழைஞ்சுகள் போலப் பொலியும்; வண்டினங்களின் ரீங்காரமாகிய பாடலினாலும், தடாகங்களினுடைய அலைகளின் ஒலியாகிய முழவொலியினாலும், தேரைகளின் ஒலியாகிய தாளத்தினாலும், மயில்களாடுதலினாலும் ஆடரங்குகளைப் போலவும், தம்பால் வந்தோரை மலர்முகங் காட்டிப் பறவைகளின் ஓசையாகிய இன்னுரை கூறிப் பச்சென்ற புற்றறை யாகிய மரகதப் பீடத்தி லிருத்தி இனிய நீரையும் அளித்து உபசரித்தலின் விருந்தினரைப் பேணும் நன்மனை போலவும் விளங்கும்.

அந்நாட்டுப் பெண்களெல்லாம் அருந்ததியைப் போன்ற கற்பும், திருமகளைப் போன்ற அழகும் வாய்ந்தவர்கள். ஆடவர்கள் எல்லாம் மன்மதனைப் போன்ற அழகுடையவர்கள்; குன்றுத ஊக்கமும் தளராத முயற்சியும் உடையவர்கள். அந்நாட்டு மக்களின் செல்வப் பெருக்கினைக் கண்டு குபேரனும் வியப் பெய்துவன். அவர்கள் தென்புலத்தாரைப் பேணித் தெய்வ வழிபாடு செய்து, விருந்தினரை யுபசரித்து, எளியருக் கிட்டுப் பின் உறவினரோடிருந்து உண்பார்கள். அவர்கள் ஓய்வுக்காலங்களை இன்னிசை கேட்டலிலும் நுண்ணிய நூற்பொருள்களை ஆய்தலிலுங் கழிப்பார்கள். இவ்வுலகத்திலுள்ள நாடு

களுக்குள் முதன்மையானதென அறிஞர் யாவருங் கூறும் படி யமைந்த அந்நாடு பொய்கைகளில் கயல்கள் புரளுத லாலும் நீலோற்பலங் கண் மலர்தலாலும், தாமரை கள் இதழ் விரிதலாலும் பூமடந்தையின் கண்ணென விளங்கும்.

## மாவிந்த நகர்

அந்நாட்டின் தலைநகரம் மாவிந்தம் என்பது. அஃது இனிமையும் நுண்பொருள் வளமுஞ் செறிந்த தமிழ்க் கவிஞர்களும், வடநூற் புலவர்களும் புகழ்ந்தது. அதனைச் சிலர் நிலமகளின் உயிர் இருக்கை என்பர். சிலர் திருமகள் உறையும் மலர் என்பர். சிலர் திருமால் தன் மார்பில் அணியும் மணிகள் வைத்த பொற்பெட்டி என்பர். சிலர் வானவர்களின் உலகங்களுக்கெல்லாம் மேலானதோர் உலகம் என்பர். சிலர் அந்நகரைச் சூழ்ந்த மதிலை உயர்வினாற் பனிவரை யொக்கு மாயினும், பனிவரை அம் மதிலைப் போல் சிற்ப நூலிற் கூறிய விதிப்படி அமைந்த தன்மையின் அதனை அம்மதிலுக்கு உவமையாகக் கூறுதல் தக்கதன் றென்பர்.

அம்மதிலைச் சூழ்ந்த அகழியினின்றெழும் நீராவிக் கூட்டங்களே மேகங்களாகி அம்மதிலின்மேற் றங்கிப் பிறகு மேலெழுந்து கங்கையில் வெள்ள மிகும்படி மழை பொழியும் என்றால் அவ்வகழியின் ஆழமும் அகலமும் கூறுதற்கெளியவாமோ? அந்நகரின் மாடங்களில் உள்ள கொடிகள் அசையும் தோற்றம், "செங்கதிர்ச் செல்வனே, நீ இவ்வுலக முழுதும் எவ்வளவு காலந் தேடினும் இந் நகரை ஒப்பதொரு நகரைப் பார்த்தல் முடியாது" என்று சூரியனைப் பார்த்துக் கூறித் தலையசைப்பது போலிருக்கும். வெண்சுதை தீட்டப்பெற்று மிகவுமுயர்ந்த மாடங்களின் வரிசைகள் இருபாலுந் திகழ இடையில் விசாலமாகிய தெருக்கள் அமைந்திருக்குங் காட்சி, முழுதும் பனி

தோய்ந்த பெருமலைகளின் வரிசைகளுக் கிடையில் விசால மாகிய யாறுகள் செல்வதுபோற் காணப்படும்.

அந்நகரின் ஒருபால் பொன்னும், மணியும் அவற்று லாகிய அணிகளும் விற்குங் கடைத்தெருக்கள் பல வரிசை வரிசையாக விளங்கும். ஒரு புடை பல வகைத் தானியங் கள் விற்கும் அங்காடி வீதிகள் அமைந்திருக்கும். ஒரு பக்கம் பருத்தி, பட்டு முதலியவற்று லாகிய ஆடைகளை விலை பகரும் ஆவண வீதிகள் தோன்றும். ஒரு சார் வேற்று நாட்டு வணிகர்கள் வந்து தங்கும் இடங்கள் பல பொலிந்து விளங்கும். பலவகைத் தொழிலாளர்கள் அந்நகரில் எங்குங் காணப்படுவார்கள். அங்குள்ள வணி கர்களின் செல்வம் கணக்கில் அடங்குவ தன்று.

அந்நகர மாதர்கள் நடையைக் கற்க அன்னங்கள் அவர்களைப் பின் தொடரும். அவர்களுடைய சொற் களின் இனிமையைப் பெறக் கரும்பு ஆலையில் ஆடும். அந் நங்கையரின் மறுவற்ற முகத்துக்கு மறு வகலாத மதியை உவமையாகக் கூற யார் மனந்துணிவர்? தாம் ஈனு முத்துக்கள் அம்மங்கையரின் பற்களை ஒவ்வாமையின் சங்குகள் அலறும். அம்மாதர்களின் கண்களுக்கும், கை கால்களுக்கும் தாம் ஒப்பாதல் வேண்டும் எனத் தாமரை கள் நீரினிடைத் தனித்தாளினின்று தவம் புரியும். அந் நகரின் பெண்கள் கலை யறிவினிற் கலைமகளும் வியக்கத் தக்கவர்கள். அவர்கள் கற்பினில் அருந்ததியும் போற்று தற் குரியவர்கள்.

அந்நகரின் ஆடவர்கள் எல்லாம் மன்மதனும் விழை தற்குரிய எழிலுடையவர்கள். வீரர்கள் எல்லாம் செவ் வேளை யொத்த போர்வலி மிக்கவர்கள்.

சிற்றருவிகள் பாயப்பெற்ற கருங்குன்றுகள் போலச் சுவடுகள் மறையும்படி மதம் பெருகும் யானைப் படை களும், பொற்குன்றுகள் போன்ற தேர்ப்படைகளும், அந் நகரின் அரசவீதியின் எங்கும் அணி அணியாக விளங்

கும். அந்நகரின் குதிரைப்படையிலுள்ள வாம்பரிகளின் விரைவினைக் கண்டவர்கள், "சூரியன் மிக்க விரைவுடன் உலகங்களைச்சுற்றி வருதற்குக் காரணம் இத்தகு கதியினை யுடைய வாம்பரிகள் பூண்ட தேரில் இவர்ந்து வருதலேயாம்," என்று கருதி, "செங்கதிர்ச் செல்வன் எங்கள் நகரின் எழுபரி பூண்ட தேரிலே என்றும் இவர்ந்து வருகின்றான்," என்று கற்பனையாகக் கூறப் பின்பு அனைவரும் அங்ஙனமே கூறுவாராயினர். காலனையுங் கலங்கச் செய்யும் ஆற்றலையுடைய காலாட்படை வீரர்களின் தொகைகள் கணக்கில் அடங்குவன அல்ல. அந்நகரினின்று வானிற் சென்ற வீரர்களுக்கே தேவர்கள் முதற் பந்தியில் விருந்தளிப்பார்கள்.

## நளன் இயல்பு

இங்ஙனம் பல நலங்கள் அமைந்த அந்நகரில் மன்னர் மன்னனாகிய நளன் வீற்றிருந்து தான் துயிலும்போதும் தன் ஆணை எங்கும் சென்று கிளியும் பருந்தும் ஒரு காட்டில் வாழும்படி நிலமுழுவதையும் பொதுவறப் புரந்து வந்தனன். அவன் அறிவு, அருள், அறம், ஆற்றல், வீரம், ஆண்மை முதலிய குணங்களால் திருமாலை நிகர்த்தவன்; கல்வி கேள்விகளிற் சிறந்தவன்.

"தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலப்பயப்பிற்
சேயொக்கு முன்னின் றொருசெல்கதி யுய்க்குநீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்குகேள்வி
ஆயப்பு குங்கா லறிவொக்கு மெவர்க்கு மன்னன்."

(கம்பநாடர்)

## தமயந்தியின் இயல்பு

அக்காலத்தில் விதர்ப்ப நாட்டிலே குண்டின புரத்திலிருந்து செங்கோலோச்சிய வீமன் என்னு மரசனுக்குத் திருமகளை யொத்த அழகு வாய்ந்த செல்வப் புதல்வி யொருத்தி யிருந்தனள். அவள் அன்பினுக்கும் அருளினுக்

கும் இருப்பிடமானவள். இயற்கை யறிவும் கல்வி யறிவும் நன்கமையப் பெற்றவள். அந்நங்கை நளனது எழிலையும் பெருமிதக் குணங்களையுங் கேட்டு அவனையே மணக்க வேண்டும் என்னும் விழைவு கொண்டனள்.

நளனும் அப்பூங்கொடியின் பொற்பினையும் சிறந்த குணங்களையுங் கேட்டு அப்பாவைக்கே தன் அன்பை உரிமையாக்கினன்.

நளன் அன்னத்தைக் காணுதல்

அவன் இளவேனிற் காலத்தில் ஒருநாள் இருபாலும் தன்னை நோக்கி நிற்கும் மங்கையர்களின் கண்களாகிய குவளைக்காட்டி னிடையில் பரிவாரங்களோடு சென்று, வெய்யோன் ஒளி தன்பால் சிறிதும் புகாதபடி மரம், செடி, கொடிகள் செறியப்பெற்றதும், இருளின் கூட்டம் என்றும் வெய்யோனுக் கஞ்சாமல் உறைதற்குரிய புகலிடம் போல் விளங்குவதுமாகிய ஒரு சோலையை யுடைந்து, அங்கொரு மண்டபத்திலே தங்கித் தன் மனமாகிய நூலிலே தமயந்தியின் தூய குணங்களாகிய நன்முத்துக்களைக் கோத்துக் கொண்டிருந்தனன்.

அப்பொழுது அம்மன்னர் மன்னனுக்கு முன்னே ஓரன்னம் தன்னுடைய சிறகுகளின் வெண்ணிறமாகிய நிலவினால் சோலையிலுள்ள இருள் நீங்கவும், தன் தாள்களின் செந்நிறத்தினால் பொய்கைத் தலம் சிவக்கவும் வந்து தோன்றியது. அவ்விறைவன் அந்த அன்னப் புள்ளின் சிறந்தமைந்த வனப்பினைக் கண்டு, பணிப்பெண்களில் ஒருத்தியை நோக்கி, 'நல்லாய், அந்த அன்னத்தைப் பிடித்துக் கொடு,' என்றான். உடனே சில சேடியர்கள் சென்று மயிற் கூட்டங்கள் அன்னத்தை வளைப்பது போல அவ் வன்னத்தை வளைத்துப் பற்றிக் கொணர்ந்து அம்மன்னர் மன்னன் கைக் கொடுத்தார்கள். கொடுத்தலும் அவ்வன்னம் அரசனைக் கண்டு கலங்கித் தன்னுடைய உறவாகிய அன்னங்களை எண்ணி வருந்தியது.

பிறகு அஃது அரசனை நோக்கி, "அறவாழி வேந்தனே, என்னைக் கொன்றால் உனக்குக் கொலைப்பாவம் உண்டாதலோடு நம்பினவர்களுக்குத் தீங்கிழைத்த பழியும் உளதாகும். திண்டோள் மன்ன, போர்க்களத்தில் உன்னை யெதிர்க்கு மன்னர்களை யழிப்பது உனக்கு முறைமை யாவ தல்லது நீ அருளுடன் காத்தற் குரிய என்னை யழிப்பது முறைமை யாகுமோ? 'மிக்க மூப்பினால் தளர்ந்து வருந்தும் என் தாய் தந்தையர்கள் யான் இறந்துவிடின் தங்களைக் காப்பாரில்லாமல் என் பிரிவுக்கிரங்கி உயிரைத் துறப்பார்களே! கருவுயிர்த்து வருந்தும் என் பெடை என் பிரிவுக்காற்றாது மனங்கரைந்து வாடுமே! நான் சிறிது நேரம் பிரிந்திருப்பினும் மனம் பொறாமல் வருந்தும் அன்புடைய பேடு, 'என் கொழுநர் எங்குச் சென்றார்?' என்று மற்ற அன்னங்களைக் கேட்டு, அவைகள் பதில் ஒன்றும் கூறாமல் கலுழ்தலைக் கண்டு யான் உயிர் நீத்ததனை உணர்ந்துகொண்டு தானும் உயிரை விட்டு விடுமே! நாங்கள் இருவரும் மாய்ந்த பின் குடம்பையிலிருக்கும் எங்கள் பார்ப்புகள், அந்தோ! இரை பெறாமல் வாடிச் சாகுமே!" என்று கூறிப் பதைத்துச் சோர்ந்தது.

அதனைக் கண்டவுடன் அருட்கடலாகிய அவ்விறைவன் கண்களின் நீர் பெருகிற்று. அன்னம் அதனைப் பார்த்து அக்காவலனது அருளை எண்ணி அகங்களித்தது. அவ்விறைவன் அன்னத்தை நோக்கி, "அஞ்சல், மட வன்னமே, உன் அழகிய நடையும், வஞ்சிக் கொடி போன்றவர்களாகிய பெண்களின் மென்மையாகிய நடையு மாகிய இவற்றுள் எது சிறந்தது என்பதை அவர்களையும் உன்னையும் ஒருமிக்க நடக்க விட்டுக் காண்பதற்கே உன்னைப் பிடித்தேன்; உன்னைக் கொல்லேன்" என்றான்.

அன்னம் அரசன் சொல்லைக் கேட்டு மனக் கலக்கம் நீங்கியது. பிறகு அஃது அவ்விறைவனை நோக்கி, "வேந்தர் வேந்தே, புகழ் நிறைந்த உனக் கிசைந்த பூங்கொடி

ஒருத்தி யிருக்கின்றனள். அவள் பெயர் தமயந்தி என்பது. அழகிலும், நற்குணங்களிலும் அவளுக்குத் திருமகளை யன்றி வேறு மடவாரை உவமை கூறுதல் பொருந்தாது,'' என்றது.

அன்னம் கூறிய அம்மொழி அம்மன்னன் செவியிற் புகுமுன்னே அப்பொற்றொடியாள் அவன் மனக்கோயிலிற் புகுந்து அதனைத் தன் வசமாக்கிக் கொண்டனள். அதனால் அக்கொற்றவன், ''எழின்மிக்க புள்ளரசே, நீ கூறிய பொற்பாவை யாருடைய பெண்? அவள் இயல்கள் எத்தன்மையன?'' என்று கேட்டான்.

''அவ்வாயிழை, உழவர்கள் ஏரை நடத்துகையில் கொழுவினது நுனியினாற் சாய்ந்த குவளை மலர்களிலிருந்து தேன் பெருகி நீர்மடையிற் பாயும் நீர்வள மிக்க விதர்ப்பநாட்டின் அரசனுடைய அருந்தவப் பேறு. அவள் கடல் பெறாத அமுதம். அவளுடைய வதன ஒளி மற்றை மடவாரின் முகமதியின் ஒளியை மழுங்கச் செய்யும் பகலொளியே. அவளுடைய கண்கள் மானையும், சேல் மீனையும், வாளையும், வேலையும் அஞ்சச் செய்யும். அவள் சொற்கள் பாகினு மினியன. அவளுடைய வாய் செந்நிறத்தினிற் பவழத்தின் எழிலைத் தோற்பிக்கும். அவ்வாயின் முறுவல் எத்தகைய மனக்கவலைக்கும் மருந்தாம். அவளது கூந்தலின் அழகு மிகவுஞ் சிறந்ததென்று கூறலாமே யன்றி அக் கூந்தலுக் கிணையாகச் சொல்லக் கூடிய பொருளொன்று மின்மையின் அதனை உவமையினால் விளக்குதல் முடியாது. 'அவளணியும் அணிகளுக்கு அவளால் அழகுண்டாகின்றது,' என்று கூறுதலமையுமே யன்றி அணிகளால் அவளுக்கு அழகு உண்டாகிறதென்று கூறுதல் அமையாது. நான்முகனாகிய சிற்பி மூவுலகத்தும் உற்ற எழிலை யெல்லாம் ஒன்றாய்த் திரட்டி அமைத்த ஒரு பொற்பாவையே அவள். அப்பாவை பெண்களுக்குரிய நாற் குணங்களையும் நான்கு படைகளாக

வும், ஐம்பொறிகளையும் நல்ல அமைச்சர்களாகவும், தன் காலில் இருந்தொலிக்குஞ் சிலம்பையே அழகிய முரசாக வும், கண்களையே வாட்படையாகவும் வேற்படையாகவும் கொண்டு, பெண்தன்மையாகிய அரசினை ஆளுகின்றனள். அவளுடைய மெல்லடிகள் தன்பாற் பொருந்தப்பெற்ற இடமே நல் இடமாகும்,'' என்றது அவ்வன்னம்.

அம்மொழிகளைக் கேட்ட மன்னர்மன்னனாகிய நளன், ''அன்னமே, நீ உரைத்த அந்நங்கையின் தன்மையை மீண்டு மீண்டுங் கேட்க எனக்கு விருப்பமுண்டாகின்றது. அப்பொற்றொடியாளோடு உனக்குச் சம்பந்தம் யாது?' என்றான்.

அன்னம், ''நன்னெறி வேந்தே! தாமரைப் பூவாகிய மனையிலே உறையும் நாங்கள் அவளது நடையைக் கற்கும் பொருட்டு அவளிடம் சென்றோம். பிறகு அவளை விட்டுப் பிரிய மனம் வாராமையின் அவளுடைய சிறந்த மனையி லுள்ள மயிற் கூட்டங்களைப் போல் அவளை எப்பொழு தும் பின் தொடர்ந்து செல்வோ மாயினோம்,'' என்றது.

நளன், ''அன்னமே! என்னுடைய மன உறுதி தளர்ந்தது. அப் பெண்ணரசியி னிடத்தில் எனக்கு அன்பு மிகுந்தது. என்னுடைய வாழ்க்கை இனி உன் சொல்லின் திறத்தது,'' என்றான்.

அதைக் கேட்டு அன்னம், ''திண்டோள் வேந்தே! நீ சிறிதும் அஞ்சுதல் வேண்டா. அந்நங்கை உனக்கே மண மாலை சூட்டும்படி செய்கின்றேன்,'' என்று விடை கொண்டு சென்றது.

## அன்னம் தமயந்தியின்பால் தூது போதல்

அவ் வோதிமம் சென்றபின் வேந்தர் வேந்தனாகிய நளன், ''அன்னம் எங்கும் தங்காமல் விரைந்து செல் லுமோ? சென்று அம் மதிநுதலைக் கண்டு, என் அன்பின் மிகுதியைக் கூறுமோ? கூறி, அவளுரைக்கும் விடையை

விரைந்து வந்து என்னிடம் உரைக்குமோ?'' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

நளன்பால் விடை பெற்றுச் சென்ற அன்னம் விரைந்து சென்று குண்டினபுரத்தைச் சேர்ந்து, தமயந்தியின் அருகடைந்தது. தமயந்தி அதனைக் கண்டு தன் விளையாட்டுகளை விட்டு, "ஓதிமவரசே, நீ இங்கு எதனைத் தேடுகின்றாய்?'' என்றாள். அன்னம் நான் இப்புவியின் கண் உள்ள நாடுகளின் வளங்களைப் பார்க்கக் கருதி, அங்ஙனமே பல நாடுகளின் வளங்களைக் கண்டு செல்லுகையில் நிடதநாட்டைக் கண்டு, அதன் தலை நகரமாகிய மாவிந்த நகரில் ஒரு சோலையிலே தங்கினேன். அங்கு அந்நாட்டின் மன்னனாகிய நளன் வந்தனன். அவனைக் கண்டவுடன் என் கண்ணோக்கு அவனது மேனியின் வனப்பாகிய கடலிலே சென்று மூழ்கியது. அவனைக் கண்ட பின், "மன்மதன் தன்னை மிக்க அழகுடையவனாகக் கருதுதல் வீண் செருக்கே,'' என்று துணிந்தேன். அவனுக்குத் திருமாலை யன்றி வேறெவரையும் இணையாகச் சொல்லுதல் கூடாது. அவன் செவ்விய மனத்தையும், குளிர்ந்த அருளையும், வாய்மையையும், செங்கோலையும் உடையவன். அவன் திண்டோள்கள் கொற்றவை என்றுங் குடிகொண்டிருக்கப் பெற்றவை. நங்காய், அம்மன்னனுடைய அழகினுக்கொப்பாம் அழகு வாய்ந்த பெண்ணொருத்தியிருப்பாளோ? இருந்தால் பார்ப்போம் என்று இந்நகரமொழிந்த மற்ற எல்லா இடங்களையும் சுற்றி வந்தேன். எங்கும் அத்தகைய பெண்ணைக் கண்டிலேன். அதனால், 'அவ்வேந்தன் பொற்பினுக் கேற்ற பொற்புடைய ஒரு பெண்ணைப் படைக்கும் ஆற்றல் நான்முகனுக் கின்று போலும்' என்று எண்ணினேன். இங்கு வந்து உன்னைக் கண்டபிறகு என்மனம் அவ்வெண்ணம் நீங்கப் பெற்றுக் களிப்பென்னுங் கடலுள் ஆழ்ந்தது. உனக் கேற்ற கொழுநன் அவனே. அந்நம்பிக்கேற்ற நங்கை நீயே,'' என்றுரைத்தது.

தமயந்தி அதன் மொழிகளைக்கேட்டு மன முருகித் தளர்வெய்தி, "வாவி யுறையும் மட அன்னமே, அவ் வேந்தர் நீ சொன்ன சொல்லின் வழியாக வந்து என் செவியினூடு புக்கு என் மனத்தைக் கவர்ந்து கொண்டார். அம்மன்னர் மன்னரை யன்றி யான் பிறரை மணம் புரியேன். நீ நிடதநாட்டுக்கு விரைவாகச் சென்று, அவ் வேந்தர்பால் எனக்குள்ள அன்பின் பெருக்கை உரைத்து, அவர் என்னை மணந்துகொள்ளும்படி செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்யின் உனக்கு என்னுயிரைக் காப்பாற்றிய புண்ணியம் உண்டாம்," என்றாள்.

அன்னம், "பாவாய், நீ அஞ்சற்க. அம்மன்னன் உன்னை மணந்துகொள்ளும்படி செய்கின்றேன்," என்று கூறித் தமயந்தியினிடம் விடை பெற்றுச் சென்றது.

## வீமன் சுயம்வரம் ஏற்படுத்தல்

அன்னஞ் சென்றபின் தமயந்தி களிப் பின்றி மிகவும் வாட்டமுற் றிருந்தாள். அவளது நிலைமையைக் கண்ட தோழியர்கள் நடுக்கமெய்தி அவளுடைய தாயினிடம் சென்று அவளது வேறுபாட்டைக் கூறினார்கள். அவ் வரசி அதனைத் தன் கொழுநனாகிய வீமனுக்குரைத்தாள். அவ் விறைவன் கருங்குழல் மாதர்கள் தங்கள் செங்கையினால் வெள்ளிய சாமரையை வீசவும், சங்குகள் ஒலிக்கவும் சென்று தமயந்தியின் மனையை அடைந்தான். வண்டுகள் ரீங்காரஞ் செய்யு மலர்க்குழன் மடந்தையாகிய தமயந்தி பூ மாலை சுமந்த கொடிபோல இடை துவள எழுந்து சென்று, தன் தாதையின் திருவடிகளில் வணங்கி நின்றாள். அம்மன்னன், மிக்க அழகானது பெருகி வழிதல் போலப் பிறை நுதலில் வெயர் வரும்ப நின்ற தன் மகளைக் கண்டு, அவளது வேறுபாட்டை ஆய்ந்துணர்ந்து, உடனே சுயம்வரம் ஏற்படுத்தக் கருதி, அவளுக்கு உபசார மொழிகளைக் கூறி, அவள்பால் விடைபெற்றுத் தன்னிடஞ்

சேர்ந்து, அச்சுயம்வரச் செய்தியை அரசர்களுக்குக் கூறும்படி தூதர்களை அனுப்பினான். பிறகு, 'இன்று ஏழா நாள் தமயந்தியின் சுயம்வரம்,' என்று நகரில் எங்கும் முரசறைந்து தெரிவிக்கும்படி வள்ளுவர்களுக்குக் கட்டளை யிட்டான்.

உடனே எல்லா நாட்டு வேந்தர்களும் குண்டின புரத்தில் வந்து கூடினார்கள். அவர்களுடைய பரிவாரங்களும், சேனைகளும் அந்நகர் முழுதும் பரவிப் பல கடல்கள் ஒருங்கு கூடினாற்போல விளங்கின. அங்ஙனம் வந்து கூடிய அரசர்கள் சோலைகளினுள்ளும், தடாகங்களின் கரையிலும் உறைந்தார்கள்.

### அன்னம் தமயந்தியின் விருப்பை நளனுக்குத் தெரிவித்தல்

இங்ஙனம் அரசர்களெல்லாம் கூடியிருக்க, அன்னம் சென்ற வழியை நோக்கி, தமயந்தி என்னும் பெயரையே கருதிக்கொண்டு, அவளை மணம் புரியவேண்டு மென்னும் விருப்பமாகிய சுழியில் மனத்தை ஓடவிட்டிருந்த நளன், தான் அவள்பால் தூதாக அனுப்பிய அன்னம் வானத்தில் மீண்டு வருதலைக் கண்டான். அப்போது அது யாது சொல்லப்போகின்றதோ என்றெண்ணி அவன் மனம்பதைத்தது. பிறகு அன்னம் அருகில் வர, அம்மன்னன், செல்வர்களின் முகத்தைப் பார்த்து அவர்கள் அருளாற் கூறும் இனிய சொல்லால் அவர்கள் மனக்கருத்தை ஆய்ந்து அவர்கள்பால் இரக்கும் வறியவர்களைப் போல் அன்னத்தின் முகத்தை நோக்கி, அதன் இன்சொல்லைக் கேட்டு, 'தமயந்தியின் கருத்து யாது?' என்று வினவினான். தமயந்தி கூறியவற்றை யெல்லாம் அன்னங் கூற, அரசன் அவற்றைக் கேட்டுக் களிகூர்ந்து, 'அன்னக் குலத்தின் அரசே, அழிகின்ற நிலையிலிருந்த என்னுயிரை நீ காத்தளித்தாய். அப்பொற்கொடிக்கு வாட்ட மொன்று மில்லையே?"

என்று கேட்டான். அவ்வெகின அரசு தமயந்தியினுடைய விழைவின் மிகுதியையும், அவள் வாட்டத்தையுங் கூற அவ்விறைவன் அதனைக் கேட்டுக் கேட்ட செவியின் வழியாக உணர்வு செல்லக் குழியிலகப்பட்ட யானையைப் போல அணையிற் சாய்ந்து கிடந்தான்.

## நளன் தமயந்தியின் சுயம்வரத்தை யறிந்து வீமன் நகருக்குச் செல்லுதல்

தமயந்தியின் சுயம்வரத்தைக் கூறும்படி வீமனுல் அனுப்பப்பட்ட தூதர்கள் வேந்தர் வேந்தனுகிய நளனது அரண்மனை வாயிலில் வந்து தங்கள் வருகையைப் பற்றி அவ்வாயிற் காவலருக் கறிவித்தார்கள். வாயிற் காவலர்களில் ஒருவன்சென்று அவர்கள் வரவை அம்மன்னனுக்கு அறிவித்து அவனது ஏவலின்படி அத்தூதர்களை அவ்விறைவன்பால் அனுப்பினுன். அத்தூதர்கள் சென்று சுயம்வரச் செய்தியைக் கூறக் காவலன் அவர்களுக்கு இன்மொழிகளைக் கூறிப் பல பரிசுகளை அளித்து, அவர்களை அனுப்பிவிட்டுப் பிறகு பாகனை விரைந்து விளித்து, "தேர் பூட்டுக," என்று கட்டளையிட்டான்.

பாகன் தேரில் வசம்பரிகளைப் பூட்டிக்கொண்டு வர, அம்மன்னன் அதிலிவர்ந்து, நால்வகைச் சேனைகளும் முன் செல்லச் சென்று, குண்டினபுரத்தை அணுகினுன்.

## இந்திரன் முதலிய நான்கு தேவர்கள் அந்நகருக்கு வந்து நளனைச் சந்தித்தல்

அதற்கு முன் நாரதமுனிவர், கையில் யாழையேந்திக் கொண்டு, இந்திரன் சபைக்குச் சென்ருர். இந்திரன் நாரதருடைய முகத்தை நோக்கி, "புவியிலுள்ள வீரர்களிலும், வெற்றியையுடைய மன்னர்களிலும் ஒருவரேனும் இப்போது விண்ணுட்டுக்கு வாராமலிருத்தற்குக் காரணம் யாது?" என்று கேட்டான்.

நாரதர், "தேவர் கோமானே, குண்டின புரத்தரசன் செல்வப்புதல்வி யாகிய தமயந்தியின் சுயம்வரத்திற்கு மன்னர்க ளெல்லோருஞ் சென்றிருக்கின்றார்கள். அம் மடமான் அழகைச் சுமந்திளைத்தவள்; வண்டுகள் எப்பொழுதும் பழகுங் கரிய கூந்தலை யுடையவள்; வீமன் குலத்துக்கோர் உண்மையாகிய விளக்குப் போன்றவள்," என்றார்.

அதைக் கேட்டவுடன் இந்திரன், எமன், வருணன், அக்கினி என்னு மூவருடனும் மற்றும் பல தேவர்களுடனும் விண்ணாட்டை விட்டுக் குண்டின புரத்தை வந்தடைந்தான். அக்காலை நளன் காலின் விரைவினுங்கடுகிய விரைவோடு தேரைச் செலுத்திக்கொண்டு வந்தான். இந்திரன் முதலிய தேவர்கள் நளனைக் கண்டு மிக்க வியப்பெய்தினார்கள். அவர்களுள் இந்திரன், "நான் ஆயிரங் கண்களைப் பெற்ற பயனைப் புவியில் வந்து இம்மன்னனது பேரெழிலைக் காணப்பெற்றதால் எய்தினேன்!" என்றான். தமயந்தி இம்மன்னர் மன்னனைக் கண்டபின் மற்றொருவருக்கு மணமாலை சூட்டுவாளோ?" என்று வருணன் கூறினான். "தமயந்தி இவ்வேந்தனுக்கு மணமாலையைச் சூட்டாளாயின் அவளழகின் மிகுதி பயனற்றதே," என்றான் அனற்கடவுள். "இவ்வேந்தர் வேந்தன் இந்நகரினுக்கு வந்தது தமயந்தியின் மண மாலையைப் பெறுதற்பொருட்டேயானால், நாம் மீண்டு போதலே அழகிதாகும்" என்றுரைத்தனன் தருமன். அதைக் கேட்டு வானவர் கோன், "இம்மங்கையின் மண மாலையைப் பெறுமற் சென்றால், தேவமாதர்கள் நம்மை அவமதிப்பார்களே! பின் அவர்கள் முகத்தை நாம் பார்ப்பது எவ்வாறு? அரக்கர்களை அழித்து நமக்குச் செல்வமும் சிறப்பும் அளித்த வேந்தனாகிய வீரசேனனைப் போன்றிருக்கின்றான் இம்மன்னன். ஆதலால், இவ்வேந்தன் வீரசேனன் மைந்தனாகிய நளனாய் இருத்தல்வேண்டும். இவன் தன்னை வந்

தடுத்துக் கேட்பவர்களுக்கு எதையும் மறுக்காமல் கொடுப்பவன் என்பதை நாம் பன்முறையுங் கேட்டுள்ளோம் அல்லவா ? ஆதலின், இவனையே உதவியாகப் பெற்று, அந்நங்கையை நம்மில் ஒருவர் மணத்தல் வேண்டும்,'' என்று கூறி, வருணன் முதலிய மூவருடன் நளனருகில் சென்றான்.

பிறகு இந்திரன் நளனை நோக்கி, "தாமரைப் போதுகள் மலரும்படி கடலில் தோன்றுஞ் சூரியனைப் போலக் கண்டோர் முகங்கள் மலரும்படி சேனையின் நடுவில் தோன்றும் உன்னை நாங்கள் நல்ல வேளையிற் கண்டோம் ! இவன் அழற் கடவுள்; இவன் கடலரையன்; இவன் தருமன்; நான் தேவர்க்கரசனாகிய இந்திரன். எங்களுக்கு உன்னாலாக வேண்டிய காரியம் ஒன்றுளது. அதனைச் செய்ய நீ மனமியைதல் வேண்டும்,'' என்றான்.

நளன் இந்திரனது விழைவு இன்னது என்பதை ஆய்ந்துணராமலே, அவனை நோக்கி, "ஐய, குறிப்பறிந்து ஈதலே கொடையாகும்; கேட்டபின் ஈதல் சிறந்த கொடையன்றென அறிஞர்கள் கூறுவார்கள். அங்ஙனமிருக்க, நீங்கள் ஒன்றைக் கேட்ட பின்னும் நான் கொடேனாயின், அதனினும் இழிவு எனக்கு வேறுண்டோ ? ஐந்தரு நிழலில் வீற்றிருக்குந் தேவர்களாகிய நீங்கள் என்னிடம் வந்து எனக்குப் புகழை வழங்கினீர்கள். நீங்கள் என்னுயிரைக் கேட்பினுந் தருவேன். உங்களுக்கு யான் செய்யவேண்டியதைக் கூறுக,'' என்றான்.

இந்திரன், "வண்டுகளுக்கு விருந்தாகத் தேனையளிக்கு மலர்த்தொடை வேந்தே! எங்கள் விழைவு உன்னாலன்றி முடியாது. எங்களுக்காக வீமன் திருமடந்தைபால் நீ தூதாகச் சென்று, அவள் எங்களிலே ஒருவருக்கு மாலை சூட்ட உதவி புரிதல் வேண்டும்,'' என்றான். அச்சொல் கூர்வேலினுங் கொடியதாய் நளனது செவி வழியாகச் சென்று நெஞ்சில் தைத்தது. அச்சொல்லைக் கேட்ட

வுடன் நளன் தளர்வெய்தினன். அதனால், அவன் மனம், "தேவர்கள் இட்ட கட்டளையைச் செய்து முடியாவிடின் நமது சொல் தவறுமே!" என்று அதைச் செய்வதிற் சென்றும், மீண்டும் தமயந்தியின்பா லேகியும் பாவில் அமைந்த நெய் குழல்போல இருபாலும் அலைந்து தடுமாறியது.

பிறகு அவன் இந்திரனை நோக்கி, "எல்லார் உள்ளக் கருத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காணவல்ல நீங்கள் என் கருத்தை அறிந்திருந்தும், 'தமயந்தியின்பால் தூதுபோக' என்று யாது குறித்துக் கூறினீர்கள்? உங்கள் சொல்லை மறுக்காமல் யான் சென்று கூறினும், முன்னரே என்னை விழைந்திருப்பவளாகிய அத்தளிரியல் சினங் கொள்ளாமல் என் சொற்கு இணங்கி உங்களில் ஒருவரை மணந்துகொள்ள மனமியைவளோ?" என்றான்.

அதைக் கேட்ட இந்திரன், "வேந்தே, சொன்ன மொழிதவறாத உன்னையும், பரதனையும், கார்த்தவீரியார்ச்சுனனையும் நினைத்தாலும் அவரவர்கள் நினைத்தவை முற்றுறும். அத்தகைய நீயே செல்வாயாகில், முடிதற்கரிய செயல் யாதுளது?" என்றான்.

நளன், "எதனையு முன்னே எண்ணிப் பிறகு செய்யத் துணிதல் வேண்டும். அங்ஙனம் நாம் முன்னே இவர்கள் விழைவு இன்னது என்பது ஆய்ந்தறியாது இவர்கள் சொல்வதைச் செய்து முடிப்பதாக ஒருப்பட்டுக் கூறி விட்டு, இப்பொழுது அதைப் பற்றி எண்ணுவதனால், நமக்கு இழுக்கே யுளதாகும். நாம் கூறியபடி செய்தலே தகுதியாம்," என்று துணிந்து, இந்திரனை நோக்கி, "தேவர் கோமானே, யான் உங்கள் ஏவலைச் செய்வதாக ஒருப்பட்டேன். இனி யான் அதனை மறுக்கிலேன். ஆனால், அத்திரு நகரின் காவலைக் கடந்து கன்னி மாடத்தினுக்குச் செல்லும் விதம் யாது?" என்றான்.

தேவர் கோமான், "உன்னை ஒருவருங் காணார். நீ செல்க," என்றான்.

### நளன் தேவர்களுக்காகத் தமயந்தியினிடம் தூது போதல்

நளன் உடனே அங்கிருந்து குண்டின புரத்தினுட் சென்ருன். அம்மன்னனுக்கு அந்நகரம் யாவரும் புகழ்தற்குரிய வாயில்களாலும், இலக்கணத்தின்படி அமைக்கப்பட்ட நடுவிடத்தாலும், திக்குகளைத் தமக்குள் அடக்கினவற்றைப் போலத் தோன்றுந் தெருக்களாலும் விண்ணுடு புவியில் வந்துற்றது போலத் தோன்றியது. அக்கோமான் அந்நகரின் காட்சிகளை நோக்கிக் களிகூர்ந்து, தமயந்தியின் கன்னி மாடத்தை அடைந்து தமயந்தியை நோக்கினுன். தமயந்தியும் நளனைப் பார்த்தாள். அவ்விருவரும் தத்தம் மனமாகிய சுவரில் எழுதி வைத்திருந்த சித்திரத்தின் உண்மை வடிவை நேரிற் கண்டனர். தமயந்தியின் கண்களாகிய பூங்குவளை மலர்களில் நளனுடைய கண்களாகிய செந்தாமரைப் போதுகள் மலர்ந்தன. நளனது கண்களாகிய செந்தாமரைப் பூக்களிலே தமயந்தியின் கண்களாகிய பூங்குவளைப் போதுகள் மலர்ந்தன. நளனது கண்கள் தமயந்தியின் பேரெழிலாகிய கடலிற் படிந்து கரையேறமாட்டாமற் மூழ்கின. நளனுடைய பெருவனப்பாகிய கடலிற் படிந்த தமயந்தியின் கண்களும் அன்ன நிலையையே யடைந்தன. தமயந்தி நளனை நோக்கி, "ஐய, நீவிர் ஒருவராலும் கடத்தற்கரிய காவலைக் கடந்து, எங்கள் கன்னிமாடத்திற்குள் வந்தீர். நீர் மந்திர வித்தைக்குத் தலைவரோ? தேவரோ? யாவர்? கூறுக" என்ருள்.

நளன், "மாதராய், யான் விஞ்சைக்கிறைவனு மல்லேன்; தேவனுமல்லேன்; என்னை ஒருவரும் அறியாதபடி தேவர்கள்பால் வரம் பெற்று நின்பால் அவர்களின் தூதனுக வந்தவன். என் நாடு நிடதம் என்பது, என் பெயர் நளன் என்பது," என்ருன்.

தமயந்தி, "தேவர்கள் யாது கருதி என்பால் உம்மைத் தூதாக அனுப்பினர்கள்?" என்ருள்.

நளன், "மென்மொழியாய், யான் சொல்வதனை நீ இகழாமல் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஐந்தரு நிழ

வில் அமரர் கோவாய் வீற்றிருக்கும் இந்திரனும், காலங் கண்டு உயிர்களைக் கவரும் எமனும், எல்லா வைதீக காரியங்களுக்கும் இன்றியமையாதவனாகிய அழற்கடவுளும், உலகம் புரக்குங் கடற்கிறையாகிய வருணனுமாகிய இந் நான்கு தேவர்களும் உன் மணமாலையை அடைய விரும்பி வந்திருக்கிறார்கள். அவர்கள் அமிர்தத்தை உண்டு நெடுங்காலம் உயிர்வாழ்பவர்கள். அமலர் தவம் புரிந்து அடைய விரும்பும் விண்ணுலகத்தின்பத்தை நீ அவர்களில் ஒருவரை மணந்து கொண்டால் எளிதில் அடையலாம். நீரில் தோன்றி மறையும் குமிழைப் போலத் தோன்றிச் சிறிது காலத்தில் அழிந்துவிடும் மக்களின் இன்பம் மிகவும் அற்பமானதே. அவ்வானவரில் வானவர் இறையை மணந்துகொள்ளுதியெனின், நீ வணங்குந் தேவர்களெல்லாம் உன்னை வணங்க வீற்றிருப்பாய். என் உரையை இகழாது ஏற்பாய் என மீண்டும் ஒரு முறை உனக்கு வற்புறுத்திக் கூறுகின்றேன்," என்று கூறினான்.

அவற்றையெல்லாம் கேட்ட தமயந்தி, மனமிகச் சோர்ந்து, கண்ணீருகுத்து, "வேந்தர் வேந்தரே, பல வாத்தியங்கள் முழங்கவும், சங்குகள் ஒலிக்கவும் இச்சுயம்வரத்தை ஏற்படுத்தியது உமக்காகவே யாகும். உம்மையன்றி என் மனம் பிறரொருவரையும் விழைகிலது. எல்லார் உள்ளத்தையும் உள்ளங்கை நெல்லிக் கனியென உணரும் தேவர்கள் என் உள்ளக் கருத்தை உணரார்களோ? நாளை விண்ணவர்களும் நீரும் சுயம்வர மண்டபத்திற்கு எழுந்தருள்க," என்றுரைத்தாள்.

நளன் தமயந்தியின் கருத்தைத் தேவர்களிடங் கூறல்

நளன் தமயந்தியின் சொற்களாகிய அமுதத்தைப் பருகிக் களி கூர்ந்து, தேவர்கள்பாற் சென்று, தான் தமயந்தியினிடம் போய்ச் சொல்லியவற்றையும் அவள் கூறியவற்றையும் கூறினான். அவற்றைக் கேட்ட அத்தேவர்களில், இந்திரன், "வென்றி வேல் வேந்தே, நீ உண்மைக்

குறையுள். தமயந்தியின்பால் உனக்குள்ள அளவிடற்கரிய பேரன்பினை எங்கள் பொருட்டாக மாற்றிச்சென்று உரைத்தனவற்றை எல்லாம் நாங்கள் மறைந்திருந்து கேட்டோம். பொங்கி யெழுந்த ஆசையை நீ ஒரு நொடிப் பொழுதில் அடக்கினை. இங்ஙனம் புரிதல் பிறர்க்கு அரிதே. நீ எங்கு யாகம் புரியினும், யான் அங்கு வந்து அவி யுண்பேன்,'' என்றான். அக்கினி தேவன், "நீ விரும்பிய இடத்தில் நெருப்பைப் பெறுவாய்; முடிவில் ஒளி மிக்க உலகை அடைவாயாக,'' என்று வரமளித்தான். வருணன், "நீ வேண்டிய விடத்தில் நல்ல நீரையும், பூவையும் பெறுவாய்,'' என்று வரங்கொடுத்தான். யமன், "உன் மனம் என்றும் அறத்தில் நிலை பெறுவதாக; நீ வேண்டிய விடத்தில் உணவைப் பெறுவாயாக,'' என்று வரந்தந்தான்.

இணை யில்லாத புகழையுடைய வேந்தனாகிய நளன் அவர்கள் அளித்த அவ்வரங்களைப்பெற்று, அவர்களுடன் சென்று சுயம்வரத்துக்கு வரும் மன்னர்களின் பொருட்டு வீமனால் அமைக்கப்பட்ட இடத்தின் ஒருபால் தங்கினன். வையம் பகலை இழக்கவும், பொய்கைகளும், நீண்ட கழிகளும் புட்களை இழக்கவும் வெங்கதிரோன் மெல்லச் சென்று மேல்திசைக் கடலை அடைந்தான்.

## மாலைப்பொழுது இராப்பொழுதுகளின் வருணனை

திரையை நீக்கி அரங்கின் வந்து நடித்த கூத்தன் சென்றவுடன் மீண்டுந் திரையை யிடுதல்போல, இருளை நீக்கி வானரங்கில் வந்து நடித்த சூரியன் செல்ல, இருளானது உலகைச் சூழ்ந்தது. அந்திப் பொழுதாகிய மன்னன், மல்லிகையாகிய வெள்ளைச் சங்கை வண்டுகள் ஊதவும், மன்மதனாகிய மெய்க்காவலன் கரும்பாகிய வில்லையும் மலர்களாகிய அம்புகளையும் ஏந்தி மெய்யைக் காத்துவரவும், மெல்ல நடப்பானாயினன். இங்ஙனமாகிய

மாலைப் பொழுது வேறு நாட்டிற்குச் சென்றிருந்த பேரரசர்களின் வருகையைக் கேட்டு அஞ்சியிருக்கும் சிற்றரசர்களைப் போல இனி இரவு வரும் என்றஞ்சி மலர்க்கண் நீரரும்ப நின்றது.

இரவாகிய பேரரசன் கையிலகப்படாமல் ஓடிவிடுதற்குரிய உபாயத்தை ஆய்ந் தறிந்துகொண்டு அந்திப் பொழுதாகிய சிற்றரசன் நகைத்தாற்போல வானத்திற் பிறைச்சந்திரன் தோன்றினன்.

கூட்டிய மைபோன்ற கருநிறத்தினையுடைய இரவாகிய பேரரசன் அந்திப் பொழுதாகிய சிற்றரசனை ஓட்டி உலகினைக் கைப்பற்றினன். அதைப் பார்த்திருந்த பிறைச்சந்திர னாகிய வானக மன்னன், தன் கதிர்களாகிய அம்புகளைச் சொரிந்து, அவ்விரவாகிய பேரரசனைச் சிதறி ஓடச் செய்து உலகத்தைத் தான் கைப்பற்றிக் கொண்டான். வான்மதிச் செல்வனுடைய கதிர்களாகிய கணைகளின் வெம்மை தாக்குதலால் வானமாகிய மங்கையின் யாக்கையில் கொப்புளங்கள் உண்டானாற்போல உடுக்குலங்கள் தோன்றி விளங்கின.

பிறகு தண்கதிர்ச் செல்வன் மறைய, இரவானது அள்ளிக்கொள்ளுதற் கேற்ற தகுதி யுடையதாயும், தீக்கொள்ளியினாலும் சிதைக்க முடியாததாயும், உலக முழுதும் பரவிப் பொதுமகளிர் தம் மனம் போலக் கருவடிவமிகுந்து பொலிந்தது.

இங்ஙனமாகிய இரவின் இடை யாமத்தில் கடுஞ் சொற்களையும் பறை ஒலிபோன்ற குரலையு முடையவர்களும், கச்சையை அரையில் இறுகக் கட்டி வேலையும்வாளையும் கையில் ஏந்தியவர்களுமாகிய இடை யாமக் காவலர்கள், அவ்விருளிலே வேறு சில இருள்கள் உருக்கொண்டெழுந்தாற்போலத் தோன்றி நகரத்தைக் காவல் புரியலானார்கள். யானைகள் யாவும் காவலிடத்தை யடைந்தன. பால்போலும் இனிய பண்களை இசைக்கும் யாழ்கள்

உறையிற் புக்கன. வண்டுகள் மலர்களிற் புகுந்தன. உலகத்திலுள்ளவர்கள் யாவரும் துயிலில் அமர்ந்தார்கள்.

ஊனைத் தின்று அதனாற் கொண்ட களிப்பால் அகத்து மூச்சுப் புறத்துத் தோன்றும்படி அமைந்த பேயும், தன் சொல்லும் கையும் உடலும் சோரவும், வாயினின்று உணவு கீழே விழவும் நின்று துயின்றது.

### சூரியன் உதித்தலும், தமயந்தியின் சுயம்வரமும்

மறையவர்களின் கைம்மலரும் அழகிய குமுத மலரும் குவியவும், மாந்தர்களின் கண்களும் தாமரைப்போதும் மலரவும், மதி தனது தண் ஒளியின் சிறப்பை இழக்கவும், இருள் பிளவு படவும் சூரியன் குணக்குத் திசையில் வந்து தோன்றினான். காலை முரசும், வலம்புரிச் சங்குகளும் ஒலித்தன.

மன்னர் பிரானாகிய வீமன் கட்டளையால் குண்டின புர முழுது மணமுரசு அறையப்பட்டது. அதைக் கேட்டு அந்நகர மாந்தர்களும், சுயம்வரத்தின் பொருட்டு அந் நகரில் வந்திருந்த மன்னர்களும் களி கூர்ந்தார்கள்.

உடனே அந்நகர மாந்தர்களிற் சிலர் அரசப் பெருந் தெருவில் மணங் கமழும் தாறுகளையும் பாளைகளையும் உடைய கமுக மரங்களையும், கருப்பங்கழிகளையும், அழகு மிக்க வாழை மரங்களையும் நட்டனர். சிலர் கதிர்களைப் பரப்பி மணிகளைப் பதித்த நெடுங் கொடிகளை வான மளா வும்படி கட்டினர். சிலர் சேணுற உயர்ந்த தோரணங் களை நாட்டினர். சிலர் ஒளி வீசும் முத்து மாலைகளை அணிந்த பொற்குடங்களை வரிசையாக வைத்தனர். சிலர் வண்டுகள் படிந்து தேன் நுகரும் மலர் மாலைகளைத் தொங் கக் கட்டினர். சிலர் தூண்களின் உறையைக் கழித்து அவற்றிற் பதித்துள்ள மணிகளின் மாசு துடைத்தனர். சிலர் நிலத்தைப் பெருக்கி வாசனை மிக்க சந்தனக் குழம் பால் மெழுகிக் குளிர்ந்த மூலைகளையுடைய பாலிகைகளை

வைத்தனர். சிலர் இந்திரன் வில் எனத் தோன்றும்படி சந்தனப் பொடிகளையும் பலவகை மணிகளின் பொடிகளை யும் தூவினர். சிலர் மணிகளிழைத்த பொன் தகளிகளில் நறுநெய் பெய்து விளக்குகளை ஏற்றினர். மற்றும் அந் நகர மாந்தர்கள் மிகவும் உயர்ந்த மாடங்களின் முகப்பில் அகிற்புகையை இட்டார்கள்; சூரியன் ஒளி மறைந்து தண் ணொளி பரவும்படி முத்துப்பந்தர்களை அமைத்தார்கள். சிலர் மதியின் கதிரை நூற்று அமைத்தாற் போன்ற முக படாம் அணிந்த நெற்றியை உடைய குதிரைகளுக்குக் கடி வாளம் பூட்டி கல்லணை முதுகில் இட்டு, அணிசெய்து வரிசையாக நிறுத்தினர். சிலர் யானைகளைப் பலவகை யாக ஒப்பனை செய்து, கோமறுகில் நிறுத்தினர். சிலர் எழில் அமைந்த கொடிஞ்சியையுடைய தேர்களில் வாம் பரி பூட்டிக் கைபுனைந்து, அணியாக நிறுத்தினர். மாதர் கள் செவ்வரி பரந்து குளிர்ந்து நீண்ட கண்களில் மையைத் தீட்டி, மார்பில் பிறைவடமணிந்து, காரெனக் கறுத்து நீண்ட கூந்தலில் பூ மாலை புனைந்து, பொன்னுடை யுடுத்து நுண்ணிய இடையில் மணிகளிழைத்த மேகலை யணிந்து, சில்லரிச் சிலம்புகளைக் காலிலிட்டு, கையில் பொன் வளை யணிந்து, தோள்களில் சந்தனக் கோலம் எழுதி, தாமரை மலரைப் போன்ற மெல்லடிகளில் செம்பஞ்சுக் குழம்பு பூசி, முத்து மாலைகளைக் கழுத்திலிட்டுப் பிறை நுதலில் திலகமிட்டு, தேவமாதர்களும் அழகில் தோற்கும்படி விளங்கினார்கள்.

தாளவொத்துத் தப்பாமல மத்தளம் ஒலிக்கப் பரத்தை மாதர்கள் சில இடங்களில் நாட்டிய மாடினார்கள். சிலர், கழுகன்ன மென்மிடற்றின் இசையை எழுப்பிப் பாடினர். சிலர் காந்தண்மலரின் இதழ்களைப் போன்ற மெல்லிய விரல்களினால் நரம்புகளைத் தடவி, வீணை வாசித்தனர். சிலர் செவ்வல்லியின் அரும்பைக் குவித்தாற் போல வாய் நெரித்துக் குரவைப் பாடல்களைப் பாடினர். சிலர் தாமரை

மலர் போன்ற கைகளைக் கொட்டிக் கை வளைகளும், காற் சிலம்புகளும் ஒலிக்கக் குரவை* கூத்தாடினர்.

தமயந்தியின் சுயம்வரத்தைக் காணுதற்பொருட்டு அந்நாட்டு மாந்தர்களிற் சிலர் இளஞ்சூரியனைப் போல ஒளி பரப்பும் மணிகள் பதித்த சிவிகையில் வந்தனர். சிலர் வண்டுகள் மொய்த்து ஒலிக்கும்படி மதம் பொழி வனவும், முக படாத்தை யுடையனவும், மலைகள் கால் பெற்று நடப்பன போன்றனவுமாகிய யானைகளில் ஏறி வந்தனர். சிலர் திருந்திய சுழிகளை உடைய குதிரைகளைப் பூட்டிய தேரி லிவர்ந்து இளஞ்சூரியர் பலர் ஒருங்கு திரண்டு வந்தாற்போல வந்தனர். சிலர் வானத்திற் பறந்து செல்வன போலப் பூமியிற் கால் படாமல் தாவிச் செல்லுங் குதிரைகளில் ஏறி வந்தனர்.

அந்நகர மாதர்கள் பொதிய மலையில்தோன்றிய நறிய சந்தனச் சாந்தைப் பூசி, மது நிறைந்து மணங்கமழும் மலர் மாலைகளை மஞ்சென விளங்கும் தம் குழலிற் சூடி, மலர்ந்த முகத்துடன் விருந்தினரைஎதிர்க்கொண்டழைத்து, இன் மொழிகளால் உபசரித்து, எளியோர்களுக்கும் விருந் தினர்களுக்கும் இன்னடிசில் இட்டு மகிழ்ந்தார்கள். சில மாந்தர்கள் யானைகளை மதிற் புறத்திலே கொண்டு போய் நிறுத்தினார்கள். சிலர் நாழிகை வட்டிலால் தமயந்தியின் சுயம்வரம் நடக்கும் நேரத்தை அறியலாயினர்.

மன்னர் மன்னனாகிய வீமன், வேந்தர்களை எதிர் கொண்டு உபசரித்தற்பொருட்டுச் சுயம்வர மண்டபத் தைப் பரிவாரங்களுடனும் அமைச்சர்கள் முதலியவர்களு டனும் வந்தடைந்தான். மன்னர்கள் எல்லாரும் மார்பின் மாலைகள் அசையவும், முடிகளின் ஒளி எங்கும் பரவவும் வந்து, சுயம்வர மண்டபத்தை யடைந்தார்கள். தமயந்தி

---

*குரவையாவது :—காமமும் வெற்றியும் பொருளாகக் கொண்டு, மாதர்களில் எழுவரேனும், ஒன்பதின்மரேனும் கைபிணைத் தாடுவது.

யின் மணமாலையைப் பெறுதற்குரிய நல்வினையையுடையவனுகிய நளச் சக்கரவர்த்தியும் வந்து அம்மன்னர்களின் இடையில் உடுக் குலங்களின் நடுவண் அமைந்து விளங்கும் சந்திரனைப்போல வீற்றிருந்தான். பிறகு இந்திரன் முதலிய தேவர்கள் நால்வரும் நள னுருவங் கொண்டு இயல்பினமைந்த மாமதியுடன் வேறு நான்கு மாய மதிகள் வந்தமர்ந்தால் என்ன அவனுக்கு முன் பக்கத்தில் வந்தமர்ந்திருந்தார்கள்.

பிறகு வீமன் தமயந்தியை அழைத்து வரும்படி தமயந்தியின் தோழிப் பெண்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்கள் சென்று அதனைத் தமயந்தியின் தாய்க்குத் தெரிவித்தார்கள். அவ்வரசி தமயந்தியை நீராட்டி ஒப்பனை செய்யும்படி தோழியர்களுக்குக் கட்டளை யிட்டனள். தோழியர்கள் கங்கையினின்று கொண்டு வந்து வாசப் பொடிகள் கலந்த நீரினுல் தமயந்தியை நீராட்டினுர்கள். தமயந்தியின் வேல்போன்ற கண்களில் மை தீட்டி, "இஃதிளம் பிறை யன்று; நுதலே" என்று குறிப்பார்போல நுதலில் திலகமிட்டுப் பொன்மேனியில் வாசனைப்பொடி பூசி, அழகினுக் கழகு செய்வார் போல ஆடையணிகளால் அவளை ஒப்பனை செய்தார்கள்.

இங்ஙனம் தம் தோழியர்களால் ஒப்பனை செய்யப்பட்ட தமயந்தி பெண் மயிலைச் சூழ்ந்து வரும் பெண்மான்களைப் போல் தோழியர்கள் தன்னைச் சூழ்ந்துவர, மன்னர்களின் கண்களாகிய செந்தாமரை மலர்கள் நன்கு மலரச் சுயம்வர மண்டபத்திற்குட் சென்றுள். அங்ஙனம் மன்னர்களின் விழித்தாமரை பூத்த மண்டபத்தில் தமயந்தி சென்ற தோற்றம், மின்னலை ஒத்த ஒளியையும், சிவந்த தாள்களையும் உடைய அன்னம் செங்கமலப் பொய்கை வாய்ப் போவதே போன்றது.

மன்னர்கள் யாவரும், "இவ்வெற்றி வேற்கண்ணுள் திருவருள் வாய்க்கப் பெறுதற்காம் நல்வினை யுடையார்

நம்மில் யாரோ?'' என்றேக்கங் கொண்டு நோக்கி இருந்தார்கள்.

தோழியர்களில் ஒருத்தி மண மாலையைக் கையில் ஏந்திக்கொண்டு அருகில் நிற்கத் தமயந்தி அம்மண்டபத்தின் இடையில் நின்ருள். தமயந்தியின் தோழியர்களுட் சிறந்தவளும் கலையறிவு முதலியவற்ருல் கலைமகளை ஒப்பவளுமாகிய ஒரு தோழி அம்மண்டபத்தில் வந்துள்ள மன்னர்களை முன்னே தனக்குள் நன்கு தெரிந்துகொண்டு தமயந்திக்கு முன் நின்று, அம்மன்னர்களை ஒவ்வொருவராகக் காட்டி, அவர்களின் வமிசம், பெயர், வளநாடு முதலியவற்றைக் கூறுவாளாயினள்:

"எம்மிளவரசி, இவ்வெற்றி வேல் மன்னன், காவேரி யாற்றின் புது வெள்ளத்தினீர் கமுக மரத்தின் உச்சியினைத் தடவிச் செல்லும் வளத்தினை யுடைய சோழ நாட்டு வேந்தர் வேந்தன்.

"தோகாய், இத்திண்டோள் மன்வன், முன்னொருகால் மேரு மலையைச் செண்டினலடித்துத் திரித்த பேராற்றலை யுடைய பாண்டியன்.

"மலர் விழியாய், இவ்வுலகம் பொருதோள் அரசன், தன் மார்பின் முத்து மாலைகளைப் போலக் குன்றுகளில் அருவி பாயும் சேர நாட்டு வேந்தனுகிய விற்கொடிச் சேரன்.

"பொற்றெடி, இக்குன்றுறழ் தோள் மன்னன், இராவணனைச் சிறையிலிட்டு, அவன் பொருட்டுத் தன்னை வந்து எதிர்த்த அரக்கர்களை யெல்லாங் கொன்று தன் பாணங்களைக் கடலில் அலம்பியவனும், தேவ விருடியாகிய நாரதருக்கும் விசுவாவசு என்னுங் கந்தருவனுக்கும் இசைப் போர் நடந்தபோது தலைவனுக வீற்றிருந்தவனும், யது குலத்தில் தோன்றியவனுமாகிய பெரும் புகழிறைவன்.

"கருங்குழலாய், இந்நெடும்புய வேந்தன், நாரையின் பார்ப்புச் செங்கழுநீரின் அரும்பைக் கண்டு பாம்பின் பசுந்தலை என்றஞ்சி வருந்தப் பெண்ணுரை இரவெல்லாந் தாலாட்டும் வளப்பத்தினையுடைய குரு நாட்டின் கொற்றவன்.

"கிளி மொழியாய், இக் கோவிளங்குமரன், தாமரை மலரில் சங்கீன்ற முத்தைத் தாமரைக் கொடி தன் இலையினுல் ஏந்திக் கொள்ளும் செழுமை வாய்ந்த மத்திரத்தரையன் மைந்தன்.

"அழகிய சாயலாய், இவ்வரசிளங்குமரன், ஆலையினின்று பாயும் கருப்பஞ்சாற்றினுல் நன்ருய் ஓங்கி வளர்ந்த செந்நெற் பயிர்களின் பசிய தாள்களிலிருந்து வரும் பால், எருமைகளின் கடை வாயிலே ஒழுகும் மச்ச நாட்டிறைவன் மகன்.

"நுண்ணிடையாய், இம்மதிக் குடை மன்னன், அழகிய குவளை மலரைக் கௌவிய எருது, வண்டு பாடத் தொடங்கிய பண்ணைக் கேட்டுக் கொண்டு அம் மலரை உண்ணுமல் நிற்கின்ற அவந்தி நாட்டின் வேந்தன்.

"மென்மலரடியாய், இக்கதிர் வேற் காளை, மீன் பிடிக்கத் தன்னிடம் வைத்த இரை தன்னை விட்டு நீங்கும்படி மிகவும் உயர்ந்த தூண்டிலானது மடலையுடைய கமுக மரத்தினது செவ்விய பூவிதழ்களைக் கிழிக்க அவற்றினின்று பெருகிய தேன் செந்நெற் பயிர்களின் பசிய இதழ்களிற் பாயும் பாஞ்சால நாட்டின் கோமான்.

"தேன் மொழியாய், இவ்விறல் வேன் மன்னன், அன்னம் ஒலி செய்து எழுப்ப எழுந்து, தாமரையையுடைய கழனிகளில் செந்நெல்லை அறுக்கும் உழவர்கள் இளையாமையின் வன்முதுகில் அரிவாளைத் தீட்டும் வளப்பத்தினையுடைய கோசல நாட்டிறைவன்.

"சீறடியாய், இவ்வாட்டடக்கை மன்னன் செந்தாமரைப் போதுகள் தீ எரிதல் போல் மலர, அவற்றில்

மொய்த்துக் கொண்டிருந்த வண்டுகள் அத்தீயினின்று எழும் புகை போல மேலே பறந்து போகும் செழுமை வாய்ந்த மகத நாட்டு மன்னன்.

"மான் விழியாய், இவ்வண்முகிற் கையான், சங்குகளின் பிள்ளைகள் பவளக் கொடிகளின் முனைகளால் இடறப் பட்டுக் கழியில் விழ, கடல் வந்து, 'அந்தோ!' என்று இரக்கமுற்றுத் தன் திரைக்கரத்தால் எடுக்கும் நல்லியலமைந்த அங்க நாட்டுப் புரவலன்.

"பனிமொழியாய், இத்தேர் வேந்தன், காளைப் பருவத்தினையுடைய வாளை மீன்கள் எருமைகளை எழுப்ப, அவை தாமரைக் கொடிகளின் கூட்டத்தை அழித்துப் பறவைகளையும், வண்டுகளையும் பறந்தோடும்படி செய்யும் நீர் வளத்தினையுடைய கலிங்க நாட்டுக் காவலன்.

"வளைக்கையாய், இவ்வடற்கரியரையன், சேல் மீன்கள் ஆழியின் திரைகளால் கரைக்குக் கொண்டு வரப் பட்ட முதலைகளைத் தீண்டிச் சென்று கங்கை நீரில் மூழ்கும் வளத்தினையுடைய கேகய நாட்டின் கோமான்.

"முகிற் குழன்மானே, இக்குரைகழல் வேந்தன் மிக்க நீரையுடைய பெரிய குளங்களில் வள்ளைக் கொடிகளின் மேல் எகும் அன்னங்கள் கயிற்றின்மேல் நடந்து செல்லும் தொம்பரச்சிகளைப் போலத் தோன்றும் வளம் அமைந்த காந்தார நாட்டுக் காவலன்.

"மென்மொழியாய், இவ்விறல் வேந்தன், பொய்கைகளில் சங்கங்கள் தம்மிடத்தை விட்டுப் போக, அவற்ருல் அசைவுண்ட தாமரைப் பூக்களால் சொரியப்பட்ட புதிய தேன் பாய்ந்து நெற்பயிரை விளைவிக்கும் செழுமையினையுடைய சிந்து நாட்டிறைவன்!"

இவ்வாறு கூறிய அத்தோழியும் தமயந்தியும் நளன் அருகில் வருகையில் தமயந்தி நளனுருவில் ஐவர் இருத்தல் கண்டு மனமயங்கிக் கடவுளை மனத்தி லெண்ணிப் பின், "இறைவனே, யான் செம்மையாகிய குணங்களையுடையவ

ளாயின், இவர்களில் அன்னஞ் சொன்ன நளனை எனக்கறி வித்தல் வேண்டும்" என்று வேண்டினாள்.

### தமயந்தி நளனுக்கு மாலை சூட்டல்

பிறகு தமயந்தி, 'நாம் இவர்களுள் நளனை அறிவது எவ்வாறு?' என்று யோசித்துக் கண்கள் இமைத்தலாலும் பூமியில் அடிகள் பொருந்துதலாலும் அழகிய மலர் மாலை வாடுதலாலும் உண்மை நளனை அறிந்தனள்; உடனே அவ்விண்ணரசர்கள் வெட்கமுற்று மனஞ் சலிக்கவும், மண்ணரசர் தம் மனத்திலே மயக்கத்தைக் கொள்ளவும், உலகத்து மற்றனைவரும் களி கூரவும் நளனுக்கு மண மாலை சூட்டினாள்.

உடனே பல வாத்தியங்கள் ஒலித்தன. அனைவரும் மழை பொழிவதுபோல மலர்களைச் சொரிந்தார்கள். சான்றோர்களும் அந்தணர்களும் வாழ்த்தினார்கள். மற்ற மன்னர்களின் முகங்களாகிய செந்தாமரை மலர்கள் வெண்டாமரையாக மாறின.

பின்னர், மன்னர் மன்னனாகிய வெற்றி வேல் நளன் தமயந்தியுடன் சுயம்வர மண்டபத்தினின்றும் புறப்பட்டு, மாடமாளிகைகளை யுடைய மன்னர் மறுகில் இளம்பசு உடன் வரச் சொல்லுங் காளையைப் போலச் சென்றான். அவர்களைக் கண்டோரனைவரும், 'இவர்கள் திருமகளும், திருமாலுமே,' என்று கூறினர். முதியோர்கள் எல்லாம், 'இவர்கள் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்க,' எனப் பல்லாண்டு பாடினார்கள். முதியர்களாகிய மங்கையர்கள், 'இச்செல்வி போழகினைப் பெற்ற பயனைப் பெற்றாள்,' என்று சொல்லி மகிழ்ந்தார்கள். சிலர், இந்நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரங் கண்கள் வேண்டும்,' என்றனர். வேறு சிலர் 'நங்கையைக் காண நம்பிக்கும் ஆயிரங் கண்கள் வேண்டும்,' என்றனர்.

இங்ஙனம் நளன் தமயந்தியோடு சென்று வீமனது அரண்மனையை அடைந்தான்.

## மற்ற மன்னர்கள் நளனுடன் பொருதல்
(படைகளின் வருணனை)

அதைக் கண்டு பொறுமை கொண்ட இந்திரனது தூண்டுதலினால் மற்ற மன்னர்கள் யாவரும் நளன் மேற் போருக்கெழுந்தார்கள். அதனையுணர்ந்த நளன் தன் படைகளோடு போருக்குப் புறப்பட்டான். வீமனது சேனையும் நளனது படையோடு கலந்தது. இருபுறத்துச் சேனைகளும் இரு பெருங் கடல்கள் ஒன்றை ஒன்று எதிர்த்துச் செல்லுதல் போலத் தோன்றிப் பார்ப்போருக்கு அச்சத்தை விளைவித்தன.

யானைகளின் கூட்டங்கள் இடித்து மிகுந்து வருகின்ற கார் காலத்து மேகக் கூட்டங்களைப் போலப் பிளிறிக் கொண்டு சென்றன. அவ்வும்பல்கள் உரல் போன்ற அடிகளைப் பெயர்த்து வைக்குந்தோறும் பூமி நெளித்தது. பூமியினின்று செந்தூள்களெழும்பி வானத்தை மறைத்தன. எதிர்ப்படின் மலைகளையும் பாதலத்தில் அழுத்தி விடக் கூடிய வன்மையுடைய தேர்கள் தம்மிற் பூட்டிய குதிரைகளினுடைய குளம்புகளினின்றெழுந் துகளால் வானவருடன் கலகமிட்டுக் கொண்டு வானளாவிய கொடிகளுடன் வானவர்களுங் கண்டு அஞ்சும்படி சென்றன. பல வகையாகிய நடையை யுடையனவும், காற்றினும் கடிதாகச் செல்லும் விரைவையுடையனவும், உலக முழுதையும் ஒருமிக்கச் சுற்றி வளைப்பன போல வட்டமாகச் சுற்றி வருவனவுமாகிய குதிரைகள் அணி அணியாகச் சென்றன.

புருவங்களாகிய விற்கள் வளைந்து தோன்றவும், மூச்சோடு புகை எழவும், பவழம் போன்ற வாயில் பற்களாகிய முத்துகள் மதியின் கதிரொளி வீசவும், மனத்தின் கண் வெகுளியாகிய நெருப்பு ஓங்கி எழவும், கைகளில் வாள் வேல் முதலிய படைகள் பளபள வென மின்னவும், அணிகளின் ஒளி அழகின் இயலை விளக்கவும், கண்கள்

சிவக்கவும் காலாள் வீரர்கள் பூமி யதிரும்படி ஆர்த்துச் சென்றார்கள்.

பறையின் முழக்கம் போன்ற குரலையுடைய பகை யன்னர்கள் தேர்களின் கொடிகள் நெருக்கவும், கலைகள் நிறைந்த மதி என விளங்கும் வெண்கொற்றக் குடைகள் நெருக்கவும், பூமியினின்றெழும் தூளிகள் நெருக்கவும், தோள்களோடு தோள்கள் நெருக்கவும், ஒளி மிக்க முடிக ளோடு முடிகள் நெருக்கவும் வேந்தர் வேந்தனாகிய நளனை எதிர்க்க வந்தார்கள். அம்மாற்றலர்களாகிய மன்னர்களின் தேர்களிலுள்ள கொடிகள் வானத்திற் செறிந்து, கதிரொளியை மறைத்து, இருளை வருவித்து, அம்மாற்றரசர்கள் தம்மைப் போருக்குத் தூண்டிய ஆகண்டலனது விண்ணுலகம் நளனது அம்புகளாற் சிதை வுறாதபடி அதற்கிட்ட கவசம்போல விளங்கின. பலவகை களாகிய போர் முரசங்கள் தாள வகைகளுக்கு ஒத்து ஒலித்தன. சங்குகள் ஆர்த்தன.

இடையிடைச் செறிந்துள்ள யானைகளாலும், அரசர் கள் அணிந்துள்ள முடிகளாலும், நெருங்கிய குடைகளா லும், வானமளாவிய கொடிகளாலும், மேலே தூசிகள் எழும்படி நெருங்கி வரும் குதிரைகளாலும், பலவகையா கிய படைக்கலங்களாலும், அச்சேனைகளின் பரப்பு இடை யிடை மலைகளின் தொடர்கள் செறிந்துள்ள பெரிய காடென விளங்கியது.

### போரின் வருணனை

போர் தொடங்கியது. தேர்களோடு தேர்கள் செறிந் தன. யானைப் படைகளோடு யானைப் படைகள் நெருங் கின. குதிரைப்படைகளைக் குதிரைப் படைகள் எதிர்த்தன. காலாள் வீரர்களைக் காலாள்வீரர்கள் எதிர்த்துக் கடலென ஆர்த்தார்கள். பெரிய வாள்களின் மேல் வாள்கள் பாய்ந்தன. கூரிய வேல்களை வேல்கள் தாக்கின. விற் களின் நாண் ஒலி கேட்போர் காதுகள் செவிடுபடும்படி

எழுந்தது. உடனே அவ்விற்களின் அம்புகள் வானத்தி லெழுந்து பறவைகள் ஒன்ருேடொன்று போரிடுதல்போல ஒன்ருேடொன்று செறிந்தன. அமைச்சர்கள்மீது அமைச் சர்கள் பாய்ந்தார்கள்.

முடி இழந்தவர்கள் திருமாலால் தலை துணிக்கப்பட்ட இராகுவை ஒத்தார்கள். அடியிழந்தவர்கள் சூரியன் தேர்ப்பாகனுகிய வருணனை நிகர்த்தார்கள். பல மறவர் கள் தோள்களிலும், மார்பிலும் பாணங்கள் தைத்தலாற் பெருகிய குருதியினுல் விளக்குகளைப் போலவும் செந்நிற மாகிய கடம்ப மலர்களைப் போலவும் நின்ருர்கள். சிறந்த ஆண்மையினை யுடைய சில வீரர்கள் தங்கள் தங்கள் கையிலுள்ள அம்புகளெல்லாம் ஒழிந்துபோகத் தங்கள் மெய்யில் தைத்துள்ள அம்புகளை வாங்கிப் பகைவர்கள் மேல் எய்தார்கள். இரண்டு தாள்களையுடைய அரிமா அன்ன சில மீளிகள் இரண்டு வாள்களை ஏந்திப் பகைவர் களின் தோள்களிரண்டும் இரண்டரவுகளென்ன நிலத் தில் விழும்படி வீசினுர்கள். மள்ளர்கள் வன்மை மிகுந்து தாக்குதலால் பல தேர்கள் ஒடிந்தன. யானைகள் பல சாய்ந்தன. பல புரவிகள் மடிந்து விழுந்தன. காலாட் கள் பலர் உயிர் துறந்தார்கள். அம்புகள் பல தைத்தமை யான் உடன் முழுதும் குருதி ஒழுகப்பெற்ற வீரர்கள் செந்நிறக் கதிர்களை வீசும் சூரியனெனத் தோன்றினுர்கள்.

இருபுறத்தின் படைகளும் இங்ஙனம் போர் புரிய, மன்னர் பலரும் ஒருங்கு கூடி அரிமா ஒன்றைக் களிறுகள் பல ஒருங்கு கூடி எதிர்த்தாற்போல நளனை எதிர்த்து, வில்லை வளைத்து, நாண் பூட்டிக் கேட்போர் அஞ்சும்படி நாணெலி எழுப்பி, முகிலினங்கள் ஒருங்குகூடிப் பெரு மழையைச் சொரிதல்போல வாளிகளைச் சொரிந்து, நள னுடைய தேர், யானை, குதிரை, காலாட்கள் என்னும் நால் வகைப் படைகளிற் பலவற்றை அழித்து ஆர்த்தார்கள். அதைக் கண்ட நளன் கடுஞ்சினமுற்று, ஊழித்தீ என

உருத்தெழுந்து வில்லை வளைத்துக் கணைகளை எய்தான். அவன் அங்ஙனம் வில்லை வளைத்ததையும் கணைகளை எய்ததையும் அவனது தடக்கையின் விரைவினால் ஒருவருங் கண்டிலர். ஆனால், இடந்தோறும் பிணக் குன்றங்கள் தோன்றி யிருத்தலையும், இடை இடையே கவந்தங்கள் ஆடுதலையும், நரிகள் பல பிணங்களைப் பிடுங்கித் தின்னுதலையும், குருதிவெள்ளம் பெருகி யோடுதலையும் அனைவரும் கண்டார்கள். பல மன்னர்கள் வெந்நிட் டோடினார்கள்.

அங்ஙனம் மன்னர்கள் பலர் அஞ்சி ஓடுதலையும், நளனது ஆண்மையையுங் கண்ட கலிங்கர் கோன் சீற்ற மிகுந்த இமிலேறு ஒன்று வயப்புலியை வந்தெதிர்த்தாலென நளனை வந்தெதிர்த்துக் கண்ணிமைக்குங் காலத்தில் பல்லாயிரங் கணைகளை எய்து ஆரவாரித்தான். நளன் அவனைக் கண்டு புன்னகை புரிந்து, "திண்டிறல் வீரனே, உன் ஆண்மையைக் கண்டு யான் மிகவும் வியந்தேன். உன் ஆற்றலுக்குப் பரிசாக ஐந்தருக்கள் நிழல் செய்யும் இடத்தை அளிக்கின்றேன்,'' என்று கூறிப் பிறைமுகக் கணை ஒன்றை அம்மன்னன் மீது எய்தனன். உடனே அம் மன்னன் அங்ஙனமே விண்ணகமடைந்து விண்ணவர்களின் விருந்தினனானன்.

கலிங்கர்கோன் மடிந்து வீழ்ந்ததைக் கண்ட மகத தேசத்தரசன் ஊழிக்காற்றைப் போல வந்தெதிர்த்துப் பல கணைகளை நளன்மீது எய்தான். உடனே நளன் அவன் மீது சில அம்புகளைவிட அவனது தலை அற்றுக் கீழே விழுந்தது. அவனது உடற்குறை போர்க்களத்தில் நின்றாடியது. இங்ஙனமே பல மன்னர்கள் நளனை எதிர்த்துப் பொருது விண்ணவர்களின் விருந்தினர்களானார்கள்.

இங்ஙனம் வேந்தர் வேந்தனாகிய நளன் உருத்தெழுந்து பெய்த கணை மாரியினால் யானைகள் அழிந்தன.

தேர்கள் சிதைந்தன. குதிரைகள் மாண்டன. காலாட்கள் உயிர் துறந்தார்கள்.

## போர்க்கள வருணனை

எங்கும் பிண மலைகள் பிறங்கின. அப்பிண மலைகளி னின்று பாயும் குருதி, மலைகளிலிருந்து பாயும் அருவி களைப் போன்றன. நளன் பகைவர்களை அழித்த போர்க் களத்தில் உயிர் துறந்து கிடக்கும் யானையின் கீழ்க் கிடக் கும் மேற்போர்வை இல்லாத முரசின் வழியாகக் குருதி பாய்ந்து செல்லுதல், செந்நிறக் குளத்தின் கரையின் கீழுள்ள நீர்த் தூம்பு அச் செந்நீரை உமிழ்வது போன் றது. பெருகிச் செல்லும் உதிரத்தினால் கால் வழுக்கி விழுந்த வீரர்கள், யானையின் கொம்புகளை ஊன்று கோலாகக் கொண்டு ஊன்றி எழுந்தார்கள். பகைவர் களின் தேரை அழித்துத் தேர் உருளையைத் தன் கழுத்தில் சுமந்தெழுந்த யானை தன்மேல் ஞாயிறு பொருந்திய மலை யைப் போன்றது. வீரர்களின் உடலில் அம்புகளும் வேல் களும் தைத்த இடத்தினின்று பெருகுங் குருதியைப் படிந் துண்ட காகத்தின் வாய் சிச்சிலிக் குருவியின் வாயைப் போல விளங்கியது. பல பக்கங்களிலும் உயிர் நீத்துக் கிடக்கும் யானைகள், பேரிடியினால் சாய்ந்து கிடக்கும் மலை களைப் போன்றன. நீல மலைகளைப் போன்ற யானைகள், கால் வழுக்கி விழுந்து குருதி வெள்ளத்திற் படிந்தெழுந்து சாதி லிங்க மலைகளைப்போல விளங்கின. சில யானைகளின் உடன் முழுதும் தைத்திருக்கும் வாளிகள், மலைகளிற் பொருந்தியிருக்குங் குருவிக் கூட்டங்களைப் போன்றன. செருப்புடன் அறுபட்டுக் குருதி வெள்ளத்தில் வீழ்ந்து பிறழும் வீரர்களுடைய கால்கள், கடலில் சுறு மீன்கள் பிறழ்தலை ஒத்தன. உடம்பின் பல பக்கங்களிலும் கணை கள் பாய்ந்ததனால் நடக்க முடியாமல் வருந்தி நிற்கும் யானைகள், செங்குன்றுகள் பல நிற்றலைப்போலத் திகழ்ந் தன. வலி யிழந்தவர்களாலே போட்டுவிடப்பட்ட முர

சங்கள், கணைகள் தைத்தமையாற் கண்ணிழந்த யானைகள் உதைத்தலால் மேகம் போல முழங்கின. யானையின் துதிக் கைகள், கூரிய வாளிகளினால் அறுப்புண்டு பூமியில் வீழ்ந்து மலையின்மேல் இடி வீழ்தலாற் பூமியில் விழுந்து புரளும் பாம்புகளைப் போலப் புரண்டன. அத்துதிக்கைகள், குருதி யைப் பெருக்குதலால் பழங்களைச் சொரியும் பைகளை நிகர்த்தன. அம்மன்னர் மன்னனது கணைகளாற் தேர் களின் கொடிகள் குடைகள் முதலியன சிதைந்து விழுந் துள்ள இடங்கள், தச்சர்கள் தம் தொழிலைச் செய்யும் இடங்களை ஒத்தன. அம்மன்னனுடைய வாளிகள் சென்று காலாள் வீரர்களின் உடல்களில் தைத்துக் குருதி பெருக்கு தலால் அவர்களின் உடல்கள், கார்த்திகைத் திருவிழா வில் ஏற்றிய விளக்குகளைப் போன்றன. தோணிகளை ஆற்று நீர்ப் பெருக்கு இழுத்துச் செல்லுதலைப்போல அவ் வேந்தர் வேந்தன் கணைபட்டழிந்தவருடைய உடலைக் குருதி வெள்ளம் இழுத்துச் சென்றது. இரண்டு கோடு களுக்கிடையில் வேல் தைக்கப்பட்ட யானைகள், மூன்று கொம்புகளை யுடைய யானைகளெனத் திரிந்தன. தம் மீதிருந்த தம் துணைவர்களை இழந்த யானைகள், மார்பில் தைத்த கணைகளினால் வருந்தி நடை மெலிந்து செல்லும் தோற்றம், மலைகள் கால்கள் பெற்று மெல்லென நடந்து செல்லுதல் போன்றது. முறிபட்டு நிலத்தில் கிடக்கின்ற குடைகளின் கீழ் விழுந்து கிடக்கும் துதிக்கைகள், சந்திர னைப் பற்றி யிருக்கும் கரும்பாம்பைப் போன்றன. வெவ் விய கணைகளால் அறுப்புண்டு நிலத்தில் விழுந்து கிடப் பனவாகிய மள்ளர்களின் தலைகள், பனங்காட்டில் காற்றி னால் அலைப்புண்டு நிலத்தில் விழுந்து கிடக்கும் பனங்காய் களை நிகர்த்தன.

வென்றிவேல் வேந்தனாகிய நளனது கணைகள் தைத்த லால் துள்ளி எழுந்த யானைகளின்மீது அசையும் கொடி கள், வனத்திலுள்ள துகளைத் துடைப்பன போன்றன.

துணிக்கப்பட்டு நிலத்தில் கிடப்பனவாகிய வீரர்களுடைய கைகளைக் கவர்ந்துகொண்டு வானத்திற் செல்லும் சேவற் பருந்துகள், ஐந்தலை அரவத்தைக் கவ்விக்கொண்டு ஆகாயத்திற் செல்லுங் கருடனைப் போன்றன. குருதியினலாகிய செஞ்சேற்றில் செல்கின்ற யானைகள் கோபித்து மிதித்த தால் உண்டான குழிகள், குருதியினல் நிரப்பப் பெற்றுச் செந்நிறப் பூக்களால் நிறைத்து வைக்கப்பட்ட நீர்க் குடங்கள் போன்றன. செருக்கிப் போர் செய்த வாள் மன்னர்களின் கைகள் பற்றிய கேடகத்தோடு அற்றுவிழ அவற்றைக் கவ்விக்கொண்டோடிய நரிகள், பிறர்க்குக் கண்ணுடி காட்டுவாரை ஒத்தன. பூம்பொழிலில் பெருங்காற்று மிக்கு வீசுதலால் அஞ்சி இனம் இனமாக ஓடும் மயிற் கூட்டம்போல், கொழுநரை யிழந்த மகளிர், நால் திசையும் ஓடி அரற்றினர். போர்க்களமுழுதும் குருதி வெள்ளத்தால் செந்நிறமுற்ற தோற்றம், நில மகள் செந்நிறப் போர்வையைப் போர்த்துக் கொண்டாற் போன்றது. காலற்றுக் குருதி தோய்ந்து கிடக்கும் வெண் குடைகள், செம்பஞ்சிக் குழம்பு பூசப்பட்ட ஆலத்தித் தட்டுகளைப் போல விளங்கின. வெள்ளிய கோடுகள் நிலத்திற் படிய விழுந்து கிடக்கும் யானைகள், வெள்ளிய கலப்பைகளால் நிலத்தை உழுவனபோலத் தோன்றின. வேல்கள் மார்பில் அழுந்துதலால் கால் சோர்ந்து விழுந்து நிலத்திற் சாய்ந்து கிடக்கும் யானைகள் நில மகள் கூறும் உபதேச மொழிகளைக் கேட்பன போன்றன.

இங்ஙனம் நிகழ்ந்த போரில் இறந்தொழிந்த மன்னர் போக, உயிருடன் நின்ற மன்னர்கள்,வென்றிவேல் மன்னனுகிய நளனுடைய அருளைப் பெற்றுய்ந்தார்கள். வெற்றியுற்று வாகை மாலை சூடிய நளன், நாற்படைகள் புடை சூழச் சென்று வீமனுடைய அரண்மனையை அடைந்தான்.

## கலி புருடன் வஞ்சினங் கூறல்

இந்திரன் மற்றைத் தேவர்களை நோக்கி, "இவ்வேந்தன் அவுணர்களை அழித்து நமக்குச் செல்வமும் சிறப்பும்

அளித்த வீரசேனன் என்னும் இவனது தந்தையினுஞ் சிறந்த வீரமுடையனாகவிருக்கிறான். 'முன்னே தோன்றிய காதுகளிலும் பின்னே தோன்றிய கொம்புகள் வலியுடையான' என்னும் பழமொழி இவன்பால் மிகவும் பொருத்த முடியதா யிருக்கின்றது;'' என்று நளனைப் புகழ்ந்துரைத்து, அவர்களுடன் விண்ணுலகை நோக்கிப் புறப்பட்டுச் சென்றான். செல்லுகையில், இந்திரன், உலகத்தவர்களுக்குப் பெருந் துன்பத்தைச் செய்யும் கலி புருடனை எதிரிற் கண்டு, "நீ இங்கு வருவதற்குக் காரணம் யாது?'' என்று கேட்டான். கலி புருடன், "நீங்கள் விரும்பி வந்த எழின் மிக்க மடந்தையாகிய வீமன் திருமகளை அடைதற் பொருட்டாகவே யானும் வந்தேன்,'' என்றான்.

இந்திரன், "அன்புடையோய், அப் பொற்கொடியை அடைதற் பொருட்டு நாங்கள் பல சூழ்ச்சிகளைச் செய்தோம். அச் சூழ்ச்சிகளெல்லாம் பயனற்றொழிந்தன. அவள் மண்ணக மன்னர்களிற் சிறந்தவனாகிய நளனுக்கு மண மாலையைச் சூட்டிவிட்டாள். இனி நீ அங்குச் செல்லுதலாற் பயனொன்றுமில்லை. நின் கருத்தை ஒழித்துவிட்டு நின்னிடஞ் செல்க'' என்றான்.

கலி புருடன் அம்மொழிகளைக் கேட்டவுடன் ஆற்ற முடியாத சினங்கொண்டு, "விண்ணரசர்களாகிய நீங்கள் எதிரில் இருந்தும் உங்களைவிட்டு மண்ணரசனாகிய நளனுக்கு மணமாலை சூட்டிய அம்மடமங்கையின் எண்ணத்தைக் கெடுக்கின்றேன். இப்பொழுதே அவளுடைய கொழுநனுக்கும் இழிவை உண்டாக்குகின்றேன். நீங்கள் காணுங்கள்,'' என்று சீறிக் கூறினான். இந்திரன் அவன் மொழிகளைக்கேட்டு, "அன்புடையோய், நீ நளனுடைய தன்மைகளை நன்குணராமையின் இங்ஙனம் கூறினை. நின் சினம் அவனிடம் செல்லாது. அவ்வேந்தன் வாய்மையிற் சிறிதும் பிறழாதவன்; செங்கோலன்; அருண்மிக்கவன்; ஆற்றலில் திருமாலை ஒப்பவன். தமயந்தியோ, அருந்ததியை ஒத்த கற்

பரசி. ஆதலின், நீ அவர்கள்பாற் செல்லின், உனக்கு இழிவுதான் எய்தும். நீ அவர்கள்பாற் செல்லற்க,'' என்ருன்.

நஞ்சுடன் தோன்றிய பாம்பன்னவனுகிய கலி புருடன், "அவ்வேற் கண்ணியுடன் அவ்வேந்தன் இருத்தலைப் பொறேன்; அவர்களை எவ்வகையிலேனும் பிரியச் செய்வேன். அவர்களைப் பிரிக்கும் வரையினும் என் சினம் அடங்காது. வேண்டும்போது நீங்கள் எனக்குத் துணை புரிதல் வேண்டும். நான் சென்று வருகின்றேன்,'' என்றுரைத்துச் சென்ருன். இந்திரன் மற்றத் தேவர்களுடன் விண்ணுலகை அடைந்தான்.

## திருமணம்

குண்டினபுரத்து மாந்தர்கள் அன்றிரவு முழுதும் நளனது வெற்றியையே புகழ்ந்து பேசினர்கள். சீரிய கூரிய தீஞ்சொற் கவிஞர்கள் நளனது புகழையும் மேன்மையான குணங்களையும் அமைத்துச் சிறந்த பல பாக்களைப் பாடினர்கள். இசை வல்லவர்கள் அவனது வென்றியை இன்னிசைப் பாக்களிலே அமைத்துப் பாடினர்கள். நாடகத்தில் வல்லுநர்கள் தமயந்தியின் சுயம்வரத்தை நாடகமாக அமைத்து நடித்தார்கள். இங்ஙனம் இராப்பொழுது கழிவதாயிற்று. சூரியனும் தமயந்தியின் கடிமணத்தைக் காண விழைந்தவன்போல வந்து குணதிசையிற்ருேன்றினன். சூரியனுடைய கிரணங்களால், பொய்கைத் தாமரைகளும், 'இன்று தமயந்தியின் கடிமண நாள்,' என்னுங் களிப்பால் அந்நகர மாந்தர்களின் முகத் தாமரைகளும் மலர்ந்து விளங்கின. மலர்களினின்று பெருகும் தேனும், அந்நகர மாந்தர்களுடைய இன்னுரைகளாகிய தேனும் முறையே வண்டுகளையும் விருந்தினரையுங் களிப்பித்தன. தமயந்தியின் மணத்தின் பொருட்டு அலங்கரிக்கப் பெற்றிருந்த அந்நகரம் இருள் நீங்கியவுடன் பொலிவுற்று விளங்கிய தோற்றம், சிறந்த மணிக

ளமைந்த அணிகளையிட்ட பேழை திறக்கப்பட்டாற் போல விளங்கியது.

புரோகிதர்கள், "கடிமணத்துக்குரிய காலம் அண்மைத்தாயிற்று," என்று கூற, வீமன் தமயந்தியைத் திருமண மண்டபத்துக்கு அழைத்துவரும்படி சேடியர்களுக்குக் கட்டளையிட்டனன். அவர்கள் தமயந்தியின் கன்னிமாடத்திற்சென்று அச்செய்தியைக் கூறினார்கள். உடனே தமயந்தியின் தோழியர்கள், தமயந்தியை நீராட்டிப் புரிகுழல் உலரும்படி அதற்கு வாசப்புகை யூட்டிப் பொதிய மலையினின்று வந்த சந்தனத்தேய்வையை உடலிற் பூசிப் பொன்னுடையை உடுத்தினார்கள்; மேகமானது மெல்லிய கொடிகளின் வடிவமுற்றுக் கிடந்தாற்போன்ற குழல் வட்டத்தில் முகிலினிடையில் மதி தோன்றினாற் போலச் சிகழிகை என்னு மாலையைப் புனைந்தார்கள்; ஒளிமிக்க உடுக்கள் வந்து மதியைச் சார்ந்தாற்போலச் சுட்டி என்னும் அணியை ஒளிமிகும்படி தொங்கக் கட்டினார்கள்; இருள் மிக்க கூந்தலிற் பூட்டு என்னும் அணியை இட்டார்கள். அது முகிலாற் சூழப்பட்ட மதிபோல விளங்கியது. கண்களாகிய வேல்களாற் காதுகள் தாக்குறுதபடி அமைத்த காவல் என்னும்படி காதுகளில் ஒளிமிக்க மணிகளிழைத்த குழையை இட்டார்கள்; திருமகள் நாதர்தம் கைச்சங்கத்திற்கு அணிகளை அணிவாரைப்போல் அவள் கழுத்தில் உயர்ந்த அணிகளை அணிந்தார்கள்; வான மீன்களில் ஒளி மிக்கனவற்றைக் கோத்து வைத்தாற்போன்ற முத்து மாலைகளை உந்தியளவுந் தொங்கும்படி கழுத்திலிட்டார்கள்; கண்கள் கூசும்படி செந்நிற ஒளியைப் பரப்பும் பதுமராக மணிகளாலும் முத்துகளாலும் ஆன அணிகளை உவமை கூறுதற்கரிய அவள் தோளில் அணிந்தார்கள்; 'சூரியன் தான் விரும்புந் தாமரையினும் தமயந்தியின் கைகள் மிக்க எழிலுடையனவெனப் புலவர்கள் கூறுதலைக் கேட்டு அவ்வெழிலைக் காணவேண்டித் தன்னுருவினைச்

சுருக்கி இரண்டு வடிவங்கொண்டு அவள் கையை வந்து சூழ்ந்தனன்', என்னும்படி கடகமிட்டார்கள் ; மான்மதம் கலந்த சந்தனச் சாந்தினல் அவளுடைய தோள்களிற் பூங்கொடியையும், அநங்கன் வில்லையும் தீட்டினர்கள். கடவுளைப்போல இல்லை உண்டென்ன நிற்கும் இடையில் மேகலையை அணிந்தார்கள். அவளுடைய கால்களில் இட்ட சிலம்புகள் ஒலித்தல், 'இவளுடைய சீறடிகள் அனிச்சமலரினு மிக்க மென்மையானவை,' என்று நுவல்வது போன்றது. இங்ஙனம் தோழியர்கள் தமயந்திக்குப் பல அணிகளை அணிந்து அழைத்துக்கொண்டு திருமகளைச் சூழ்ந்து செல்லும் தேவமாதர்களைப்போல அவளைச் சூழ்ந்து திருமண மண்டபத்திற்குச் சென்றார்கள்.

உடனே வீமன், 'திருமணத்திற்குரிய நல் ஓரை எய்திற்று,' என்பதை வேந்தர் வேந்தனகிய நளனுக்கு உணர்த்தும்படி ஒற்றர்களுக்குக் கட்டளையிட்டான். ஒற்றர்கள் அங்ஙனமே சென்று, நளனுக்கு அதனை உணர்த்தினர்கள்.

உடனே சான்றோர்களாகிய முதியோர்கள் பலர்கூடி நளனை நீராட்டினர்கள் ; அணி மிகும்படி ஒப்பனை செய்பவர்கள் மலைகளின்மீது சூரியனுடைய கதிர்கள் தவழ்வது போல அம்மன்னர் மன்னனுடைய தோள்களின்மீது கதிர்கள் தவழும்படி அவனுடைய காதுகளில் மணிக் குழைகளை அணிந்தார்கள்; மிகவும் அகன்று வன்மையுற்று விளங்கும் அவனுடைய மார்பிடை முத்துவடத்தினை இட்டார்கள். அது மலையிடைத் தாழ்ந்தொழுகும் அருவியைப் போன்று விளங்கியது. அவனுடைய திண்ணிய தோள்களில் தொடிகளை அணிந்தார்கள். அவை கற்பகத் தருவைத் தழுவிய காமர் வல்லிக் கொடிகள்போற் பொலிவுற்றன. அவனுடைய மருங்கில் வெண்பட்டாடையைச் சேர்த்தார்கள். அது பொன் மலையில் வெண்முகில் தவழ்வது போல விளங்கியது. அவனுடைய காலிற் பொற்

கழலை அணிந்தார்கள். அஃது, 'இவனையொப்ப அழகு, ஆண்மை, வண்மை முதலிய குணங்கள் யாவும் ஒருங் கமைந்தார் உலகில் ஒருவரும் இல்லை, இல்லை,' என்றுரைப் பதுபோல ஒலித்தது. அவன் சிரத்தில் முடியைச் சூட்டி னார்கள். அஃது இளஞ்சூரியன் உதய மலையில் வந்து தங்கியதுபோலப் பொலிந்தது.

வேந்தர் வேந்தனாகிய நளன் இத்தகைய சிறந்த அணி கள் பல அணிந்து, பொன்னாலாகிய முகபடாத்தினை அணிந்த யானையின்மேலிவர்ந்து திருமண மண்டபத்துக் குச் செல்லப் புறப்பட்டான். தேவ மாதர்களைப் போன்ற மங்கையர்கள் மதியென்ன வெண்கதிர்களைப் பரப்பும் கவரிகளைக் கைப்பற்றி வீசிக்கொண்டு சென்றார் கள். மன்னர்கள் வெண்குடையை யேந்திப் பின் தொடர்ந்தார்கள். சான்றோர்களும், முனிவர்களும் பல் லாண்டு பாடினார்கள். நகர மாந்தர்கள் வரிசை வரிசை யாக மருகில் நின்று, காணுந்தோறும் களிப்பினை விளைப்ப தாகிய அம்மன்னனுடைய பேரெழிலைக்கண்டு மகிழ்கூர்ந் தார்கள். அவ்வேந்தன் இங்ஙனம் பல சிறப்புகளுடன் சென்று திருமண மண்டபத்தை யடைந்தனன். தேனறாத மலர் மாலைகளைத் தொங்கவிட்டுள்ள திருமண மண்டபத் தில் இடப்பட்ட மணத்தவிசில் அவ்வண்ணலோடு இளமா னிகர் விழியினளாகிய தமயந்தியைத் தோழியர்கள் வீற் றிருக்கச் செய்தார்கள். 'தாரை வார்த்தற்கியைந்த நல் ஓரை இதுவே,' என்று கணிகர்கள் சொல்ல, வீமன் எழுந்து, பல்லியங்கள் ஒலிக்க மண மக்களின் அருகிற் சென்று, செவ்விய தாமரை மலரின்மீது அழகிய காந்தள் மலர் அலர்ந்தது என்னும்படி நளன் கையின்மேல் தமயந் தியின் கையைவைத்து "பொன்னந்தாமரையில் வீற்றிருக் கும் பூவையையும் திருமாலையும்போல வாழ்திர்," என்று வாழ்த்திப் புனல் வார்த்தனன். சான்றோர்களும், முனிவர் களும் ஆசி கூறினார்கள். இள மங்கையர்கள் மங்கலப்

பாடல்களைப் பாடினார்கள். பிறகு புரோகிதன் சடங்கு காட்ட, நளனும் தமயந்தியுந் தீவலஞ்செய்து, தம்முடைய செங்கைகளால் அழகிய பொரியை அத்தீயிற் சொரிந்தனர். பின்னர் நளன், தமயந்தியின் சீறடியைப் பசிய பொன்னினாலாகிய அம்மியின்மீது வைத்து அருந்ததியைக் காட்டினான். மணத்திற்குரிய சடங்குகள் யாவு முடிந்த பின்னர்த் தமயந்தி பூங்கொடியொன்று அசைந்து செல்வதுபோற் சென்று தன் தாதையின் தாளிற் சென்னி யுறும்படி களி கூர்ந்து வணங்கினாள். அவ்வேந்தர் பிரான், "நீ நின் கொழுநனுடன் மகிழ்வுற்றிருந்து நன் மக்களைப் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்க," என வாழ்த்தினான். வேந்தர் வேந்தனாகிய நளன், சான்றோர்களாகிய முதியோர்களையும், முனிவர்களையும் வணங்கிச் சென்று, விதர்ப்பர் கோனை அன்புடன் தழுவினான். சான்றோர்களும் முனிவர்களும் வாழ்த்தினார்கள். இங்ஙனம் மணச்சடங்குகள் எல்லா முடிந்தபின், மலர்க்குழன் மங்கையர் பலர் ஆலாத்தி சுற்றினார்கள். திருமணம் முடிந்தபின் நளன், இருவருயிரும் ஒருயிரே என்னும்படி தமயந்தியோடு பல நாளளவும் வீமன் நகரில் மகிழ்வுடன் தங்கியிருந்தனன்.

# 2. கலி தொடர் காண்டம்

## நளன் தன் நகருக்கேகல்

இங்ஙனம் இன்புற்று வைகிய வேந்தர் வேந்தனாகிய நளன், ஒரு நாள் தன் மாமனாகிய விதர்ப்பர்கோனிடம் விடை பெற்றுக்கொண்டு, அமைச்சர்களை இனிதுநோக்கி, "இன்று நாம் புறப்படுதல் வேண்டும்," என்று கூறினான். உடனே கடலின் முழக்கம் அடங்கும்படி முரசுகள் ஒலித்தன. நாற்படைகளும் அணியணியாக அந்நகரின் தெருக்களில் நிறைந்தன. தமயந்தியும் தன் பெற்றோரை வணங்கி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு பொன்னங்குன்றைச் சேர்ந்து செல்லு மின்னற் கொடி என, நளனுடன் சென்று பொற்றேரிலேறினாள். அவர்கள் ஏறிய தேர் புறப்பட்டது. அத்தேரைச் சூழ்ந்து சேனைகளும் புறப்பட்டன. தூளியானது வானமறையும்படி எழுந்தது. அத்தூசினை யானைகள் மதநீரைச் சொரிந்து அடக்கின. சூரியன் கதிர்களைப் ஒப்ப ஒளியை வீசும் வேலினை யேந்திய வீரர்கள் இவர்ந்து செல்லும் தேர்கள் இந்நிலவுலகம் மிகச் சிறிதென்னும்படி பரந்து சென்றன. ஒளிமிக்க பல மணிகளைப் பதித்த முக படாம் அணிந்த யானைகள் பல நிறமமைந்த வில்லினைத் தோற்றுவிக்கும் முகிற்கூட்டங்கள் எனச் சென்றன. நிலத்திற் கால்படாமற் பாய்ந்து செல்லும் குதிரையணிகள் கடலினின்று மேலெழும் திரைகளை நிகர்த்தன. தேர்களின் மேல் அமைந்த வெண்குடைகள் அளவில்லாத அன்னங்கள் வானிற் பறப்பன போன்றன. வானையளாவிய துகிற்கொடிகளின் தோற்றம் வெள்ளிய முகில்கள் அப்படையின் பரப்பைக் கடலெனக் கருதி நீர் பருக வருதல்

போன்றது. தேரின் குடைகள் சூரியன் ஒளியை மறைத்து இருளை உண்டாக்கின. அவ்விருளைத் தேரிலுள்ள வீரர்கள் அணிந்துள்ள அணிகளினின்றெழும் கதிர்கள் விலக்கின. தமயந்தியின் தோழிகள் ஊர்ந்து புரவிகளைச் செலுத்துந்தோற்றம் அன்னங்கள் அமைந்து ஆறுகளைச் செலுத்துதல் போன்றது. வில், வாள், வேல் முதலிய படைகளை ஏந்திய கையையுடைய காலாள் வீரர்கள் கணக்கிலடங்காத களிறுகள் ஊர்ந்து செல்வதுபோற் சென்றார்கள். சூரியன் உச்சியில் வந்து பொருந்தினன். மாதர்களும் வீரர்களும் சோலைகளை அடைந்தார்கள்.

வேந்தர் வேந்தனுகிய நளனும் தமயந்தியுடன் மாதர்களும் வீரர்களும் செறிந்துள்ள சோலைகளுள் ஒன்றிற் புகுந்து, பாதிரியும், ஞாழலும், கொன்றையும், புன்கும், புன்னுகமும் செறிந்து வண்டுகளிசை பாட அரும்பவிழ்ந்து தேன்றுளிக்கத் தென்றல் வீசும் ஓரிடத்தில் அமைந்துள்ள மாதவிக்கொடி வீட்டில் ஒரு பாறையின் மேற் சென்று தங்கினன்.

தங்கினவன் தமயந்தியை நோக்கி, "பூங்குயிலே, இக்கொடி வீடு உனக்குச் சூரிய வெப்பத்தினு லுண்டான வருத்தத்தைப் போக்கிவிடும்," என்றான். தமயந்தி, "உலக முழுதினுக்கும் நிழலைச் செய்யும் கொற்றக்குடை வேந்தரே, தம்முடைய தண்ணளியைப் பெற்ற என்னைச் சூரிய வெப்பம் வருத்தவல்லதோ?" என்றாள். நளன் களிகூர்ந்து, அவள் மகிழ அங்குள்ள காட்சிகளைக் காட்டினன். பிறகு, "தளிர்நிறங் கவற்றுமென் சீறடியாய், அங்கு மங்கையர்கள் மணங் கமழு மலர்களைக் கொய்யச் செல்ல, வண்டுகள் அவர்களை எதிர்கொள்வனபோல் அவர்களெதிரிற் சென்று ஒலித்தலைக் காண். மடவனமே, அங்கொரு மங்கை தன் முகத்தைத் தாமரைமலர் என்று படிந்த வண்டைச் செங்கையாற் றடுக்க அவ்வண்டு அக்கையைக் காந்தண்மலர் என்று கருதி அக்கையிற் படித

No. 104108

லால், அவள் அஞ்சி வெயர்த்து நிற்றலை நோக்கு. அங்கொருபால் ஒரு மங்கை நல்லாள் அன்போடு தழுவிப் பறித்த ஆம்பற்பூ மலர்ந்து விளங்குந் தோற்றம் அவள் முகத்தை மதி என்று நோக்குதல்போல் பொலிதலைப் பாராய். அங்கொரு புறம் ஒரு மாது தான் கொய்த குவளை மலரின் இதழைக் கிழித்துத் தன் சிறிய நெற்றியில் வைத்துக்கொண்டு முக்கண்ணனாகிய சிவபிரானைப் போல் விளங்குகின்றனள், காணாய். அங்கொரு புடை ஒரு மங்கை தாமரை மலர்கள் இரண்டினைக் கொய்து இரண்டு காதுகளில் வைத்துக்கொண்டு மூன்று முகங்களை உடையவள்போல் வருகின்றனள், நோக்கு. அங்கொருபால் காளை போல்வான் ஒருவன் தாமரை மலர்கள் அலையும்படி தன்னுடன் நீரில் மூழ்கித் தனக்கு முன் எழுந்த தன் மனைவியின் முகத்தைத் தாமரைமலர் என்றெண்ணி, அவளைக்காணாமல் சோர்ந்து நிற்கின்றான், பாராய். அங்கு நீரில் மூழ்கி எழுந்து தன் கூந்தலை முறுக்கிக்கொண்டிருக்கும் பெண்ணணங்கின் முகத்தையும் கூந்தலையும் நோக்கின், தண் மதியையும் அம்மதியைப்பற்றிய கரும்பாம்பையும்போல் தோன்றுகின்றன காணாய். அங்கொருபுடை நீரில் மூழ்கி எழுகின்ற மங்கையின் சிறுநுதலின் காட்சி கருமுகிலினிடையிற்றோன்றும் பிறை எனப் பொலிகின்றதை நோக்கு,'' என்று கூறினன்.

நளன் இங்ஙனம் பல இனிய காட்சிகளைக் காட்டிக் கூறித் தமயந்தியை மகிழ்வித்துப் பிறகு அக்கற்பரசியுடன் அச்சோலையிலுள்ள பொய்கையில் நீராடினான். பிறகு தமயந்தியுடன் அமுதனைய உணவினையும் இனிய கனிகளையும் உண்டு பொற்றேரில் ஏறிப் புறப்பட்டான். காற்படைகளும் பூமி நெளியும்படி சென்றன.

அங்ஙனஞ் சென்ற படைகளின் முன்னணி மாவிந்த நகரை அணுகியது. அதனால், அந்நகரில் உள்ள சான்றோர்களும் அமைச்சர்களும் இணைக்கயல், நிறை குடம் முதலிய

O-, IGPU, N:9

மங்கலப் பொருள்களுடன் தமயந்தியுடன் நளனை எதிர் கொண்டார்கள். மன்னர் மன்னனாகிய நளன், தன்நகரை அடைந்து, திருமால் திருமகளோடு பாற்கடலினின்று செல்லுதல்போல வெண்குடைகளின் பரப்பினையுடைய படைக் கடலினின்று தமயந்தியுடன் சென்று இந்திரன் கோயிலை ஒத்த தன் அரண்மனையை அடைந்தான்.

## நளன் இல் வாழ்க்கைத் திறம்

பிறகு அவ்வேந்தன் தமயந்தியுடன் பொய்கைகளி லும் சோலைகளிலும் ஆறுகளிலுஞ் சென்று விளையாடி இன்புற்றான்.

'ஆன குடிக்கு ஆணொன்று பெண்ணொன்று,' என் பதுபோல் அவர்களுக்கு ஆண் மகவு ஒன்றும், பெண் மகவு ஒன்றும் தோன்றின. நளன் அக்குழவிகளின் குதலை மொழிகளைக் கேட்டும், தளர் நடையைக் கண்டும், அவர்கள் தளிரினு மெல்லிய கால்களால் தன் மெய்யைத் தழுவுதலாற் களித்தும், அவர்கள் தங்களுடைய செங்காந் தள் மலர்களின் இதழ்கள் போன்ற இதழ்களால் கொடுக் கும் முத்தங்களால் உள்ளம் பூரித்தும், அவர்களின் புன் முறுவலைக்கண்டு மனங்கரைந்தும் இனிதாகக் காலத்தைப் போக்கினான். தமயந்தி அம்மைந்தர்களை அன்புடன் பேணு தலினும், தன் கொழுநனைத் தான் முன்னின்று உபசரித் தலினும், எற்றோர்க் களித்தலினும், விருந்தினரை மலர் முகத்துடன் வரவேற்றுத் தூய மனத்துடன் இன்மொழி கள் கூறி உபசரித்து அவர்கள் மனமகிழச் செய்தலினும் தன் மனத்தைச் செலுத்தி இனிது வாழ்ந்தாள்.

மன்னர் மன்னனாகிய நளன் இங்ஙனம் தன் மனைவி மக்களுடன்கூடி இன்புற்றிருக்கையிலும் தன் ஆளுகைக் குரிய எல்லாச் செயல்களையும் சிறிதும் மனந்தளராமலும், காலந் தாழ்க்காமலுந் திருத்தமுறச் செய்து வந்தான். அமைச்சர்களும் மற்றுமுள்ள உத்தியோகத்தினர்களும்

அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தங்கள் தங்கள் கடமைகளை முறையுறப் புரிந்து வந்தார்கள். அவன் ஆளுகையிற் குறைகூறினர் ஒருவருமிலர். குடிகளுக்கெல்லாம் அவனே உயிரென விளங்கினன். குடிகள் எல்லாம் அவனையே தங்கள் வழிபடு கடவுள் எனக் கொண்டு போற்றி வந்தார்கள். அவன் பால் அன்பு, ஆண்மை, ஈகை, ஒழுக்க முதலிய நற்குணங்களெல்லாம் மணியின்கண் அமைந்த ஒளி எனப் பொருந்தி விளங்கின.

### கலி புருடனது சூழ்ச்சி

அவ்வண்ணலினை வருத்த வெண்ணிய கலி புருடன் அம்மன்னர் பிரானுடைய குண மேன்மைகளைக் கண்டு அவனை அணுக அஞ்சி, மறைந்து நின்று, வேற்று நாட்டிற் சென்று அந்நாட்டு மன்னரின் குறைகளை மறைந்து நின்று நோக்கும் ஒற்றர்களைப் போல அம்மன்னன் ஏதேனுங் குற்றம் செய்வானா என்று பார்த்துக் கொண்டிருந்தான். இங்ஙனம் கலி புருடன் பதினிரண்டுகள் காத்துக் கொண்டிருந்தான். அங்ஙனம் பதினறு வருடங்கள் காத்திருந்தும், கலி புருடன் தன் கருத்து நிறைவேறப் பெற்றிலன். அதனால், அத்தேவன் மனந் தளர்ந்து, "ஏதேது! இம்மன்னர் மன்னனிடத்தில் குற்றங் காணுதல் எவரானும் முடியாத செயலே. சூரியன் தன் செயலிற் றவறினும், இவன் தன் செயலிற்றவறுவானல்லன். நாம் இனி இங்குக் காத்துக்கொண்டிருத்தலாற் பயனில்லை; செல்லுதலே நன்று," என்று எண்ணினன். மீண்டும், "அந்தோ! நாம் சென்றுவிடின், இந்திரன் முதலிய தேவர்களின் முன் செய்து வந்த உறுதி மொழி என்னும்? நாம் நமது உறுதி மொழியை நிறைவேற்றுமற் செல்லின், நம்மைத் தேவர்கள் மதிப்பார்களோ? தேவர்கள் மதியாமை ஒரு புறமிருக்க, இச்செய்தியை அறியின், மண்ணகத்தார்களும் நம்மை அவமதிப்பார்களே! நாம் முன்னே நன்காய்தலின்றி இந்திரன் முதலிய அத்தேவர்களிடம்

அங்ஙனம் உறுதி மொழிகளைக் கூறிவிட்டோம். அன்றியும் தேவர் கோமான் கூறிய இன்மொழிகளையும் கேளாமற் போனேம். தாமுந் தேருமல் அறிவுடைய நண்பர்கள் சொல்வதனையுங் கேளாமல் ஒன்றினைச் செய்வார் துன்பமெய்துதல் இயல்பே யன்றோ? சிச்சீ! நாம் செய்துவிட்ட தவற்றைப்பற்றி எண்ணிக் கொண்டிருத்தலாற் பயன் யாது? நாம் கூறிய உறுதி மொழியை எங்ஙனமேனும் நிறைவேற்றுவதற்கேற்ற வழியைத் தேட வேண்டும். தக்க வழியினுல் முயன்ருல் உலகில் ஆகாததும் ஒன்றுண்டோ? உலகத்தில் தம் ஆயுட்கால முழுதும் ஒரு குற்றமும் செய்யாமல் இருந்த மனிதர் ஒருவரையும் நாம் இதுகாறும் கண்டிலோம். இந்த உலகில் எவ்வித மாந்தர்களும் தங்கள் ஆயுட்காலத்தில் தங்கள் மனம் அறிந்தேனும் அறியாமலேனும் ஏதேனுங் குற்றத்தைச் செய்தே தீருகின்றூர்கள். ஆதலின், நாம் இன்னும் சிறிது காலம் நோக்கியிருப்பின், இம்மன்னனிடத்திலும் ஏதேனுங் குற்றத்தைப் பார்த்தல் கூடும்,'' என்று மனந் தேறி யிருந்தான்.

நிற்க, ஒரு நாள் வேந்தர் வேந்தனுகிய நளன் சந்தியாவந்தனஞ் செய்தற்குக் காலைக் கழுவினுன். அப்பொழுது அவன் காலில் ஓரிடத்தில் சிறிது நீர்படவில்லை. அதைக் கண்டு களி கூர்ந்து,

"நாராய ணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போற்—பாராளுங்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.''

கலிபுருடன் அங்ஙனஞ் சேர்ந்து, அம்மன்னன் உள்ள முழுதையும் தன் வயமாக்கிக்கொண்டான். பிறகு அத்தேவன் புட்கரன் என்னும் அரசனிடஞ் சென்றுன்.

அம்மன்னன் கலி புருடனை வணங்கிச் சிறந்ததோர் ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து, "யாவரும் புகழும்

ஆற்றலமைந்த விபுதரே, நீர் இங்கெழுந்தருளியதால் யான் பெருஞ் செல்வமுடையவனாயினேன். நீர் என்னிடம் எழுந்தருளியதற்குக் காரணம் யாதோ? உரைத்தருளல் வேண்டும்,'' என்றான். கலி புருடன், "வேந்தனே, நீ சொல்லியபடி உன்னைப் பெருஞ் செல்வனாக்க எண்ணியே, யான் உன்னிடம் வந்தேன். 'உள்ளதுபோதும் என்றிராமல் மேன்மேலும் இராச்சியத்தைப் பெருக்குதலில் எப்பொழுதும் நோக்கம் வைத்திருத்தலே மன்னர்களுக்குரிய முறையாகும்,' என்பதை நீ அறிவாயன்றோ? அங்ஙனம் செய்யாத மன்னர்கள் அவ்வித முயற்சியையும் ஆண்மையினையும் உடைய மன்னனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாதல் வேண்டும். அவ்வாறு மற்றொரு வேந்தனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் வேந்தர்களின் நிலைமை, அவர்களைத் தனக்குட்படுத்திய வேந்தர் வேந்தனுடைய நாட்டுக் குடிகளின் நிலைமைக்குந் தாழ்ந்ததேயாகும். அம்மன்னனுடைய குடிகள் தங்கள் மன்னனுக்குக் கீழ்ப்பட்ட மனனர்களைப் பராமுகமாகவே பார்ப்பார்கள். அதனால், அங்ஙனந் தாழ்ந்துள்ள மன்னர்களின் நாட்டுக் குடிகளும் அம்மன்னர்களை அவமதிப்பார்கள். அங்ஙனம் பிறர்க்குத் தான் தாழ்தலின்றி மற்றை மன்னர்கள் எல்லாந் தன்னை வணங்கும்படி விளங்குதலாலன்றோ நளனை உலக மதிக்கின்றது? அம்மன்னனை மண்ணுலகத்தாரேயன்றி விண்ணுலகத்தாரும் எப்பொழுதும் புகழ்கின்றனர். அவனது மேன்மை இத்திறத்தது என்று சொல்லவும் வேண்டுமோ!'' என்றான்.

புட்கரன், "கலிபுருடரே, நீர் இங்ஙனம் சொல்வதன் கருத்து யாது? அதனை எனக்கு நன்கு விளக்குதல் வேண்டும்,'' எனக் கூறினன்.

கலி புருடன், "கல்லினுந் திண்ணிய நெஞ்சம் படைத்த வேந்தனே, நீ அந்நளனினுஞ் சிறந்தவனாக விளங்குதல் வேண்டும் என்பதே என் கருத்து,'' என்றான்.

புட்கரன, "மந்தரே, என்னல் தாங்க முடியாத சுமையைத் தாங்கச் சொல்லுகின்றீர். என்னுடைய தோள்கள் அத்தகைய ஆற்றல் வாய்ந்தனவல்ல. தமயந்தியின் சுயம் வரத்தில் எல்லா மன்னர்களும் பட்ட பாட்டினை உலகம் அறியுமே! அப்போது தமயந்தியை அடைய விழைந்து வந்த இந்திரன் முதலிய தேவர்களும் அஞ்சி மறைந்தார்கள். நளன் தேவர்களால் வெல்ல முடியாத அவுணர்களை அழித்து இந்திரனுக்கு அரசினை அளித்தருளிய வீரசேனனுடைய மைந்தன் என்பதைக் கருதுவீர்! நளன் தன் தந்தையாகிய வீரசேனனிலும் மிக்க ஆற்றலுடையவன். அவன் தோள்கள் மூன்றுலகங்களையுந் தாங்கும் வன்மையுடையன. அவனை நான் சென்றெதிர்த்தல், காளையொன்று சென்று சீரிய சிங்கத்தை எதிர்ப்பதனை யொக்கும். 'தம்முடைய ஆற்றலும் மாற்றார் வன்மையும் ஆய்ந்துணராமல் மாற்றலரை எதிர்த்துப் பொரு மன்னர்கள் கெடுவார்கள்,' என்பதை நீர் அறியீரோ? நான் உம்முடன் பல தேவர்களின் துணையைப் பெற்றுச் சென்றாலும், அவனை வெல்லுதல் முடியாது. அவன் திறம் அத்தகையதாயிருக்க, நீர் கொண்டுள்ள கருத்து எவ்வாறு முற்றும்?" என்றான்.

கலி புருடன் "மதி மிக்க வேந்தனே, நளன் திறத்தையும் உன் திறத்தையும் நான் நன்குணர்வேன். வில்லினைக் கொண்டு பொரும் போரில் களனை எதிர்க்கும்படி உன்னை நான் ஏவுவேனாயின், அது கொல்லும் விடத்தை உண்ணும்படி ஏவுவதேயாகும். வல்லினைக்கொண்டு பொரும் போரில் எதிர்க்கின், நீ எளிதில் நளனை வென்று விடுவாய். நான் துணையாக நின்று, உறுதியாக உனக்கு வெற்றி யுண்டாகும்படி செய்கின்றேன். நீ என்னை நம்பி என்னுடன் வருதி," என்றான்.

புட்கரன், "விபுதரே, நீர் கூறுவனவற்றைப் பொறுமையுடனிருந்து முழுதுங் கேளாமையின், உமது கருத்தை

மாறாக எண்ணிவிட்டேன். என்னை மன்னித்தல் வேண்டும். உமது கருத்தின்படி நளனுடன் சூதாட்டமாகிய போர் புரிய யாதொரு தடையுமில்லை. இதோ வருகின்றேன்,'' என்று சொல்லி ஒரு வெள் விடையின்மீது ஏறிக் கொடியொன்றை ஏந்திக் கொண்டு கலி புருடன் மறைவாகத் தன்னுடன் வர, நிடத நாட்டினுக்குச் சென்று, மாவிந்த நகரையடைந்து, தன்வருகையை அறநெறி மன்னனாகிய நளனுக்குத் தெரிவிக்கும்படி அங்குள்ள வாயிற் காவலர்களுக்குச்சொன்னான். அங்ஙனமே வாயிற் காவலர்கள் சென்று கூறினார்கள். நளன், ''அவ்வேந்தனை இங்கு வரவிடுமின்,'' என்று அவர்களுக்குக் கட்டளையிட, அவர்கள் வந்து அதனைப் புட்கரனுக்குத் தெரிவித்தார்கள்.

### நளன் புட்கரனோடு சூதாடித் தோற்றல்

உடனே புட்கரன் வேந்தர் வேந்தனாகிய நளனது ஓலக்கமடைந்து வணங்கி நின்றனன். நளன் அவனை உபசரித்து, ''வேந்தனே, நீ எடுத்த கொடி என்ன கொடி?'' என்று கேட்டான்.

புட்கரன், ''வேந்தே, சூதாட்டத்தில் பிறரை வெல்லும் கொடி இது,'' என்று கூறினான்.

வாளை மீன்கள் தென்னை மரங்களின் கள்ளையுண்டு வயலிற் பாய்ந்து நீரைக் கலக்கும் வளத்தினையுடைய நிடத நாட்டின் இறைவனாகிய நளன் அதைக்கேட்டு, ''அக்கொடி அன்னதாயின், உன்னோடு சூதாடுதலை ஏற்றுக்கொண்டோம். எம்முடன் சூதாட வருக,'' என்று துணிந்து கூறினான். நளனது அமைச்சர்கள் அவன் சூதாடுதற்கு மனமியைந்ததைக் கண்டு மிகவும் அஞ்சி, 'அந்தோ! நஞ்சினுங் கொடியனாகிய இவ்வரசனது சூழ்ச்சியினால் நம்முடைய மன்னர் சூதாடுதற்கு மனம் ஒருப்பட்டனர். இதனை நாம் தடுத்தல் வேண்டும்,' என்று கருதி, அவனை நோக்கி, ''வேந்தர் வேந்தரே, உமது கொற்றம் நீடு வாழ்க! உமது தொண்டின்கண் நிலைநிற்கும் அடியோம் கூறுவன

வற்றிற்கு நீர் செவி சாய்த்தருளல் வேண்டும். நீரோ அற நெறியிற் சிறிதும் வழுவுதலில்லாத மன்னர். அத்தகைய நீர் நன்னெறியாளர்க்குச் சிறிதும் ஏற்றதல்லாத சூதாட்டத்தை ஆடத் துணிந்ததை நோக்கி நாங்கள் வியப்பும் திகைப்பும் ஒருங்கெய்தினேம்.

'காதல் கவருடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதன் மறுத்த லிவைகண்டாய்—போதிற்
சினேயாமை வைகுந் திருநாடா, செம்மை
நினேயாமை பூண்டார் நெறி.'

சூதாட்டத்தினல் வருங் கேடுகள் அளவில்லனவாகும். அவற்றிற் சில கூறுகின்றோம்: அது,

'அறத்தை வேர்கல்லும் அருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கு—மறத்தையே
பூண்டு விரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ நன்குந் தெரிந்து ?

'உருவழிக்கும் உண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து ?

'ஆயம் பிடித்தாரும் அல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்லர் என்றுரைப்ப தன்றே
வடித்தாரி னூலோர் வழக்கு ?'

என்று கூறினர்கள். நளன், "அதனல் தீது வரினும் வருக; நலன் வரினும் வருக. யாம் மனமியைந்து சொன்ன வாய்மையினின்று தவறேம்," என்று கனன்று கூறினன்.

அதைக் கேட்ட அமைச்சர்கள், "நம் மன்னர் கூறியதை இனி மறுக்கார். இனி இதனைத் தடுத்தற்குரிய வழி யாதுமில்லை," என்று மனம் வருந்தி வாளா விருந்தார்கள்

நளன் தன்னை வெங்கலி தொடர்ந்ததனுலும், தீயவூழ் செலுத்தினமையாலும், தாங்கள் மன்னனது நன்மையையே நாடி நிற்கும் சிறந்த குணமுடைய அவ்வமைச்சர்களுடைய மொழியையு மறுத்துவிட்டுச் சூதாடத் தொடங்கிப் புட்கரனை நோக்கி, "வேந்தனே, நாம் ஒளி மிக்க மணிகளிழைத்த எம் அணிகளைப் பணயமாக வைத்தோம். நீ வைக்கும் பணயம் யாது?" என்முன்.

புட்கரன், "நான் எனது ஏற்றினைப் பணயமாக வைக்கின்றேன்," என்று வைத்தான். கலி புருடன் பாய்ச்சிக்கையி னுருவமாக விருந்து புட்கரனது மனம் போல வஞ்சனையாகப் புரண்டான். நளன் அவ்வணிகளைத் தோற்றுப் பிறகு முறையே தன் மணிகள், அணிகள் சேம நிதி, தேர்கள், யானைகள், குதிரைகள் காலாட்படைகள், நாடு, நகர் முதலிய எல்லாவற்றையும் தோற்றுவிட்டான்.

கற்பிற் சிறந்த நங்கையை விட்டுப் பொது மகள்பாற் செல்லும் ஒருவனைப்போல் திருமகள் அறநெறி மன்னனுகிய நளனை விட்டு வஞ்ச நெஞ்சனுகிய புட்கரன்பாற் சென்ருள். பிறகு புட்கரன் நளனை நோக்கி, "திண்டோள் மன்ன, நான் உன் செல்வ முழுவதையும் வென்று கொண்டேன். இத்தகைய துன்பமெய்திய காலத்தில் அத்துன்பத்தை நீக்குதற் குரியவர்கள் மனைவியர்களே யாவார்கள். ஆதலின், உன் இற்கிழத்தியாகிய தமயந்தியைப் பணயமாக வை," என்ருன்.

### நளன் காட்டுக்கேகல்

நளன் உடனே எழுந்து தமயந்தினிடஞ் சென்று அவளை நோக்கி, "நீர் வளமிக்க விதர்ப்ப நாட்டிறைவனுடைய பொன் மகளே, நாம் இனிச் சூது ஒழிந்தோம். இனி நாம் இந்நகரை விட்டுக் கானகம் போதுவோம்; வருக;" என்றனன். அம்மொழியைக் கேட்ட தமயந்தி சிறிதும் தாழ்க்காது, தன் மக்களை அழைத்துக்கொண்டு மலர்ந்த முகத்துடன் நளனுடன் புறப்பட்டாள். மென்

மைப் . ாகிய கால்களையும், அழகிய இறகுகளையும் உடைய அன்னம், தான் வீற்றிருந்த தாமரை மலரைப் பொல்லாச் சிறகினையுடைய புன்காகம் கொள்ளும்படி விட்டுச் சென்றாற்போல வேந்தர் வேந்தனாகிய நளன் தன் அரியணையைப் புட்கரன் கொள்ள விட்டுத் தன்னிகர் இல்லாத தகைமை மிகுந்த குணத்தரசியாகிய தமயந்தியுடனும் தன் மக்களுடனும் காட்டை நோக்கிப் புறப்பட்டான். கடப்பாரெவரே கடுவினையை? அரண்மனையின்கண் இருந்த அமைச்சர் முதலியவர்களும் நகர மாந்தர்களும் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கித் தாயின் பிரிவினுக்கிரங்கும் கன்றென இரங்கி,

'ஆருயிரின் தாயே, அறத்தின் பெருந்தவமே.
பேரருளின் கண்ணே, பெருமானே,—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றார் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று.
'வடியேறு கூரிலைவேல் மன்னாவோ, உன்றன்
அடியேங்கட் காதரவு தீரக்—கொடிநகரில்
இன்றிருந்து நாளை யெழுந்தருள்க என்றுரைத்தார்
வென்றிருந்த தோளான்தாள் வீழ்ந்து.'

அருண் மிக்க வேந்தனாகிய நளன் தான் செல்லும் வழியினின்று வருந்துகின்றவர்களின் முகத்தை நோக்கியும் மெல்லியல்பினளாகிய தமயந்தியின் வருத்தத்தைத் தன் உள்ளத்திற் கருதியும், தமயந்தியை நோக்கி, "மென்மலரடியாய், இன்று இங்கிருந்து நாளைச் செல்குவமா?" என்றான். அரசுத் தன்மையை நன்குணராதவனாகிய புட்கரன் மாநகரத்து மக்கள் நளனைப் பின்தொடர்ந்து வருந்துதலையுணர்ந்து அழன்று, "நளனைக் கொண்டாடுகின்றவர்களைக் கொல்வோம்," என்று முரசறைவித்தான். பிறைநுதலாகிய தமயந்தி அதனைக் கேட்டு வருந்தினள். போரின்கண் மன்னர்களைப் புறங்காட்டி யோடச்செய்யும் ஆற்றல் வேந்தனாகிய நளன் தமயந்தி வருந்துதலைக்கண்டு

வருந்திப் புன்முறுவல் புரிந்து, "இந்த நகரிலுள்ளவர்களுக்கு இக் கொடுந்தண்டனையாகிய துன்பம் என் நிமித்தம் உண்டாயிற்று. இனி இந்நகரில் இருத்தல் தகுதியன்று," என்று தன் மக்களையும், மனைவியையும் அழைத்துக்கொண்டு நகரை நீங்கிச் சென்றனன்.

புட்கரன், "கொற்றவன்பாற் செல்கின்றவர்களைக் கொல்வோம்," என்று முரசறைவித்து வெற்றியுடன் வீற்றிருக்க, அந்நகரின்கண் இல்லங்கள் தோறும் துன்பம் நிறைந்தது. குழவிகள் பாலைக் குடித்தில. பறவைகள் கூடுகளிலுள்ள தங்கள் பார்ப்புகளுக்கு உணவை அளித்தில. பசுக்கள் கன்றுகளைத் தங்களிடஞ் சேர்த்தில. மலர்கள் நன்கு மலர்ந்து தேனைப் பெருக்கிற்றில. மங்கையர்கள் கூந்தல்கள் மலர்களை மறந்தன. யானைகள் மதப்பெருக்கொழிந்தன. பெண்கள் தங்கள் கைகளில் கிளிகளை வைத்துக்கொண்டு பேசுதலையும் யாழ் இசைத்தலையும் ஒழித்தார்கள். கிளிகளும் பேசுதலை மறந்தன. வாம்பரிகள் தங்கள் கதிகளை இழந்து தளர்ந்தன. கோமறுகில் நீங்குதலற்ற விழாக்களும் அவற்றிற்காகச் செய்யப்படும் ஒப்பனைகளும் நீங்கின. அந்நகரத்து மாந்தர்களின் வாய்கள் யாவு முறுவலை மறந்தன. செம்பொன் மாடங்கள் அகிற்புகையை இழந்தன. பாவலர்கள் பாக்கள் இயற்றுதலை யிழந்தார்கள். யாவரும் இன்பமிழந்தார்கள். அந்நகரமே இருள் சூழ்ந்தது போலிருந்தது. புட்கரன் வெற்றியினைக் கண்டு யாவரும் வருந்தினர். நிற்க,

### நளன் தன் மக்களை வீமன் நகருக்கனுப்புதல்

நளன் தன் மனைவியையும் மக்களையும் அழைத்துக் கொண்டு நெடுந்தூரஞ் சென்றான். அதனால், அம்மக்களிருவரும் கால்நொந்து, "எந்தாய், நாம் கடக்கவேண்டிய வழி முழுதையுங் கடந்து வந்துவிட்டோமோ?" என்று கேட்டு அழுதார்கள். செம்மை புரியும் அருண்மனத்தினனாகிய நளன், செல்வச் சிறுவர்களாகிய தன் மக்களின்

துன்பத்தைக் கண்டும், மாயவிதியின் வலியை நோக்கியும் ஒன்றுந் தோன்றப் பெருதவனுய்த் துன்பத்தினல் வாடிச் சித்திரத்தைப் போல நின்றுவிட்டான்.

பிறகு அவன் மனந்தேறித் தமயந்தியை நோக்கி, "மாதராய், நாம் இவ்விளமக்களை அழைத்துக்கொண்டு காட்டிற்குச் செல்லுதல் மிக்க துன்பத்தை விளைக்கும். ஆதலின், நீ இவர்களை அழைத்துக்கொண்டு உன் தந்தையும் வென்றி வேல் வேந்தனுமாகிய வீமனிடஞ் செல்க," என்றான்.

அம்மொழி செவியுற்ற தமயந்தி, காற்று வீசுதலால் அலைவுற்ற பூங்கொடியை யொக்க நடுக்கமெய்தி, "கொற்ற மிக்க வேந்தே, குடியிற் பிறந்த நன்மங்கையர்க்குப் பிறராற் பழிக்கப்படுங் குற்றமில்லாத அறிவினையுடைய மைந்தரையும் பெற்றுக் கொள்ளுதலாகும்; கொழுநரை யிழந்தாற் பெறுதலியலுமோ? மாதர்களுக்குக் கொழுநனை யொத்தவரான நல்லுறவினர் பிறர் யாவர்?" என்று வினவினள். திண்டோள் மன்னனாகிய நளன் அவற்றைக் கேட்டு,

"கைதவந்தா னீக்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தா னெத்தனையுஞ் செய்தாலு—மைதீர்
மகப்பெரு மானிடர்கள் வானவர்த மூர்க்குப்
புகப்பெறார் மாதராய், போந்து.

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

"சொன்ன கலையின் துறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னம்
குறுநடைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி."

என்றான். தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைப் போன்றவளாகிய தமயந்தி, "ஆற்றலின் மிக்க வேந்தரே, எம்பதிக்கு எழுந்தருள்க ; சொல்லுதற்கரிய செல்வத்தையும் நீர் வளப்ப மிகுந்த நாட்டினையுந் தோற்றமை பிறர்க்குத் தோற்றாது," என்றாள். மானக்கதிர் வேல் மன்னனாகிய நளன்,

"சினக்கதிர்வேற் கண்மடவாய், செல்வற்பாற் சென்றீ
எனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்.

"மன்னராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
இன்னமுதந் தேக்கி யிருப்பரேல்—சொன்ன
பெரும்பே டிகலரேற் பித்தரே யன்றோ
அரும்பேடை மானே, அவர்?"

என்றனன். தமயந்தி, "செங்கோலை யுடைய வேந்தரே, உம்முடைய திருவுள்ளம் இதுவானால், நம்முடைய மக்களை என்னுடைய தந்தையாராகிய விதர்ப்ப வேந்தர் தம் குண்டின புரத்திற்கு அனுப்புக," என்று அயலாரைப் போல வுரைத்தாள்.

என்றும் பிரியாதிருந்த இளங்குதலை மக்களது பிரிவானது நளனது கலங்குதலில்லாத மனத்தைக் கலக்கியது. அவன் கண்களாகிய மலர்களில் நீர்த்துளிகளாகிய பனிகள் நிரம்பித் தமயந்தியின் மனத்தைக் கரைத்தன. அம்மன்னர் மன்னன் தம்முடன் வந்த ஓர் அந்தணனை நோக்கி, "மறை வல்லோய், தாய் தங்களைப் பிரிய நினைத்தலால் அதனைப் பொறுக்காமல் மிகவும் வருந்தும் இம்மக்களை அழைத்துச் சென்று, இவர்கள் தாயின் தந்தையினிடஞ் சேர்த்திடுக," என்றான். அதைக் கேட்ட அம்மழலைவாய்க் கோமக்கள் தங்கள் தங்கள் தந்தையின் திருமுகத்தையும் தாயின் மதிமுகத்தையும் நோக்கிக் கண்களில் நீரை ஆறாகப் பெருக்கி, "நாங்கள் உங்களைப்

பிரிந்து வேறிடத்திலிருக்கும்படி எங்களைப் போக்குகின்றீர்களோ?'' என்றார்கள். பூங்கொடி போன்ற இடையாளாகிய தமயந்தி அம்மக்கள் கூறிய மொழியைக் கேட்டு மனமுருகித் தன் கண்களினின்று பெருகும் நீர் அம்மக்களுக்கு மஞ்சன நீராகும்படி அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டு, பிறகு விட்டு வாடி நின்றாள்.

அப்பார்ப்பான், "இனித் தாழ்க்கின் இவர்களுக்குத் துன்பமிகும்,'' என்றெண்ணிப் பெற்றோராகிய அவ்விருவர் உயிரையும் இரண்டு கைகளினால் வாங்கிக் கொண்டு செல்லும் ஒருவனைப்போல அவ்விரு மக்களையும் தன்னிரண்டு கைகளாலும் பற்றி அழைத்துச் சென்றான்.

நளன் தன் மக்கண்மேற் கண்ணோடவும், பொறுத்துப் பொறுத்துப் பெருமூச்சு வரவும், மனஞ் சோர்ந்து ஒன்றும் பேசாமல் நின்றான்.

பிறகு நளன் தமயந்தியின் இன்மொழிகளால் ஒருவாறு மனந் தெளிந்து அக்கற்பரசியுடன் காட்டிற் புகுந்தான். தமயந்தி அடிகளாகிய தாமரை மலர்கள் காட்டின் கற்களிலும் முட்களிலும் படிந்து சென்றன. அவள் முகத் தாமரையை வெயர்வை நீர்த் திவலைகளாகிய பனி நீர்த்திவலைகள் நிரப்பி அலங்கரித்தன. அவளது வலக் கையாகிய தாமரை மலர் நளனது இடத்தோள் தடத்திற் பொலிவுற்றது. நளனுடைய கண்களாகிய வண்டுகள் பன்முறையும் தமயந்தியின் முகத்தாமரையிற் சென்று படிந்து மீண்டன. களிறும் பிடியும்போல் அவ்விருவரும் கடுஞ்சுரத்திற் சென்றனர்.

தமயந்தியின் துன்பத்தைக் கண்டு கதறுவன போலப் பறவைகள் ஒலித்தன. மலர் முகங் காட்டி இன்னுரை கூறும் நல்லறத்தாரென மலர்ந்து விளங்கும் மரக்கிளைகளிலிருந்து குயில்கள் இனிமையாகக் கூவின.

சூரியன் தன் வெப்பமாகிய கதிர்களைப் பரப்பி அவர்களுடைய மேனியை வாட்டினன். வெய்யோர்கள் நல்ல

வர்கள் என்றும் தீயவர்கள் என்றுங் கவனிப்பார்களோ? அவர்கள் யாவரையுஞ் சிறிதுங் கண்ணோட்டமின்றி வருத்துவார்கள். அஃதவர்களுடைய இயல்பு. ஒருபால் புலிகள் மறுகின. ஒரு பக்கம் கரடிகள் இடித்தன. ஒருபுடை யானைகள் பிளிறின. ஓரிடத்தில் ஆந்தைகள் குழறின. ஒருபால் நரிகள் ஊளையிட்டன. அங்கு ஒருபுடை மலைகளினுடைய குவடுகளின் சார்பினின்றிழிந்து அவற்றின் சாரலிலே படிந்துவரும் அருவிகளைக் கண்டு தமயந்தி நளனை நோக்கி, "அந்தோ! தங்கள் திண்டோள்களாகிய குவடுகளின் சார்பினின்று இழிந்து மார்பாகிய சாரலிற் படிந்து விளங்கும் மாலைகளாகிய அருவிகள் காணப்பட்டிலவே!" என்று கூறிச் சோர்ந்து நின்றாள். அவள் கண்களில் நீர் பெருகித் ததும்பியது. நளன் அவள் நிலையைக்கண்டு அனலிலிட்ட மெழுகென மனமுருகி அவளைத் தழுவி, "என் அன்பின் செல்வமே, நீ இப்பொழுது என் மார்பிற் சூட்டிய நீலோற்பல மலர் மாலையினுஞ் சிறந்ததொரு மாலையும் உலகில் உண்டோ? நின் கண் மாலையைப்போல் எனக்கு வேறு மாலைகள் இன்பஞ் செய்யா. அமுத முண்பார்க்குப் பிற உணவுகள் இன்பஞ் செய்யுமோ? நகரிலிருந்தபோது நான் மற்ற மாலைகளை மன்னர்களின் முறையைக் கருதியே அணிந்துகொண்டிருந்தேன். இப்பொழுது தான் என் விழைவின்படி நின் கண் மலர் மாலைக்குத் தனிச் சிறப்பை அளித்தற்குரியவனானேன். பூங்கொடியே, இவ்வெங்கானில் நடக்கும் வருத்தத்தோடு மன வருத்தமும் மிகுமாயின் நின் மேனி மிகவும் வாடிவிடும். அஃதுன் அன்பார்ந்த கொழுநன் மனத்தைப் புண்ணிற் புளி பெய்தாற்போல வருத்தும்," எனப்பல இன்மொழிகளைக் கூறினான். தமயந்தி மகிழ்ந்து நளனைத் தழுவினாள். மலை அருவிகளிற் படிந்துவரும் குளிர்ந்த காற்று மெல்லென வீசி அவர்களை மகிழ்வித்தது. மலையினின்று சலசலவென்று வரும் அருவிகளின் ஒலி

யாகிய முழவொலியும், அவ்வருவிகள் வரன்றிக்கொண்டு வரும் மலர்களிற் படிந்த வண்டுகளின் ரீங்காரமாகிய இன்னிசை ஒலியும் அவ்விருவரையுங் களிப்பித்தன. தமயந்தி நளனை நோக்கி, "அன்புடையீர், இக்காட்டின் இயல் நல்லோர் தீயோர், நன்மை தீமைகள், இன்ப துன் பங்கள் எங்கும் உண்டு என்பதையும் அவைகள் எங்கும் கலந்தே இருக்கின்றன என்பதையும் நன்கு விளக்குகின் றது. இங்குக் கூரிய முட்களும் முட்களினும் கூரிய கொடு முனைகளை யுடைய கற்களும் நிறைந்த தரைகளும் காணப்படுகின்றன. பஞ்சணையிலும் மெத்தென்று குளிர்ந் துள்ள பசும் புற்களமைந்த நிலங்களும் விளங்குகின்றன. மனங் களிக்கும்படி பாடும் பறவைகளின் இனிய ஒலிக ளும் கேட்கின்றன. மனம் அஞ்சச் செய்யும் கொடிய விலங்குகளின் பேரிடி போன்ற முழக்கங்களும் கேட்கின் றன. இங்ஙனம் மற்றவைகளும் இங்கு அமைந்திருக்கின் றன். நகரத்தின் இயல்பும் காட்டின் இயல்பை யொத்த தெனவே எனக்குத் தோன்றுகின்றது. 'நீ காட்டிற்கு வரின் துன்பமடைவாய்,' எனத் தாங்கள் கூறியதற்குக் காரணம் தாங்கள் என்பால் வைத்த அன்பே யன்றிப் பிறிதன்று என்றே நான் கருதுகின்றேன். தங்களோடு இருக்கும் வரையிலும் எனக்கு நாடும் காடும் ஒன்றே. தாங்கள் என்னைப் பிரியினும் எனக்குக் காடும் நாடும் ஒன்றே. என்னுடைய இன்ப துன்பங்களுக்கு நாடும் காடும் காரணங்களாகா. தாங்கள் என்னைப் பிரி யாதிருத்தலும் பிரிதலுமே முறையே அவற்றிற்குக் காரணங்களாகும்," என்றாள். அங்ஙனம் தமயந்தி கூறிய மொழிகளின் குறிப்புப் பொருளை அறிவிற் சிறந்த வேந்த னாகிய நளன் உணர்ந்து, "என்னுருயிரே, உன்னைவிட்டு நான் பிரியேன், உயிரைப் பிரிந்தும் உடல் நிலைக்குமோ?" என்று கூறி, அந்நங்கையின் கவலையை அகற்றி, அவளு டன் அக்காட்டில் நடக்கலுற்றான்.

## நளன் கலியின் வஞ்சனையால் ஆடையிழத்தல்

அப்பொழுது வஞ்சகக்கலி அவர்களை வஞ்சிக்க எண்ணிப் பொன்னிறம் அமைந்த அழகிய ஒரு பறவையின் வடிவமாய் அவர்களின் முன் தோன்றினன். தமயந்தி அப்புள்ளைக் கண்டு, "அன்புடையீர், இப்பறவை நமது மணத்தினை முடித்து வைத்த அவ்வன்னப் பறவையினும் அழகுடையதா யிருக்கின்றது. நான் என் உயிரென வளர்த்த கிள்ளையையும் பூவையையு மறக்கும்படி இப் பொற்புள்ளைப் பற்றித்தருவீர்," என்று தண்டுழாயலங் கல்மார்பனாகிய சீராமனை, "மான்பிடித்துத் தருக," எனக் கேட்ட மயிலேபோல நளனைக் கேட்டாள். அதைக் கேட்டு நளன் அப்புள்ளைப் பிடிக்கச் சென்றான். அப்பொற்பறவை நளன் கைக்குள் அகப்படுவதுபோலிருந்து அவன் அருகில் வருகையில் இருந்த இடத்தினின்று அகன்று போதலும், மீண்டும் அகப்படுவதுபோ லிருத்தலும், மறுபடியும் அகன்று போதலுமாக அவனைச் சிறிது பொழுது அலைத்துப் பிறகு மிகவுஞ் சோர்வுற்றதுபோல இருந்தது. நளன் தமயந்தியை நோக்கி, "கிளிமொழியாய், இப்பறவை எளிதில் அகப்படுவதன்று. நாமிருவரும் ஒரு துகிலைப் புனைந்து கொண்டு மற்றொரு துணியினால் இதனைப் பிடிக்க வேண்டும்," என்றான். தமயந்தியும் அதற்கு மனமியைய, அவ விருவரும் ஒரு துகிலை உடுத்திக் கொண்டார்கள். பிறகு நளன் தமயந்தியுடன் சென்று மற்றொரு துகிலால் அப் புள்ளை வளைத்தான். அப்புள் அத்துகிலைக் கவர்ந்து கொண்டு இமைப்பொழுதிற் பறந்துபோய் அந்தரத்தில் நின்று, "வேந்தனே, நான் கலிபுருடன். நீ உன் நன்னாட்டைத் தோற்கும்படி செய்தவனும் யானே; அறிந்து கொள்க," என்று சொல்லிற்று. ஒரு துகிலை அப்புள் கவர்ந்து போனதனாலே அவ்விருவர்க்கும் உயிரைப்போல உடையும் ஒன்றாயிற்று. தமயந்தி அப்பறவையை நோக்கி,

"அறம்பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார் மானத்
திறம்பிழைத்தார் தெய்வமிகழ்ந்தார்—புறங்கடையிற்
சென்றூர் புகுநகரம் சேர்வாய்,"

என்று சபித்து ஊழின் வலியை எண்ணிச் சோர்ந்து நின்றாள். பிறகு நளனைப் பார்த்து, "மெய் வகையில் அமைந்த ஒப்பற்ற செங்கோலை யுடையீர், தெய்வமே பல வஞ்சனைகளை ஆய்ந்து செய்து, தங்கள் பிரிவால் உலகம் வருந்தும்படி தங்களுக்குத் தீமை புரிந்ததெனின், அதைத் தடுத்தற்குரிய செயல் யாதுளது?

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்,"

இனி நாம் இவ்விடத்தை விட்டுச் செல்வோம்; வந்தருள்க," என்றாள்.

## நளன் தமயந்தியைப் பிரிதல்

அது கேட்டு நளன் தமயந்தியுடன் சிறிது தூரஞ் சென்றான். சூரியன் அக்காட்டின் வெம்மையை ஆற்றுது மேற்கடலிற் சென்று குளிக்கக் கருதியவன் போலவும், பேரிருளால் பூமியை மறைக்க விரும்பியவன் போலவும் மேற்கடலைச் சென்றடைந்தான். உலக முழுதும் இருள் பரவியது. உலகின் மாந்தர்களுக்கு விளக்கமான நன்னெறியைக்காட்டும் இயல்பினர்களாகிய அவ்விருவரும் இளம்பேய்க்கும் ஒருபொருளுந் தோன்றாத அவ்விருளில் காட்டு வழியில் நடந்தார்கள். அவர்கள், 'நாம் இவ்விரவில் தங்குதற்குரிய இடம் எங்கிருக்கும்?' என்று எண்ணிக்கொண்டு செல்கையில் ஒரு பாழ் மண்டபத்தைக் கண்டார்கள்.

நளன், "மாதர்க்கரசியே, இருளோ மிகுந்து விட்டது. நாம் சார்தற்கு வேறிடமோ இல்லை. ஆதலின், இவ்விரவு இப்பாழ் மண்டபத்தில் கண்டுயில்வோம்," என்று சொல்லித் தமயந்தியினுடன் அம்மண்டபத்தை யடைந்து, பஞ்சணையிற் கண்வளரும் அப் பார்வேந்தன் தரையிற் படுத்துக்

கொண்டு தன் கையைத் தமயந்திக்குத் தலையணை யாக்கினான். அங்குக் கொதுகுகளின் இரைச்சல் அதிகமாயிருந்தது. தமயந்தி அதைக் கேட்டு, "யாழின் இன்னிசையைக் கேட்டருளும் எம்மையனுடைய தெய்வத் தன்மையினையுடைய செவிகள் இக்கொதுகுகளின் புன்பாடலைக் கேட்பனவாயினவே!" என்று சொல்லி மனஞ்சோர்ந்து கண்ணீரைப் பெருக்கினாள்.

நளன், "நீள்விழி மடவாய், இவ்வுலகில் பண்டை வினைப் பயனைக் கடக்க வல்லார் யார்? வினையின் பயனை ஒவ்வொருவரும் நுகர்ந்தே ஒழிக்க வேண்டும். இதற்காக மனநடுங்கி வருந்திக் கண்ணீர் பெருக்கற்க," என்றுரைத்தருளித் தமயந்தியின் கண்ணீரைத் தன் கைகளால் துடைத்தான். தமயந்தி, "அந்தோ! மன்னர் மன்னரே, உமது மெய் காத்து வரும் மெய்காப்பாளரையும் நீர் ஏவியவற்றைச் செய்யும் ஏவலாளரையும் உமது மெல்லணையோடு கூடிய பள்ளியறையையும் இங்குக் கண்டிலேன்," என்று சொல்லிக் கலங்கினாள். அவள் கண்களில் நீர் பெருகியது. நளன் "திருமலர்க் கண் மடவாய், காட்டிலுள்ள பறவைகளும், நள்ளிரவில் இரை தேடும் விலங்குகளும் துயின்றுவிட்டன. இந்நள்ளிருளில் நீ யினி விழித்திருத்தல் நன்றன்று," என்றுரைத்துத் தமயந்தியைப் படுக்கும்படி செய்தான். 'துன்ப மிகுதற்குக் காரணமான இந்நள்ளிரவில் இம்மெல்லியலாள் புழுதியின்மேற் படுத்துத் துயில்வதைக் கண்டும் என் கண்கள் பொடியாகாம லிருக்கின்றன. என் உயிர் உடலைவிட்டுப் பிரியாமலிருக்கின்றது. என் உள்ளம் வெடிக்காமல் இருக்கின்றது. அந்தோ! இவை என்ன வியப்பு!' என்று சொல்லி மனஞ்சோர்ந்து தரையிற் சாய்ந்தான். தமயந்தி, "எம்மிறைவனுக்கு இம்மண்டபத்தில் அணைக்கு மாறுக விரிப்பதற்கு என் முன்றானையும் இல்லையே!" என்றழுதாள். நளன், "என்னுயிரனையாய், இன்னும் நீ துயிலா திருத்தலாகாது. இனித் துயில் கொள்க," என்று

தமயந்தியைத் துயில்வித்தான். அவளும் காட்டில் நடந்த சோர்வினல் துயின்றுவிட்டாள். நளன் அவளைக் கண்டு, "அந்தோ! இவளே, நல்லறமிக்க வேந்தனுகிய வீமன்தன் செல்வப் புதல்வி; அன்றியும், தேவர்களும் பெற விரும்பின மணமாலையை எனக்களித்தவள். இவள் பூமியே அணையாகக்கொண்டு துயின்றனள் என்றல், உலகில் முன்வினையின் பயனுல் துயரமடையாதார் யார்?" என்று எண்ணினன். அப்போது கலியின் வலியினுல் அம்மன்னர் மன்னன் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அஃது அக்கோமகள் படுந் துன்பத்தைத் தான் காணுமலிருக்கும் பொருட்டு அந் நங்கையை அக்காட்டின்கண் விட்டுச் செல்ல வேண்டும் என்பதே. அதனுல் அவ்விருவர்க்கும் ஒன்றுய் இருக்கும் உயிரைப்போல ஒன்றுயிருக்கும் ஆடையை அரிய எண்ணினன். வஞ்சகக் கலியும் வேந்தர் பிரான் எண்ணியதை அறிந்து, "நமது எண்ணத்தை முடித்தற்கு இதுவே தக்க சமயம்," என்று கருதி, ஒரு வாளாகி அவ்வேந்தன் பக்கத்திற் கிடந்தான். மன்னர் பிரான் அதை எடுத்துத் தங்கட்கொன்றுயமைந்துள்ள உயிரையும் அன்பையும்பற்றி அரிவதுபோல் அத்துகிலை அறுத்துவிட்டான். பிறகு தான் பிரியின் அக்கோமகள் படுந் துன்பங்களை எல்லாம் எண்ணித் திகைத்து நின்று வருந்தினன். 'இவளை விட்டு நீங்குதலே நன்று' என்று எண்ணுவான். 'நாம் பிரியின், இவள் வெய்யிலிலிட்ட புழுப்போலத் துடித்து, அனலிலிட்ட வெண்ணெய் என மனங்கரைந்து, நீரினின்று எடுத்துத் தரையிலெறிந்த கொடி என வாடிப்போவாளே! இவள் நிலைமையை அறிந்திருந்தும் இவளை நாம் விட்டுப் பிரிதல் நன்ருகுமோ?' என்று கருதுவான். "இவள் நம்முடனே வருவாளாயின், இக்காட்டில் நடத்தலாலும், நம்முடைய துன்பத்தைக் கண்டு வருந்துதலாலும் இவளுடைய மேனி மிகவும் வாடிப் போகும். நாம் விட்டுச் செல்லின், இவள் தன் தந்தையின் நகரை அடைந்து தன் மக்களைக் கண்டு சற்றே

மனம் தேறுவாள். ஆதலின் இவளைப் பிரிந்து போதலே நன்று,'' என்று நினைப்பான். "அந்தோ! இவளை நாம் விட்டுப் பிரியின், இக்காட்டிலுள்ள கொடிய விலங்குகளையும் பாம்பு முதலியவைகளையுங் கண்டு அஞ்சி நடுங்குவாளே! இவளை விட்டுப் பிரியின், நம்முடைய அன்பு என்னும்? ஆ! கொடுமை!! கொடுமை!!!'' என்றெண்ணுவான். இங்ஙனம் அம்மன்னன் மனம் அவளை விட்டுப் போதலு மீளுதலுமாகத் தயிர் கடையும் பெண்களின் கைபோல ஊசலாடியது. இவ்வாறு ஊசலாடியதாகிய அம்மன்னர் மன்னன் மனம் வஞ்சக் கலியின் வயத்ததாய்க் கடைசியில் அக்கற்பரசியைப் பிரிந்து செல்லுதற்குத் துணிந்தது. அதனால், அவ்வேந்தர்பிரான், "இவ்வரிய கானகத்துறையும் தெய்வங்களே, என்பால் நீங்காத அன்புடையாளாகிய இத்தேமொழியாளை இப்பேரிருளில் அயலாரைப்போல விட்டுச் செல்கின்றேன். அறத்துறையிற் பிறழாத செங்கோல் மன்னனாகிய வீமன்றன் செல்வப்பெண்ணாகிய இம்மடக்கொடியை நீங்கள் தண்ணளி செய்து காத்தருளுங்கள்,'' என்று அக்கானுறை தெய்வங்களை நோக்கி வணங்கிக் கூறி, அக்கோமகளின் உயிர் அவள் அறியாதபடி அவள் உடலை விட்டுச் செல்வதுபோலச் சென்றனன்.

### தமயந்தி நளனைக் காணமல் வருந்தல்

முத்துக்களின் வரிசைகள் அமைந்த தாமரை மலர் போன்ற முகத்தினளாகிய அம்மெல்லியலாளுடைய கண்களாகிய கருங்குவளை முகைகள் சிறிது மலர்ந்தன. உடனே அவள் தன் கைகளை நீட்டித் தடவினள்; தன் உயிர்க்குயிரான அன்பனைக் கண்டிலள்; "வேல் வேந்தே, எங்குற்றாய்?'' என்றாள். மீண்டும் தரையாகிய அமளியைத் தடவிப் பார்த்துத் தன் கொழுநனைக் காணாமையினால், "ஐயகோ!'' என்று அலறி, எழுந்து வேடன் அம்பு பட்டு ஆற்றாது ஓடும் மயில்போல அங்குமிங்குமாக ஓடித் தன் கூந்தலின்கண் மொய்த்திருந்த வண்டுகள் ஓடவும், கண்

ணீர்த் தாரைகள் காதுகளிலேோடவும், மின்னற் கொடியும் கரிய முகிலும் வெற்றுத் தரையில் வீழ்வதுபோல வீழ்ந் தாள்.

கோழிக் குலங்கள் தமயந்தியின் துயரைக் கண்டு ஆற் ருதனபோலச் சிறகாகிய கைகளால் வயிற்றில் அடித்துக் கொண்டு, சூரியனே, 'தேர் ஏறி விரைந்து வருக,' என் றழைப்பனபோலக் கூவின.

சூரியன் தமயந்திக்கு அச்சம் விளைவதற்குக் காரண மாகிய இருள் அழியும்படி தோன்றி அவள் கொழுநன் சென்ற வழியை அவளுக்குக் காட்டுவான்போலத் தன் கதிர்களாகிய கைகளை நீட்டினுன்.

தமயந்தி சிறிது தெளிந்தெழுந்து, 'தேர் வேந்தரே,' என்றழைப்பாள்; 'நான்செய்த பிழை யாது?' என்பாள்; 'அந்தோ ! நான் அடைந்த இத்துன்பக்கடலின் கரையைக் கண்டிலனே!' என்பாள்; 'என்னை இக்கொடுங்கானில் விட் டுச் சென்ற மன்னவரே, என்னருகில் வந்து நீ துன்பப்படு வதற்குக் காரணம்என் என்னுததது என்!' என்பாள். இங் ஙனம் வருந்தும் அக்கோமகள்,

"நேரலார் போரேறே ! நிடதத்தார் கோமானே !
ஆரவரை மார்பா ! அளியே னுயிர்க்குயிரே !
காரிருள்வா யான் புலம்பக் கானகத்து விட்டகன்றும்
சாரலையால் இன்னும் இதுவோ நின் தண்ணளியே ?

"நெஞ்ச மெலிவே னினது தடந்தோளும்
கஞ்ச மலர்முகமுங் காணுது கண்பனிப்ப
மஞ்சுதவழ் வெற்பெறிந்த வச்சிரத்தோன் அன்றளித்த
விஞ்சை பயின்று விளையாட் டயருதியோ ?

"ஞாலத் திருணடப்ப நாட்கமலம் வாய்நெகிழ
வேலைத் திரைமுகட்டில் வெய்யோன் எழுந்தனனுல்
மாலைக் கதிர்வடிவேல் மன்னர் பெருமானே !
காலைக் கடவ கடன்கழிக்க வாராயே."

என்றுரைத்து வருந்தித் தரையை நோக்கினள். அப்போது அந்நங்கைக்குத் திண்டோள் மன்னனாகிய நளனது அடித் தாமரையின் சுவடு காணப்பட்டது. அதைக் கண்டவுடன், 'ஆ!' என்றலறித் தன் கண்ணாகிய கடலினின்று பெருகின வெள்ளத்தில் விழுந்தாள். வானுடர் பெற்றிலாத அமுத மாகிய அம்மடமான்,

> "வெறித்த இளமான்காள்! மென்மயில்காள்! இந்த
> நெறிக்கண் நெடுநாழி வாழ்வீர்—பிறித்தெம்மைப்
> போனாரைக் காட்டுதீரோ?

என்று அரற்றினாள்.

## தமயந்தியை மலைப் பாம்பு விழுங்குதலும் வேடன் அவளைக் காத்தலும்

அப்போது பெரும்பசியினால் யானை ஒன்றை விழுங்கிய தால் மோடாகிய வயிற்றினையுடைய மலைப்பாம்பொன்று அங்கு வந்தது. அவ்விள மங்கை எழுந்து, அதனை அறி யாது அதனருகிற் சென்றாள். அப்பாந்தள் சந்திரனைப் பற்றுங் கரும்பாம்புபோல அச்செல்வியைப் பற்றி மார் பளவு விழுங்கியது. அதனால் அக்கோமகள் புலியின் வாயிற்பட்ட புல்வாய் எனத் துடித்து, "எதிர்த்தவர்தம் உயிர் பருகும் இலங்கொளிசேர் வேல் மன்னரே, உம் தாளடைந்து வாழ்கின்றவளாகிய நான் இக்கொடிய பாம்பினால் விழுங்கப்பட்டு மாளுமுன் வந்து காக்கமாட் டீரோ!" என்றரற்றினாள். "தேர் வேந்தே, இன்னும் திரு முகத்தைக் காணாமல் இவ்வரவின் வாயிலகப்பட்டு நீக்க முடியாத பெருந் துயரோடு மாள்கின்றேன்," என் றழுதாள். "கொற்றவரைப் பிரிந்தவுடன் மாளாம லிருந்த வல்வினையையுடைய நான் பெற்றெடுத்த மக் காள், நீங்களேனும் கொற்றவரைக் காண்கின்றீர் களா?" என்று புலம்பினள். "என் நாயகரே, நாம் அடைந்த இக்காட்டில் நான் இப் பாம்பின் வாயிற்பட்ட

தனல் என் உயிர் தளர்கின்றது! எனக்கு விடை தந்தருள் வீர்,'' என்று கை கூப்பித் தொழுதாள். சிவந்த தலை மயிரை யுடையவனும் வெண்மையாகிய சங்கக்குழையைக் காதிலணிந்தவனுமாகிய ஒரு வேடன் அப்போது கையிலே வில்லையேந்தி அங்கு வந்துகொண்டிருந்தான். அவன் தம யந்தியின் அழுகுரலைக்கேட்டு, அவளருகில் வந்தான். அவனை அக் கோமகள், ''ஐயன்மீர் கொடிய பாம்பின் வாயில் அகப்பட்டேன். உம்மை யான் அபயம் என்றடைந் தேன், என்னைக் காத்தருளுவீராக,'' என்று அரற்றினள். அதனைக் கேட்ட வேடன் உடனே அப்பாம்பைக் கொன்று தமயந்தியை அதன் வாயினின்று மீட்டனன்.

## வேடன் தமயந்தியின் கோபத்தால் இறந்தல்

அக்கோமகள் அவ் வேடனை நோக்கி, ''ஐயன்மீர், யான் அழியாதபடி என்னை இப் பாம்பின் வாயினின்று காத்தருளினீர். இது காலத்திற் செய்த பேருதவியாகும்.

''காலத்தி னற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.''

என்பர். அங்ஙன மிருக்க, நீர் காலத்திற் செய்த இப் பேருதவிக்குக் கைம்மாறு உண்டோ?'' என்றாள். அதைக் கேட்டு வேடன், ''பைந்தொடீ, உன்னை என் கண்ணெனக் காக்கின்றேன். என்னுயிர் நீ. என்னுடன் வருக,'' என்றான். அதைக்கேட்ட தமயந்தி மெய்பதைத்து மனங் கலங்கிப் பெருமூச்செறிந்து கண்களில் நீர் பெருக ஓடினாள். வேடன் பின் தொடர்ந்தான். அம்மெல்லியல் தீக் கட்புலி தொடர ஓடும் சிறிய மானைப்போலச் சுற்றி ஓடினாள்; அங்ஙனம் ஓடியும், அவ் வேடன் கையினின்று தப்ப முடியாமையின் மனமழன்று அவனைச் சீறி விழித்துப் பார்த்தாள். அவ்வளவில் அவன் நீறுகி நிலத்தில் விழுந் தான்.

## ஒரு வணிகன் தமயந்தியை அழைத்துச் சென்று, சேதி நாட்டிற் சேர்த்தல்

தமயந்தி அடைந்தார்க்கு அச்சத்தை உண்டாக்கும் அக் காட்டிலே தான் தனியிருத்தலைக் கருதி; "என்முன்னை வினை மிகக் கொடிது. ஆதலினாலன்றோ என்பால் அன்பும் அருளுமிக்க என்னிறைவர் என்னைத் துறந்துசென்றனர்? தீவினையாட்டியாகிய என்னை மணந்ததனாலேதான் என் இறைவர் தமது நாட்டையிழந்து காட்டிற் புகுந்து வருந்தலானார். இக்கானில் இன்னும் எனக்கு எவ்வெத்துன்பங்கள் நேருமோ! அறியேனே!", என்று மிகவும் வருந்தினாள். நற்குணம் வாய்ந்த ஒரு வணிகன் அப்போது அங்கு வந்தான். அவன் அக்கோமகளைக் கண்டு, " திருமகளைப் போன்றவளாகிய இம் மாதரசி யாரோ!" என்றையமுற்று, "அன்னாய்! நீ எக் குலத்தாய்? யாருடைய பெண்? உன் பெயர் யாது?" என்று கேட்டான். அவள், " ஐயன்மீர், யான் மன்னர்குல மடந்தை. விதர்ப்ப நாட்டரசருடைய மகள். என் பெயர் தமயந்தி என்பது. முன்னை வினைப் பயனால் நாட்டையிழந்து நானும் என் கொழுநரும் இக் காட்டுக்கு வந்தோம். இங்கு என் கொழுநர் என்னை விட்டுச் சென்றார். அவரைக் காணாமையின் அலைந்து வருந்துகின்றேன்," என்றாள். அவ்வணிகன், "அன்னாய், இக்கானில்நீ நின் கொழுநரைத்தேடிக் கண்டடைதல் முடியாது. நீ இங்குத் தனியாக இருத்தலும் நன்று அன்று. நீ என்னுடன் வருக. உன்னை நான் சேதி நகரிற் கொண்டுபோய் விடுகின்றேன்," என்று கூறி அக்கோமகளை அழைத்துச் சென்று சேதி நகரிலே விட்டுத் தான் செல்லவேண்டிய இடத்திற்குச் சென்றான்.

அந்நகரத்தரசியின் தோழியர்கள் தமயந்தியைக் கண்டு வியப்பெய்தித் தங்கள் அரசியிடம் விரைந்து சென்று, "எங்கள் அன்புள்ள அரசியே, வாழ்க. நாங்கள் வழியில் பொற்பாவையன்னாளாகிய ஒரு மடந்தையைக் கண்

டோம். அவள் அழகினில் திருமகளைப் போலிருக்கின்ருள். ஆனல், அந் நங்கை அற்ற துகிலும் அருதொழுகுங் கண்ணீரும் உற்ற துயருமுடையவளாய் இருக்கின்ருள்,'' என்ருர்கள். அவ்வாரசி அம் மொழிகளைக்கேட்டு அவர்களில் ஒருத்தியைப் பார்த்து, "புனை இழையாய், நான் அம்மடமயிலை யார் என்றறிதல் வேண்டும். நீ விரைந்து சென்று அவளை அழைத்து வருக,'' என்ருள். அத்தோழியும் அவ்வாறே சென்று தமயந்தியை அழைத்து வந்து சேதி நாட்டரசியின்முன் விட்டாள். அவ்வரசி தமயந்தியைக் கண்டு வியப்படைந்து, "பைந்தோடியே, நீ செந்தாமரை மலர்த் திருவே போன்றிருக்கின்ருய். உன்னைக் கண்டு என் மனம் மிகவும் வருந்துகின்றது. உன்னைக் கண்டவுடன் யாது காரணத்தாலோ எனக்கு உன்பால் அன்பு பெருகுகின்றது. உன் வரலாறு யாது? உள்ளபடி கூறு'', என்ருள்.

தமயந்தி, "அன்னுய்! என் கொழுநர் என்னைத் தனியாகக் கானிலே விட்டுச் சென்றனர். அவரைத் தேடித் திரிந்து காணமல் இந்நகர்க்கு வந்தேன்,'' என்று கண்களினின்று நீர் வரவும், மொழிகள் தடுமாறவுங் கூறினள். சேதி நாட்டரசி, "இவள் துயரக் கடலில் மூழ்கியிருக்கின்ருள்; ஆதலின் இப்பொழுது இவளை இதற்குமேல் ஒன்றுங் கேட்டல் கூடாது; பிறகு இவளது வரலாற்றினை நன்கறிவோம்,'' என்று கருதி, "தாழ்குழலாய்! உன்னுடைய தலைவரைத் தேடி அழைத்து வரும்படி நான் சில ஒற்றர்களை அனுப்புகின்றேன். அவர்கள் உன்கொழுநரைத் தேடி அழைத்துவரும் வரையினும் நீ என்னுடன் இனி இருத்தி,'' என்ருள். தமயந்தியும் அதற்கொருப்பட்டு, அவ்வரசியினிடம் தங்கினள்.

### சுவேதன் தமயந்தியைக் கண்டு அவள் பெற்ருேரிடம் அழைத்துச் செல்லுதல்

தமயந்தி இவ்வாறிருக்க, அவளுடைய பெற்ருேர்களாகிய வீமன் என்னு மன்னர் பிரானும் அவன் மனைக்

கிழத்தியாகிய அரசியும், தம்மகளும் மருமகனும் நாட்டினை யிழந்து சென்ற செய்தியை உணர்ந்து துன்பக்கடலில் ஆழ்ந்து, 'இதற்கென் செய்வோம்!' என்றேங்கினார்கள். அப்போது மறையவனாகிய சுவேதன் என்னும் ஒற்றன் அவர்கள்பா லடைந்து, அவர்கள் மனந் தேறுதற்குரிய மொழிகளைக் கூறினான். மன்னர் பிரானாகிய வீமன் அவ்வொற்றனை நோக்கி: "மறை வல்லோய், கடலில் சுழற் காற்றினால் திசை தப்பி தயங்கும் கலத்தினுள்ளார்க்கு ஒரு கரை தோன்றினதுபோல இப்போது எங்கள் முன் தோன்றினாய். நீ சென்று நம்முடைய அருமைச் செல்வியாகிய தமயந்தியும் அவளுடைய கொழுநனாகிய நளனும் சென்றிருக்கும் இடத்தினை அறிந்து வருக," என்று கூறி, அவனை அனுப்பினான். அம்மறையவன் அங்ஙனமே சென்று, பல நாடுகளிலும் காடுகளிலும் புகுந்து, வெய்யோன் கதிர்கள் சென்று தங்கும் இடங்களிலெல்லாந் தேடி, அவர்களைக் காணாமையின் மிகவும் வருந்தி, இறுதியிற் சேதி நாட்டை யடைந்து பின் அந்நாட்டின் நகரத்தைச் சார்ந்து, அரண்மனையிற் சென்று அங்கு அரசனுக்குத் தன் வருகையின் காரணத்தினைத் தெரிவித்தனன். அம்மன்னன் அம்மறையவனை அழைத்துச் சென்று தன் மனைவியின்பாலுள்ள தமயந்தியை அவனுக்குக் காட்டினன். அவ்வொற்றன் அவள் தமயந்தியே என்றதை அறிந்து, 'மகளே!' என்று அவளைத் தழுவிக் கொண்டு அரற்றினன். அக்கோமகளும் அம்மறைவலாளன்றன் அடிகளில் விழுந்து புலம்பினாள். அவ்வொற்றன் கண்ணீர் அப்பாவையின் உடலிற் பெருகியது. அப்பொற்றொடியின் கண்ணீர் அம்மறையவன் கால்களைக் கழுவிற்று. அங்கு அவர்களைக் கண்டோர்கள் யாவரும் உடலும் உயிரும் ஒக்கச் செயலற்று நின்றார்கள். மறையவன் பிறகு சேதி நாட்டரசியை நோக்கி, 'அரசியே, இம்மாதராள் உன்னுடைய புதல்வி; உன்னுடன் பிறந்தாளுக்கும்

அவள் கொழுநாகிய விதர்ப்பர் கோனுக்கும் இன்ப விளக்கு; மன்னர் மன்னனாகிய நளன்றன் ஆருயிர். சோர்ந்து சடைபற்றிய கூந்தலும், ஒளி குன்றிப் பாதி யாய்க் கிழிந்துள்ள ஆடையு முடையவளாய், வெவ்விய துயரத்தை மதித்தறிவதற்கு ஓராணியாய் நின்று இவள் படுந் துன்பத்தினைக் கண்டாயோ!' என்று கூறி அரற் றினன்.

சேதிநாட்டரசி அப்பொற்கொடி தன் மகள் என் பதை யறிந்த உடன் தியக்கமடைந்து மனந் தடுமாறி, அப் பொன் போல்வாளாகிய செல்வியின்மேல் விழுந்து அரற்றி, "ஆ! என்னருமைச் செல்வமே, நின் அன்னையும் யானும் சுதர்மன் என்னு மன்னர் பிரானுடைய புதல்வி யர்களாவோம். உன்னைக் கண்டவுடன் என் மைந்தனாகிய சுபாகுவைக் காண்கையில் உண்டாகும் அன்பு நின்பா லுண்டாயிற்று. அப்பொழுதே, 'இதற்குக் காரணம் யாது!' என என் மனங் கவன்றது. என் கண்ணின் மணி யன்ன நீ சீருஞ் செல்வமுமுடையவளா யிருக்கையில் நான் உன்னைக் காணமல் இந்நிலையிற் காண நேர்ந்தது என் கண் கள் செய்த தீவினையே. உன் பெற்றோர்கள் நீங்கள் நாடிழந்து காடு போந்ததை யுணர்ந்து எவ்வாறு வருந்தி னர்களோ? அவர்கள் கரை காணாத துன்பக் கடலில் மூழ்கியிருப்பார்கள். நீரிற் பொலியும் பூங்கொடியைக் கரையி லெடுத்தெறிவாரைப் போல உன்னைத் தனியாக விட்டுச்சென்ற மன்னர் மனம் மிகவும் வன்மையுடையதே. கழுவப்படாத மணியைப்போல் மாசு படிந்த உன் வடிவை யும், செம்மை செய்து புனையப்படாமல் விரிந்த கூந்தலை யும், பாதியாகக் கிழிக்கப்பட்டு ஒளி குன்றிய ஆடையை யுங் கண்டும் என் மனம் பிளந்து போகாமலிருக்கின்றதே! மாசில் பொன்னே! மணியே! தேனே! ஆசில் கற்பின் அரும்பெறற் பாவாய்! யான் உணரின் இங்ஙனம் வருந்து வேன் என்பது கருதியோ உனது உண்மை வரலாற்றினை

எனக்கு விளங்க உரையாதொழிந்தாய்?'' என்று அழுதனள்.

அதனைக்கண்டார் மனம் அனலில் இட்டபட்ட மெழுகென உருகியது. அங்கிருந்தார் அனைவர் கண்களிலும் நீர் அருவியெனப் பெருகியது. சேதி நாட்டிறைவன் அதனைக் கண்டு தானடைந்த துயரினின்று தேறி, அவ்வரசியின் துன்பத்தை ஆற்றினன். பிறகு அவ்வரசன் அரசியை நோக்கி, "நங்காய், இச்செல்வியை விதர்ப்ப நாட்டிற்கு அனுப்பினல் அங்கு தன் செல்வ மக்களைக் கண்டேனும் துயரம் சிறிது தணிவாள்,'' என்று கூறினன். அவ்வரசியும், 'இவளது துயரம் சிறிதேனும் தணிதற்கு அதுவே தக்க செயல்' என்றாள். பிறகு அரசன் சில காவலர்களைத் துணையாக்கி, அம்மறையவனுடன் தமயந்தியைக் குண்டினபுரத்திற்கு அனுப்பினன். அங்ஙனம் அனுப்புகையில் தமயந்தி அவ்வரசியையும் அரசனையும் வணங்கினள். அவளுடைய அன்பு வெளிப்பட்டாற்போலக் கண்ணீர் அவர்கள் கால்களைக் கழுவியது. அவர்கள் அச்செல்வியை அன்புடன் எடுத்தணைத்து முத்தமிட்டு வாழ்த்தி விடை கொடுத்தனுப்பினார்கள்.

### தமயந்தி பெற்றோரைச் சார்தல்

நளனையும் தமயந்தியையுந் தேடிச் சென்ற சுதேவன் பல நாளளவும் வராமையின் விதர்ப்பர் கோமானும் கோமாட்டியும் மிகவும் வருந்தி, "அந்தோ! அம்மறையவன் நஞ்செல்வியையும் அவள் கொழுநனையும் இன்னும் கண்டிலனோ! கண்டிருப்பின், அவர்களை இதுகாறும் அழைத்துக்கொண்டு வராமலிருப்பனோ! அவர்கள் எங்குச் சென்றார்களோ! எவ்வித நிலையிலிருக்கின்றார்களோ!'' என்று பல எண்ணிக் கவலையி லாழ்ந்தார்கள். அவர்கள் கொண்ட அக்கவலை சூரியனைக் கண்ட பனியென மறையும்படி சுதேவன் தமயந்தியை அழைத்துக்கொண்டு போய் அவர்களிடஞ் சேர்த்தனன்.

மக்களையும் கைவிட்டுக் கொழுநன்பின் காட்டிற்குச் சென்ற அம்மடவன்னம் போந்த பொழுது வாயிலில் உள்ளவர்களும், அரண்மனையில் உள்ளவர்களும், அந்தப் புரத்தி லுள்ளவர்களும் மயங்கித் திகைத்தார்கள். உறவினர்களிற் சிலர் வருந்தி அரற்றினர். சிலர் அந்நங்கையின்மேல் விழுந்து தழுவிக்கொண்டனர். சிலர் அப்பாவையின் கற்பை வியந்து தொழுதனர். சிலர் அப்பைந் தொடியைச் சூழ்ந்து கொண்டனர். இங்ஙனம் அந்நகரம் அன்பினாலே கடல் கரை புரண்டு வந்ததே போன்றது.

அப்பொற்பின் செல்வி தன் தந்தையை முன்னே கண்ட மாத்திரத்தில் கண்கள் நீர் சொரியவும், மனங் கலங்கித் திகைத்துச் சுழலவும், 'எந்தாய், யான் பட்டதே...!' என்று சொல்லிச் சென்று அக்கோமானுடைய திருவடிகளில் வீழ்ந்தாள்.

அவ்வமுதன்ன செல்வியின் தாயும் தந்தையும் அவளை அந்நிலையிற் கண்டக்கால் மனமாற்றுவரோ? அவர்களுடைய உடல் சோர்வுற்றது; நாவில் நீர் வற்றியது. அவர்கள் கண்களினின்று பெருகிய புனல் அவளை மஞ்சனமாட்டியது. அவர்களை யொத்த அன்பினர்களாகிய உறவினர்கள் தத்தங் கண்ணீர்ப் பெருக்கிலே மூழ்கினார்கள்.

அம்மழலை மொழியாளுடைய தாயாகிய விதர்ப்ப நாட்டிறைவன் மனைவி, பொன்னை யொப்பவளாகிய அந்நங்கையைக் கட்டியணைத்து, "என்னருமைச் செல்வமே, குளிர் மிக்க நள்ளிருளில் பாழ் மண்டபத்திலே உன் கொழுநர் உன்னைத் தனியாக விட்டுச் சென்றபோது என்னென்ன நினைந்தனையோ! யாது செய்தாயோ!" என்று புலம்பினாள். இது நிற்க.

---

# 3. கலி நீங்கு காண்டம்

## நளன் வேற்றுரு அடைதல்

நளன் தமயந்தியைப் பிரிந்து செல்கையில் அக்காட்டில் ஓரிடத்தில் புகை ஓங்கி எழுதலைக் கண்டு, அதன் அருகிற் சென்ருன். அங்கு மரங்களைப் பற்றிச் சூழ்ந்து எரிகின்ற நெருப்பினுக்கிடையில் அகப்பட்டுக் கொண்ட ஓரரவரசு அம்மன்னர் மன்னனை நோக்கி, "வேந்தே! இத் தீயினின்று என்னைக் காத்தருள்க," என்றது. அவ்வேந்தர் வேந்தன் அப்பாம்பினைக் கண்டு மனமிரங்கித் தீக்கடவுள் தந்த வரத்தை மனத்திற் கருதி அவ்வரவின் அருகிற் சென்ருன். உடனே நெருப்புத் தணிந்தது. அவ்வரசன் அவ்வரவரசை எடுத்துக்கொண்டு சிறிது தூரம் சென்ருன். அப்போது அவ்வரவரசு நளனை நோக்கி, "வேந்தே, நின்னடிகளால் இங்கிருந்து பத்தடி நடந்து பத்தாமடியில், 'தச' என்று சொல்லி என்னைப் பூமியில் வைத்தருள்க," என்றது. அம்மன்னர் மன்னன் அவ்வாறே பத்தடி நடந்து பத்தாவது அடியில் 'தச' என்று கூறி அவ்வரவரசினைப் பூமியில் வைத்தனன்.

அப்படி வைத்தவுடன் அவ்வரவம் அம்மன்னன் மெய்யில் நன்ருய்ப் பொருந்தும்படி தன் எயிற்றை வைத்தது.

அவ்வரவரசு கடித்ததனல் அம்மன்னனுடைய அணி நெடுந்தோள்கள் ஏழைகளுக்கு ஒன்றுங் கொடாதார் செல்வம் போலக் குறைந்து போயின. அவனுடைய உடலின் ஒளியும் மேகத்தினல் மறைக்கப்பட்ட சூரியன் ஒளிபோல மங்கியது. குன்ருத குணப்பெருங் குன்றமாகிய அவ்வேந்தர்கோன் அவ்வரவரசை நோக்கி, "வன்மை மிக்க அரவரசே, நினக்கு யாதொரு தீமையும் புரியாத என்னை நீ தீண்டி எனது உருவினை இங்ஙனம் வேறுபடுத்தியதற்குக் காரணம் யாது?" என்று கேட்டான்.

அவ்வரவரசு, "வெற்றி வேந்தே, யான் ஓர் அரவரசன். என் பேர் கார்க்கோடகன் என்பது. அருள் புரிந்து என்னுயிரைக் காத்த உன்னை உன் பகை மன்னர்கள் உணராதபடி செய்யக்கருதியே யான் உன்னைக் கடித்து உன் உருவத்தை வேறுபடுத்தினேன். இப்பொழுது உன் வாகுகள் குறைந்திருத்தலால் நீ வாகுவன் என்பதை உன் பெயராகக் கொள்க. நீ இப்பெயருடன் அயோத்தியை அடைந்து, அதன் மன்னனாகிய இருதுபன்னனிடம் தேர்ப்பாகனாய் அமர்ந்துறைக அன்பு மிக்க வேந்தே, பிறகு சிறிது காலத்தில் நீ உன் மனைவி மக்களையும் அரசையும் பெறுவாய். நீ உன் முன்னுருவத்தையடைய விரும்பும் போது இவ்வாடைகளைப் புனைந்துகொள்க," என்று சொல்லி இரண்டு துகில்களைக் கொடுத்தது.

### நளன் அயோத்திக்குச் செல்லுதல்

வேந்தர் வேந்தனாகிய நளன் அவ்வரவரசினுக்கு வந்தனம் புரிந்து, அது செய்த உதவியைத் துணையாகக்கொண்டு சென்று, கடற்கரையை யடைந்தான்.

அடைந்தவன், அங்குள்ள புன்னை மரமொன்றில் தங்கியுள்ள கொக்கை நோக்கி, "செங்கால் இளங்குருகே, தாமரையின் போதுகளை வண்டுகள் மலர்த்த அம்மலர்கள் தம்பால் தேனைப் பெருக்கி அவ்வண்டுகளுக் களிக்கும் வளப்பத்தினை உடைய விதர்ப்ப நாட்டின் செல்வியாகிய தமயந்தியைத் தனியாக விட்டுப் பிரிந்து வந்த எனக்கு யாதோருறுதியும் கூறுமல் இருக்கின்ருய்; என்னைப்போல நீயும் நின் பெடையைப் பிரிந்திருக்கின்ருயோ?" என்று கூறித் தளர்ந்து நின்ருன். பெண் வண்டானது புன்னை மரத்திலுள்ள மலர்களின் தாதுக்களைக் கோதி உண்ண, அதற்குத் தீங்கு நேராதபடி ஆண் வண்டு அதைக்காத்துக் கொண்டிருத்தலை அவ்வேந்தன் கண்டு, அதன் இனிய அருளை எண்ணியும், தான் தன் மனைவியைக் காட்டில் தனி

யாக விட்டு வந்த கொடுமையை நினைந்தும் மனம் வருந்திப் பெருமூச்செறிந்தான்.

ஆங்கொரு நண்டு ஆளரவங் கேட்டோடிக் கடலின் அருகிலுள்ள ஒரு வளையிற் புகுதலை அம்மன்னன் கண்டு, "ஓ அலவனே, 'காரிருளில் கானகத்தில் தன்பால் அன்பு மிக்க மனைவியைக் கைவிட்ட பாதகனாகிய இவனைப் பார்த்தல் கூடாது,' என்று கருதியோ கடலிற் சென்று ஒளிக்கின்றனை? உரை," என்று கூறிக் கண்ணீருகுத்து நின்றான்.

பிறகு அந்நெய்தல் நிலத்திலுள்ள நீலோற்பல முதலியவற்றை நோக்கி,

> "பானலே! சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
> கானலே! வேலைக் கழிக்குருகே!—யானுடைய
> மின்னிமைக்கும் பூணாளவ் வீங்கிருள்வா யாங்குணர்ந்தால்
> என்னினைக்குஞ் சொல்வீ ரெனக்கு."

என்று கூறி வருந்தினன். பிறகு கடலை நோக்கி,

> "போவாய்; வருவாய்; புரண்டு விழுந்திரங்கி
> நாவாய் குழற நடுங்குறுவாய்—நீவாய்
> அரவகற்று மென்போல வார்கலியே! மாதை
> இரவகற்றி வந்தாய்கொல் இன்று?"

என்றறைந்து மனத்தளர்ந்தான். இங்ஙனம் வருந்தித் தளர்ந்த அவ்விறைவன் பிறகு பல இடங்களையுங் கடந்து சென்று சரயு நதியின் பாய்ச்சலால் நல்வளம் மிக்கதாகிய அயோத்தி நகரை அடைந்தனன்.

## நளன் இருதுபன்னனிடம் தேர்ப்பாகனாதல்

பின்னர் அம்மன்னன் அரண்மனையை அணுகி, வாயிற் காவலர்களைப் பார்த்து, "அன்பர்களே, உங்களுக்கு நலமுண்டாகுக. யான் உங்கள் வென்றி வேல் வேந்தரைக் காணவந்துளேன். நீங்கள் என் வருகையை

உங்கள் மன்னர்க்கு உணர்த்துங்கள்,'' என்று மொழிந்தனன்.

அக்காவலர்களில் ஒருவன் அவ்வாறே சென்று இருதுபன்னனைக் கண்டு, ''வாழ்க; வென்றிவேல் வேந்தரே, யாரோ ஒருவன், ஆற்றன் மிக்கவன், அரும்பொறை வாய்ந்தோன், இன்மொழியாளன், இலகுறு மதியினன், தங்களைக் காணும் விழைவினனாகி வாயிலில் வந்துளான்,'' என்றான். அம்மொழியைக் கேட்ட அம் மன்னன், "அங்ஙனமாயின் அவனை இங்கு வரவிடுக,'' என்று கூறினான். உடனே அக்காவலன் சென்று நளனை இருதுபன்னனிடம் அனுப்பினன். இருதுபன்னன் நளனைக் கண்டு முகமலர்ந்து, ''ஐயா, நீ எத்தொழிலிற் சிறந்தவன்? உன் பெயர் யாது?" என்று வினவினான்.

நளன் அம்மொழியைக் கேட்டு, ''அன்னப்பறவைகள் மிதித்தலால் தாமரை மலர்களினின்று பெருகிய தேன் பாய்ந்து செந்நெற் பயிர்களை நன்கு வளர்க்கும் வளமிக்க அயோத்திநாட்டிறைவரே, யான் தேவர்களின் உணவாகிய அமுதம் போல அடுதல் தொழில் புரிதலினும் குதிரைகளின் உள்ளம் அறிந்து தேரைச் செலுத்துந் தொழிலினும் வல்லவன். என்பெயர் வாகுவன் என்பது,'' என்றான்.

இருதுபன்னன் வாகுவன் சொல்லைக் கேட்டு மகிழ்வெய்தி, அவனை நோக்கி, "ஐயா, அங்ஙனமாயின் நீ என்னிடமுள்ள இருபாகர்களுடன் இருத்தி. உனக்கு யான் மாதமொன்றுக்கு ஆயிரம் பொன் சம்பளம் தருகின்றேன்,'' என்றுரைத்தனன். நளனும் அவ்வாறே அம் மன்னனிடம் தேர்ப்பாகனாக அமர்ந்திருந்தனன்.

### நளன் தமயந்தியை நினைந்து வருந்தல்

பகற்பொழுது நீங்கி மாலை வந்துற்றது. அன்புடையாரைப் பிரிந்தவர் மனத்தில் மகிழ்ச்சி நீங்கத் துன்பஞ் செறிதல்போலச் சூரியனது ஒளி நீங்கப் பூமி முழுதும்

இருள் செறிந்தது. புவி மடந்தையைத் தொடர்ந்த இரு ளாகிய வெங்கலியை மதியாகிய வீரன் தோன்றித் தன் கதிர்களாகிய கணைகளை எய்து ஓட்டிப் புவி மங்கையை மகிழ்வித்தனன். குமுத மலராகிய நங்கை தன்னைப் பிரிந்திருந்த மாமதியாகிய கொழுநன் வரவினுற் களி கூர்ந்து, அளி என்னும் இரவலர்க்குத் தேனுகிய உணவை அவர்கள் களிப்புறும்படி அளித்தனள். தாமரையாகிய நங்கை தன் கொழுநனுகிய பகலவன் பிரிவால் அகம் வாடி, அணியொழிந்து முகங் கூம்பினுள். ஒருவர் இன்புற்றிருக்கையில் மற்ருெருவர் துன்புற்றிருத்தல் உலகில் இயற்கையே யன்ருே? இவ்வுல கத்தில் அனைவரும் ஒரே காலத்தில் இன்பமேனும் துன்ப மேனும் அடைதல் என்றேனு முண்டோ? இல்லங்களில் மடவார்கள் இட்ட விளக்குகளின் நிழல், வானமாகிய கடலில் தோன்றுதல் போல உடுக்குலங்கள் தோன்றி விளங்கின. உடுக்குலங்களாகிய முத்தினங்களை இடை இடைப் பதித்தமைத்த வானமாகிய நீல - விதானத்தை யுடையதும் மதியின் நிலவாகிய வெண்சுதை தீட்டப் பெற்றதுமாகிய உலகமாகிய மண்டபத்தில் பொதிய மலை யாகிய அரியணையில் வீற்றிருக்கும் தமிழ் மொழியாகிய அரசியின் தென்றற் காற்ருகிய தண்ணிய அறவாழி எங்கும் சென்றுலவியது. அவ்வறவாழியின் புகழை யாவருக்கும் ஆர்த்துரைத்தல் போலக் கடல் ஒலித்தது. வேந்தர் வேந்தனுகிய நளன் இவற்றை எல்லாங் கண்டு மனம் வருந்தி மதியை நோக்கி, "மாமதி வானவ, நீ அருள் மிக்கவன். உலக முழுதும் களிக்கவேண்டும் என நின் தண்ணிய கதிர்களை யெங்கும் பரப்புகின்ருய். நான் என் அன்புக் குரியாளாகிய இல்லக் கிழத்தியைப் பிரிந்திருக் கின்றேனுதலால், இப்பொழுது நின் செயல் எனக்கு வெறுப்பைத் தருகின்றது. மற்றவர்கள் விழைந்துண்பன வற்றை நோய்கொண்டவர்கள் வெறுத்தலை நீ அறியாத

வன் அல்ல. நீ உலக முழுவதையும் நன்ருய்ப் பார்க்கின்றவன். என் அன்புடையாள் உறையும் இடம் உனக்கு நன்ருய்த் தெரியுமல்லவா? அவள் இருக்கும் இடத்தை எனக்கு உரைத்தருள்வாய். அவள் முகம் நீ கலை நிரம்பிய போது எவ்வாறு விளங்குவையோ அவ்வாறு விளங்குவது. அவள் நெற்றி நீ பிறை மதியாய் இருக்கையில் எப்படித் தோன்றுவையோ அப்படியே தோன்றுவது. அவளுடைய முறுவல்கள் நின்றுணையாகிய உடுக்குலங்களைப்போல ஒளிர்வன. அவள் வாயிதழ்கள் நின் அன்புக்குரிய குமுத மலர்களை ஒப்பவை. அவளது கூந்தல் சிலபோது உன்னை மறைத்து உன் ஒளியை மங்கச் செய்வதாகிய மேகத்தையும், உன்னைப் பற்றவருங் கரும்பாம்பையும் பழித்து வெல்லும் நீர்மையது. நான் அவளை நடுக்காட்டில் நள்ளிரவில் சிறிதும் இரக்க மில்லாதார்போல விட்டுப் பிரிந்து இங்கு வந்திருக்கின்றேன். உடுக்குல அரசே, நீ வானத்தின் இடையில் விளங்கும் தோற்றம் என்பால் வந்து அம்மெல்லியலாளின் நலங்களைக் கூறிய அன்னமானது பொய்கையின் நடுவில் உறைந்த காட்சியை என் நினைவிற்கு வருவிக்கின்றது. தண்மதிவானவ, நீ அருள் கூர்ந்து எனக்கு அவளுடைய நிலைமையை உரைத்தருள்க.

"ஆ! நீ அருட்கடல். 'அப்பொற்பாவை உறையும் இடத்தையும் உரைத்தி' என, அம்மாதர்க்கரசியையே அழைத்து வந்துவிட்டனை. விண்ணினின் றிறங்கி வரும் தேவ மாதர்களைப்போல அக்கற்பின் செல்வி நின் தண்ணிய கதிர்களுக்கிடையில் வானினின் றிழிந்து அதோ வருகின்றனள். அந்தோ! என்னுல் துணிக்கப்பட்டுப் பாதியாகிய ஆடையையே அணிந்து கொண்டிருக்கின்றனள். ஆ! வீமன் செல்வி! நான் உன்னை நள்ளிரவில் நடுக் காட்டில் விட்டு வந்ததனை எண்ணியோ என்பால் விரைந்து வருதலின்றி முகங் கோட்டிக் கடைக்கண்ணுல் சினத்துடன் நோக்குகின்றனை? யான் உனக்குச் செய்த கொடு

மைக்கு, ஒரு முறையன்று; நீ இங்ஙனம் ஆயிர முறைக் கோபித்தலும் தகுதியேயாம். அன்புடையாய், என்னே! நீ மாயஞ் செய்கின்றனையோ? நின் அழகிய உருவம் எங்கும் காணப்படுகின்றதே! அக்கலி புருடன்தான் என்னை வருத்துதற் பொருட்டு இம்மாய விஞ்சையை உனக்குக் கற்பித்தனனோ? நல்லியல் நங்காய், என் பிழையைப் பொறுத்தருளி என்னருகில் வந்து, 'பொறுமையில்லாத வேந்தரே, உமது பிழையைப் பொறுத்தேன்,' என்று ஒரு முறைக் கூறியருளுக. கொழுநர் புரியும் குற்றங்களைப் பொறுத்தருள்வது நின்போற் கற்புடைய மங்கையருக் கியல்பன்றோ? ஆ! நங்காய்! என்னே! மாயஞ்செய்து மறைந்துவிட்டனையே! ஆகா! உணர்ந்தேன்; உணர்ந் தேன். கானலில் தோன்று நீர்த்தோற்றம்போல என் அவாவாகிய வெளியில் தோன்றிய தோற்றமே இது. உண்மையில் அக்கற்பின் செல்வி இங்கு வந்தாளல்லள். அவள் அன்பிற்கும் அருளுக்கும் பொறைக்கும் உறைவிடமானவள் அல்லளோ? அவள் இங்கு வந்து என்னைக் கண்டும் என் அருகில் வருதலின்றி இங்ஙனம் மாயஞ் செய்து செல்வளோ? என்னெஞ்சமே, நீ வருந்தற்க. தெய்வத் தன்மையனுகிய கார்க்கோடகன் கூறியபடியே நாம் நம் மன்பின் செல்வியை விரைவில் அடைந்து இன்புறுவோம்," என்று கூறிக்கொண்டு கண்ணுறங்கிவிட்டனன்.

அப்போது அம்மன்னன் தன் வெந்துயரை ஆற்றும் படியான கனவொன்று காணலானுன். அதில் அவ்வேந் தன் முன்னே சோலையிற் கண்டு தமயந்தியின்பால் தூதாக அனுப்பின அன்னம் அருகில் வரக்கண்டான். கண்டு, தனக்கு நேர்ந்த துன்பங்களையும் தமயந்தியைக் காட்டிலே நள்ளிரவிற் பிரிந்த செயலையுங் கூறினன். அவ்வெகினவரசு, "வேந்தர் வேந்தே, தமயந்தி தன் தந்தையின் அரண்மனையில் இருக்கின்றனள். அவள் தந்தையின் அரண்மனையிற் சென்று தன் மக்களைக் கண்டபின்தான்

நின்னைப் பிரிந்திருக்க நேர்ந்ததனோடு தன் மகவுகளும் தம்முடைய தந்தையாகிய உன்னைப் பிரிந்திருக்க நேர்ந்ததை எண்ணி அளவிட்டுரைத்தற்கரிய துயரக் கடலில் மூழ்கியிருக்கின்றாள். அவள் உன்னால் துணிக்கப்பட்டுப் பாதியாகிய ஆடையுடன் மாசுற்ற மணி என ஒளி குன்றியிருக்கின்றனள். முன்னே மேகங்களை வென்று அவை மலைகளிற் சென்றுறையும்படி செய்ததாகிய அவளுடைய கரிய கூந்தல் இப்பொழுது அம்முகில்களுக்குத் தோற்றுச் சடை பற்றிக்கிடக்கின்றது. நீரற்றவாவியில் வந்து தங்குதலை மறக்கும் நீர்ப்பறவைகளைப்போல் வண்டுகள் மலரற்ற அவள் கூந்தலில் வந்து மொய்த்தலை மறந்தன. திலகம் அவள் நெற்றியையடைந்து பொலிவுறுஞ் சிறப்பை இழந்தது. அவள் அணிகளை எல்லாம், 'உயிரை வாட்டும் பிணிகள் இவை,' என வெறுக்கின்றாள். அக்கற்பரசி மெல்லணையை 'வெம்பரற் கல்லணையதிது,' எனக் கழிக்கின்றாள். அம்மடக் கொடி விழியிணைகள் துயிலை மறந்து கரையில் எடுத்தெறியப்பட்ட தாமரை எனப் பொலிவு குன்றி எப்பொழுதும் நீரைப் பெருக்கிக்கொண்டிருக்கின்றன. அம்மெல்லியல் அமுதத்தையு மிகவும் கைப்பான வேம்பென விலக்குகின்றாள். உன்னை மீண்டுங் காணலாம் என்னும் ஆசை ஒன்றுதான் அவள் உயிரைக் காத்து வருகின்றது. அம்மாதரசியை நீ விரைந்து சென்று காவாயெனின், பிறகு விண்ணுலகிற் சென்றுதான் அப்பொற்றொடியைக் காணுதல் நேரும்,'' என்று கூறியது. அதைக் கேட்டு அவ்வேந்தர் கோன், ''எகினவரசே, நான் விரைந்து சென்று அம்மட மங்கையைக் காண்கின்றேன்.'' என்று வாய் பிதற்றினான். உடனே அவன் கனவு நீங்கி விழிப்புற்றனன். இருதுபன்னனிடமுள்ள மற்றைப் பாகர்களுள் ஒருவன் அப்பொழுது அங்குற்று, அம்மன்னனை நோக்கி, ''வாகுவ, நீ இங்ஙனம் வாய் பிதற்றியதற்குக்

காரணம் யாது?'' என்றான். அதைக்கேட்டு அக்கோ, "நண்ப,

'வெயிற்கொ டுங்கதிர் மறைந்துழி வெவ்வழற் கானில்
பயிர்ப்பில் கோதையைத் தீர்ந்தனன்.' (நைடதம்)

ஆதலின், அவள் நினைவால் இங்ஙனம் வாய் பிதற்றினேன்,'' என்று கூற, அப்பாகன் அதைக் கேட்டுத் தன்னிடஞ் சென்றான். பிறகு அம்மன்னன், தமயந்தியின் பிரிவாலான துன்பமாகிய பொருளைத் தன் மனமாகிய பேழையில் வைத்து, நிறையாகிய தாழிட்டு மறைத்தனன். 'ஒருவன் அறிந்தது உலகமறியும்', அன்றோ? அக்கோமான் அங்ஙனந் தன் மனத்துயரை மறைத்தனனாயினும், இருதுபன்னனுடைய பாகர்களில் ஒருவன் அதனை அறிந்தமையின், அது பலராலும் அறியப்பட்டது. அன்றியும், அவ்வேந்தர் வேந்தனது முகவாட்டமும் உடன் மெலிவு முன்னின்று அதனைப் பலரும் அறியச் செய்தன.

## தமயந்தி நளனை எண்ணி வருந்தல்

நளன் இங்ஙனமிருக்கத் தமயந்தி தன் பெற்றோரையடைந்து, தன் மக்களைக் கண்டனளாயினும், அவளது துயரந் தணிந்திலது; அணிகள், நல்லாடைகள் முதலியவற்றால் தன்னை ஒப்பனை செய்து கொள்ளுதலை முற்றுமொழித்தனள்; உணவை வெறுத்தனள்; தன்னை உயிரற்ற உடலென மதித்தனள். அவளுக்கு உலகமே இருள் சூழ்ந்ததாகக் காணப்பட்டது. அம்மாதரசிக்கு எந்தப் பொருளும் துன்பத்தைத் தவிர இன்பத்தைத் தரவில்லை. அவள் அணியும் முத்துமாலைகளின் வடிவை அவளுடைய கண்ணீர்த் திவலைகள் காட்டின. அவள் ஒரு நாள் இரவு தோழியர்களின் வற்புறுத்தலால் மெல்லணையொன்றில் பால் நிரம்பிய பொய்கை ஒன்றில் வாடிய பூங்கொடி கிடந்தாற்போலச் சாய்ந்து கிடந்தாள்; தன் கொழுநனை எண்ணிக் கண்ணீருகுத்தாள். ''ஆ! நெடுங்கோள் வேந்

தரே, உம்மை என்று நான் காண்பேன்! அந்தோ! பாவியாகிய நான் இனி இப்பிறப்பில் உம்மைக் காணேனோ? இனி இப்பிறப்பிற் காணேனாயினும், மறு பிறப்பிலேனுங் காண்பேனோ? சுயம்வர மண்டபத்தில் நான் உமக்கு மணமாலை சூட்டவருகையில் என்னை எதிர்கொண்டுபசரித்தனவாகிய உம்முடைய கண்களின் இன்னருள் என்னெஞ்சையுருக்குகின்றது. நாட்டையுஞ் செல்வத்தையுந் தோற்றுக் காட்டிற்குப் புறப்பட்டபோதும் சிறிதும் வாட்டமின்றி மலர்ந்து விளங்கியதாகிய உமது முகத்தாமரையின் பொலிவு என்றும் என் கண்களை விட்டகலாது. காட்டில் நம் மக்கள் நம்மை விட்டுப் பிரிகையில் கலங்காத உள்ளங் கலங்கி, வாடாத முக மலர் வாடி, நீரோடுங் கண்கள் காதன் மக்கள் மேலோடப் பெருமூச்செறிந்து ஏங்கித் தளர்ந்து நின்ற உமது அன்பின் நிலையை நினைக்குந்தோறும் என்னுள்ளம் கரைகின்றது. காட்டிலே பாழ் மண்டபத்தில் புழுதி படிந்த கற்றரையிலே படுத்துக் கொதுகுகள் ஒய்யென ஒலித்துச்சூழ்ந்து துன்புறுத்தலையுங் கருதாது உமது கையணையை எனக்குத் தந்தருளி, இனிய பாடல்களைப் பாடித் தாலாட்டித் தன்னிளங் குழவியைத் துயில்விக்குந் தாயினும் இனியீராய் இன் சொற்களைக் கூறி, என்னைத் துயில்வித்த உமது அன்பின் பெருக்கை நினைக்கின், அஃது என் உயிரையும் உடலையும் உருக்கி, என் உள்ளத்தை ஏங்கித் தயங்கச் செய்கின்றது. என்னுயிரினுமினியீர், இத்தகைய பேரன்பினை உடைய நீர் என்னைக் காரிருளில் கானகத்தில் பாழ் மண்டபத்தில் விட்டுச் செல்லும்படி செய்த என் தீவினையை என்னென்பேன்! அந்தோ! அரசே, உமது திருமுகமண்டலத்தைத் தீவினை யாட்டியேன் என்று காண்பேனோ? உம்முடைய திருநெடுந் தோள்கள் என்று என் கண்கள் களிக்கும்படி காட்சி தருமோ? உம்முடைய இன்மொழிகள் என்று என் காதுகளைக் குளிர்விக்குமோ? ஆ! நெஞ்சமே, கலங்கற்க.

அதோ! நம்முடைய அன்பர் வருகின்றார். அதோ அங்கு நோக்கு; முதலையால் வருந்தி, 'மூலமே,' என்றழைத்த கரியைப் புரத்தற்கு விண்ணின்றிழிந்து வந்த திருமாலைப் போல, அருள் நிரம்பிய நோக்கினால் நம்மை நோக்கின படியே நம்மிறைவர் விண்ணின்றிழிந்து வருகின்றார்; அன்புடையீர், அடியாளின்முன் வந்ததும் பூமியில் திருவடி படிய நடந்து அருகில் வந்து இன்னுரை கூறி என் துயரினை ஆற்றாது, ஆகாயத்தே நின்று மாயம் புரிகின்றீரே! இஃதென்? அருளுடையீர், சுயம்வர மண்டபத்தில் தேவர்களுடன் நீர் வீற்றிருக்கையில் உமது திருவடிகள் பூமியிற் படிந்திருந்ததனைக் கண்டு, அத்தேவர்களில் உம்மை ஒருவராகக் கருதாது, மண்ணகத்தாரின் ஒருவர் என யான் கருதின கருத்தை ஒழித்து விண்ணகத்தாரின் ஒருவர் எனக் கருதும்படி செய்ய விரும்பியோ அந்தரத்தின்கண் அகன்று நிற்கின்றீர்? செம்மனவேந்தரே, உம்மை நான் தேவர்களிலும் உயர்ந்தவராக வன்றோ மதித்திருக்கின்றேன். உம்பால் நீங்காத அன்புடையவளாகிய என்முன் இங்ஙன மாயம் புரிதல் உமது அருளுக் கேற்றதன்று. விரைவின் என் அருகில் வந்து உமதருள் நிரம்பிய மொழிகளைக் கூறி, 'நம் மக்கள் தீதிலரே?' என்று கேட்டருள்வீர். உம்முடைய மக்கள் உம்மைக் காணாமல் மிகவும் வருந்துகின்றார்கள். அ, ஆ! அருளாழி வேந்தரே, என்னே இது! என்னே இது! என்முன் எனக்கின்னருள் புரிவீர் போல் வந்து தோன்றி மாயமாக மறைந்து விட்டீரே! இதுவோ உமது திருவருள்? அந்தோ!

கானகத்து விட்டகன்ற காரிகைதான் எந்நிலையள்
தேனகத்துப் பைந்தொடையீர், தேர்வமென வந்திரோ?
தேனகத்துப் பைந்தொடையீர், தேர்வமென வந்துநீர்
வானகத்துப் புலவரென மாயமெவன் செய்தீரே?

காரிருளிற் கைவிட்ட காரிகைதான் எந்நிலையள்?
காரணைய திருக்கரத்தீர், காண்குமென வந்தீரோ?

காரணைய திருக்கரத்தீர், காண்குமென வந்துநீர்
ஈரமறு நெஞ்சினர்போல் ஏதமெவன் செய்தீரே? கா. ர. கோ.

என்றழுதனள். அதனையுணர்ந்த தோழியர்கள் தமயந்தியின் தாய்க்குரைப்ப, அவ்வரசி தன் கொழுநனாகிய வீமனை நோக்கி, "அன்புடையீர், நம்முடைய செல்வி தன்னுடைய மக்களைக் கண்டும் துயரம் நீங்கப் பெறாமல் வருந்துகின்றனள். அவள் தன் கொழுநனைக் கண்டன்றித் துயரந் தணியப் பெறாள்; ஆதலின், அவள் கணவனையுந் தேடும்படி ஒற்றர்களை விடுவீர்," என்றாள்.

## வீமன் நளனைத் தேடும்படி ஒற்றர்களை அனுப்புதல்

வேந்தர்பிரானாகிய வீமனும் பல ஒற்றர்களை அழைத்து, "நற்றிறம் வாய்ந்த ஒற்றர்களே, முன்பு என் செல்வியை நாடிக் கொணர்ந்தீர்கள். அதுபோல் அவள் கொழுநனையும் தேடி அழைத்துவரின் உங்களுக்குப் பெரும் பொருளையும் நீங்கள் வேண்டும் நிலங்களையுங் கொடுப்பேன். நீங்கள் இப்பொழுதே புறப்பட்டுச் சென்று நாடி அழைத்துக்கொண்டு வாருங்கள்," என்று கட்டளையிட்டனன். அதனை உணர்ந்த தமயந்தி அவ்வொற்றர்களில் சுவேதன் என்னு மறையவனைக் கூப்பிட்டு, "மறைவல்லீர், நீர் முன் சேதி நாட்டிலிருந்த என்னை அழைத்துவந்து இங்கு விட்டு என் பெற்றோர்களின் கவலையைப் போக்கினீர். இப்பொழுது என் கொழுநரைத் தேடிக்கொணர்ந்து என் கவலையைப் போக்க வல்லவரும் நீரே என்று நான் நம்பி யிருக்கின்றேன். என் தந்தையரால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் யாவரும் சிறந்தவர்களே என்பதில் ஐயுறவில்லையாயினும் அவருள்ளும் நீர் மிகவுஞ்சிறந்தவர் என்பது என் கருத்து. 'மறையானவற்றைச் சொல்லுகின்றவர்களை அறிந்து, அவர்கள் ஐயுறாதபடி அவர்களுடன் கூடி, அவர்கள் தாங்களாகவே மறையைத் தன்பாலுரைக்கும்படி செய்ய வல்ல சொற் செயல்களையுடைய

வனே சிறந்த ஒற்றனுவான்,' என்று கூறப்படும் ஒற்றிலக்கணம் உம்மிடத்தில் நிரம்பி இருக்கிறது. ஆதலின் உம்மையே நம்பி என் கொழுநரைத் தேடவேண்டிய சூழ்ச்சி ஒன்றை உம்மிடங் கூறுகின்றேன். என் கொழுநர் தம் பகைவர்கள் தம்மை உணராதபடி மாற்றுருவங்கொண்டு எங்கேனு மறைந்திருப்பர். ஆதலால், நீர் சென்று தேடுகையில், உமக்கு யாரிடத்தில் ஐயுறவுண்டாகின்றதோ அவரிடத்தில்,

'காரிருளிற் பாழ்மண்ட பத்தேதநங் காதலியைச்
சோர்துயிலி னீத்தல் துணிவன்றோ—தேர்வேந்தர்க்(கு)?'

என்று கூறுதல் வேண்டும்.

"அங்ஙனம் கூறுதற்கு மறுமாற்றந் தருகின்றவருடைய குணம், செயல், வடிவு முதலியவற்றை நன்குணர்ந்து வந்து என்பால் உரைத்தல் வேண்டும். இதுவே யான் உம்மிடம் கூறக் கருதிய சூழ்ச்சி. அறிவிற் சிறந்தவராகிய உமக்கு யான் கூறவேண்டியது ஒன்றுமின்றாயினும் என் விழைவின் மிகுதியினால் இவற்றையெல்லாம் கூறினேன். நீர் என்பால் இரக்கங்கொண்டு என் அன்பரை நன்கு தேடியறிந்து வருதல் வேண்டும்." என்று கூறினாள்.

சுவேதன் அம்மொழிகளைக் கேட்டு, "எம்மிளவரசி, நற்குணச் செல்வியாகிய உனக்குத் துன்பம் உற்றதைக் கண்டு, இந்நாட்டின் குடிகள் அனைவரும் அதைத் தங்களுக்குற்றதாகவே கருதி வருந்துகின்றார்கள். உன் துயர் விரைவில் நீங்குதல் வேண்டும் என இந்நாட்டின் குடிகளனைவருந் தத்தம் தெய்வங்களை நோக்கிப் பணிந்து வேண்டுகின்றார்கள்: அருட்குண நங்காய், அவர்களில் யானும் ஒருவன் அல்லேனோ? யான் நின் கொழுநனை நாடி அறியும் வரையினும் என் கருத்தை வேறெத் தொழிலினுஞ் செலுத்தேன். நினக்கு நலமுண்டாகுக. யான் சென்று வருகின்றேன்," என்று சொல்லித் தமயந்தியினிடம் விடைபெற்றுச் சென்றனன்.

## சுவேதன் அயோத்தியை அடைந்து நளனை நாடுதல்

செங்கோன் மன்னனாகிய வீமனால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் நாற்றிசையினுஞ் சென்று நாடு, நகரம், காடு, மலை முதலிய எல்லா இடங்களிலும் நளனைத் தேடித்திரியலாயினர். அவர்களில் ஒருவனாகிய சுவேதனும் பல இடங்களிலும் தக்க வகையினால் தேடிப் பிறகு அயோத்தி நகரை யடைந்து அங்கொரு பொதுவிடத்தைச் சார்ந்து, 'அச்சுதா, தேவதேவா, உலகில் தீமையொழிந்து நன்மை யோங்குக,' என்று சொல்லி உட்கார்ந்தனன். அப்பொதுவிடத்திலிருந்தவர்களில் விழைமொழியாளனாகிய ஒருவன் அம்மொழிகளைக் கேட்டுச் சுவேதனை அணுகி, "ஐயரே, நீர் சிறந்த தவ ஒழுக்கம் உடையவராகக் காணப்படுகின்றீர். உமமுடைய தவ ஒழுக்கம் என்றும் இடையூறின்றி இனிதோங்குதற்கேற்றதா யமைந்த நாடியாதோ? உரைத்தருள்வீர்," என்றான்.

சுவேதன், "அன்புடையீர், யான் பிறந்து வளர்ந்து கலைகள் கற்றுச் சிறந்த நாடு விதர்ப்ப நாடு. அந்நாட்டின் இறைவனாகிய வீமன்றன் செல்வப் புதல்வியாகிய தமயந்தியை நிடத நாட்டிறைவனாகிய நளன் மணம் புரிந்துகொண்டபின் அம்மன்னர்பிரான் தன்னுடன் தன் நகருக்கு வரும்படி என்னை அழைத்தனன். யானும் அதற்கு மினமியைந்து அவ்வேந்தர் வேந்தனது நகரமாகிய மாவிந்த நகரையடைந்து முறையிற் சிறிதும் வழுவாத அவ்வேந்தர் பிரானுடைய அருள்மிக்க ஆதரவில் இன்புற்றிருந்து எனது தவ ஒழுக்கத்தைச் சிறிதும் இடையூறின்றிச் சிறப்புற நடத்திவந்தேன். அம்மன்னர்பிரான் புட்கரன் என்னும் வஞ்சக மன்னனது சூழ்ச்சியால் அவனுடன் சூதாடித் தன்னுடைய நாடு, நகர முதலிய எல்லாச் செல்வங்களையுந் தோற்றுத் தன் மனைவி மக்களுடன் எங்கோ போய் விட்டான். அதனால் யான் ஆறாத வெந்துயர்க் கடலின்

மூழ்கினேன். அத்துயரம் எதனாலும் தீர்க்க முடியாததாய்ப் பெருகியது. ஆதலின், யான், 'இத்துயரை எவ்வாறு தணிப்பது?' என்று ஆய்ந்து, முடிவில், 'பல இடங்களிலும் சென்று அங்கங்குள்ள சிறந்த காட்சிகளைக் காணுதலாலும், கல்வி, ஆண்மை முதலியவற்றாற் சிறந்தவர்களின் புகழைக் கேட்டாலாலும், நற்குண மாந்தர்கள் பலருடன் பேசுதலாலும் அத்துயரை ஒருவாறு தணித்துக் கொள்ளுதல் கூடும்,' என்று எண்ணிப் புறப்பட்டுப் பல நாடு நகரங்களுக்குச் சென்றேன். அங்கெங்கும் என் துயரம் தணிந்திலது. 'அயோத்தி நகரம் தொன்மையாகிய புகழையுடையதாதலின் அங்குச் சென்றால் நல்லோர் பலரைக் கண்டு பேசுதலாலும் அங்குள்ள விசேடங்களை அறிதலாலும் நமது துயரை ஒருவாறு தணித்துக்கொள்ளுதலாகும்,' என்று கருதி இங்கு வந்தேன். நான் இங்கு வந்தவுடன் நீர் கூறிய இன்னுரைகள் என் மனத்தை மகிழ்வித்தன. நீர் பளிங்கு போன்ற தூய்மையான மனத்தையுடையீர் என்பது உமது முகப்பொலிவே காட்டுகின்றது. நீர் பிறர்பால் அன்புடையீர் என்பதை உம்முடைய இன்னுரைகள் விளக்கின. மேன்மையாகிய குணமுடைய நல்லறிஞர்கள் தாமுணர்ந்த தீமையற்ற சிறந்த பொருள்களைப் பிறரும் உணரச் செய்து அதனால் தாமகிழ்வெய்துவார்கள். நீர் அறிஞர்களில் ஒருவராகக் காணப்படுகின்றீர். ஆதலின், உம்முடைய இன்னுரைகளை மேலுமேலுங் கேட்க விழைகின்றேன்," என்று கூறினான்.

அதனைக்கேட்டு, அவ்விழைமொழியாளன், சுவேதனை நோக்கி, "நான்மறை வல்லீர், நற்குண அறிஞராகிய உம்முடன் உரையாடிக் கொண்டிருத்தற்கு யாரே விரும்பார்? நற்றவத்தீர், இந்நகரம் நீர் கூறியபடி பழைமையாகிய சிறப்புகளை யுடைய தென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இந்நகரின் காட்சிகளும், செய்திகளும் பிறநாட்டினருக்கும் புதுமையை விளைப்பனவே. ஆயினும், அவற்றை நாங்கள் நாளுங் கண்டறிந்து பழகினவர்களா யிருத்தலின்

அவைகள் எங்களுக்கு வியப்பைத் தருதலில்லை. இந்நகரில் எங்கள் மன்னரிடம் ஒரு புதிய தேர்ப்பாகன் வந்திருக்கின்றான். அவனுடைய செய்கைகளே இந்நகரத்தவர்களால் இப்பொழுது வியந்து பேசப்படுகின்றன. அவன் பெயர் வாகுவன் என்பது. அவனுடைய வாகுகள் குறியன. அவன் உருவினுக்கும் செயலினுக்கும் பெரிதும் வேறுபாடு காணப்படுகின்றது. அவன் சொற்கள் யாவரு மதிக்கத் தக்கனவா யிருக்கின்றன. தேரோட்டுதலில் நிடதநாட்டு வேந்தனாகிய நளனையே யாவரும் புகழ்ந்து வருகின்றார்கள். அஃது இனி நான் கூறிய தேர்ப்பாகனுக்கு முன் பொய்த்துப்போம் என்றே இந்நாட்டினர் யாவரும் உறுதியாகக் கருதுகின்றார்கள். உணவடுதலில் அவனை யொப்பவரும் மிக்கவரும் உலகில் இரார் என்றே இந்நகரின் பலர் பேசிக் கொள்ளுகின்றார்கள். அவனுடைய உருவம் பார்ப்பதற்கு இன்பந் தருவதாகத் தோற்றுவிடினும் அவனுடைய குணமும் செயல்களும் யாவரையும் மகிழ்விப்பனவா யிருக்கின்றன. எங்கள் மன்னரிடம் உள்ள மற்றைத் தேர்ப்பாகர்கள் புதியவனாகிய அவனிடம் பொருமை கொள்ளுதலின்றித் தாங்களே அவனைத் தங்கள் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் மன்னரிடமுள்ள தேர்ப்பாகர்களுக்குட் சிறந்தவர்களும் அவனைப் புகழ்கின்றார்கள் எனின், அவன் திறத்தைப்பற்றி வேருகச் சொல்லவும் வேண்டுமோ? நளன், மன்னர் மன்னனாதலின் தேரோட்டுந்தொழிலிலும் அடுதற்றொழிலிலும் அவனுக்குள்ள திறம் குன்றின் குவட்டின்மேல் இட்ட விளக்கென யாவருக்கும் நன்கு விளங்குவதாயிற்று. நான் கூறிய தேர்ப்பாகன் எளியவனாக இருந்தமையின் அத்தொழில்களில் அவனுக்குள்ள திறம் இதுகாறும் யாவருக்கும் தெரியாமல் இருந்தது. பற்றுக்கொம்பினைச் சார்ந்த பூங்கொடியின் பொலிவு விளக்கமடைதல்போல அத்தேர்ப்பாகன் எம்முடைய மன்னரை

அடைந்தபின் அவனுடைய புகழ் இந்நாடெங்கும் விளக்கம் அடைந்திருக்கின்றது,'' என்று கூறினன்.

அவன் கூறிய மொழிகளைக் கேட்ட சுவேதன், "அன்புடையீர், அத் தேர்ப்பாகனை யான் பார்க்க விழைகின்றேன்,'' என்றான்.

அவ் விழைமொழியாளன், "நான்மறைவல்லீர், அப் பாகனை யாவரும் சென்று பார்த்தலாகும். ஆதலின் நீர் சென்று பார்ப்பதில் யாதொரு தடையுமிராது,'' என்றான்.

சுவேதன், அவ்விழைமொழியாளனால் வாகுவன் உள்ள இடத்தை உணர்ந்துகொண்டு அவனிடம் விடைபெற்றுச் சென்று, வாகுவன் இருக்கும் இடத்தை அடைந்து, அங்கொருபுறம் தங்கி, அங்கு வாகுவனை யன்றிப் பிறர் ஒருவரும் இல்லாமையை அறிந்து, அவன் கேட்கும்படி,

"கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ?''

என்று கூறினன். வாகுவன் அதனைக்கேட்டுச் சுவேதன் எதிரில்வந்து, "மறைவல்லோய், நீ 'வேந்தர்க்கு,' என்றமையின், நீ கூறிய செய்தி நிடத நாட்டின் புரவலனாகிய நளனைப் பற்றியதாம் என்றுணர்ந்தேன். அம் மன்னன் முன்னே நாடு நகர முதலியவற்றை இழந்ததன்றிப் பின்,

'ஒண்டொடி தன்னை யுறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்.'

ஒருவன் எல்லாவறிவு முடையவனாயினும் தீய வூழ் உற்றவிடத்து அஃது அவனைப் பேதையாக்கும்.''

"அற நெறியில் அன்றிப் பிற வழியிற் செல்லாத அம் மன்னன் மனம் சூதாடத் துணிந்ததே அதற்குச் சான்றாகும். அவ் வேந்தன் அம்மடக்கொடியைக் காரிருளிற் கானகத்தில் விட்டுச் சென்றது கொண்டு,

'அவன் அம் மங்கையின்பால் அன்பிலன் போலும்!' என நீ ஐயமுறேல். யான் அம்மன்னனிடம் தேரோட்டுந் தொழிலையும், அடுதற் றொழிலையும் பயின்றவன். யான் அவனியல்பை நன்குணர்வேன்,'' என்று கூறினான்.

அம்மொழிகளைக் கேட்டுச் சுவேதன், "அன்புடையீர், உம்முடைய மொழிகள் மிகவும் நன் மொழிகளாக இருக்கின்றன. நீர் இங்கு எத்தொழில் புரிபவர்? உம்முடைய பெயர் யாது?" என்று கேட்டான். வாகுவன், "மறை வல்லோய், நான் இந்நாட்டிறைவனுக்குத் தேரோட்டுந் தொழில் புரிபவன். இத்தொழில், எங்கும் எனக்குத் துணைபுரிவதா யிருக்கின்றது. என் பெயர் வாகுவன் என்பது," என்றான்.

சுவேதன், "அன்புடையீர், சிறிது பொழுதுக்கு முன் இந்நகரில் ஓரிடத்தில் என் நண்பர் ஒருவரைக் கண்டேன். அவர் குண்டின புரத்திலுறைபவர். அவர் மன்னர் மன்னனாகிய நளன் தமயந்தியைக் காட்டில்விட்டுச் சென்றதையும் அம்மடமங்கை தன் தந்தையின் அரண்மனையை அடைந்து தன் மக்களைக் கண்டும் துயரந் தணிதலின்றித் தன் கொழுநன் பிரிவை எண்ணி வருந்துதலையும் கூறினார். அச்செல்வியின் அருமை பெருமைகளை நான் நன்கறிவேன். ஆதலின் அவற்றைக் கேட்டவுடன் என் மனம் மிகவும் வருந்தியது. அதனால், இங்கு வந்து தங்கி, ஆண்மை, ஆற்றல், அன்பு, அருள், கல்வி முதலியவற்றால் சிறந்த அம்மன்னர் மன்னனை அறிந்தவர்கள் எங்கும் இருப்பார்கள் என்பதையும் கருதாது, நீர் இங்கு அண்மையில் இருத்தலையும் நோக்காது இங்ஙனம் கூறிவிட்டேன். என்னை மன்னிப்பீர்," என்று கூறி வாகுவனிடம் விடை பெற்றுச் சென்றான். நளனைத் தேடிச்சென்ற ஒற்றர் சுவேதனை ஒழிந்தோர் அனைவரும் மீண்டு வீமனை அடைந்து, "நிடத நாட்டிறைவர் எங்குங் காணப்பட்டிலர்," என்று கூறிவிட்டனர். அதனால் வீமன் பெரிதும்

வருந்திச் சுவேதனது வருகையை எதிர்நோக்கி யிருந்தனன்.

### சுவேதன் குண்டினபுரத்தை யடைந்து வாகுவன் செய்தியைக் கூறல்

அப்போது சுவேதன் குண்டின புரத்தை அடைந்து தமயந்தியினிடஞ் சென்ருன். தமயந்தி அவனைக் கண்ட வுடன் உபசரித்து, "மறை வல்லீர், எங்கெங்குச் சென்று தங்கினீர்? எங்கெங்குத் தேடினீர்? கங்கைவள நாடாகிய நிடத நாட்டிறைவரைக் கண்டதுண்டோ? கூறியருள் வீர்," என்று கேட்டாள். சுவேதன், "அருமைச் செல்வி, நான் பல இடங்களிலுஞ் சென்று தேடி அம்மன்னர் மன்னரைக் காணுமல் முடிவில் அயோத்தி நகரை யடைந்தேன். அங்கு மனைவியை யிழந்தவனுகிய ஒருவன் அந்நகரின் மன்னனுகிய இருதுபன்னனிடம் தேர்ப் பாகனுக இருக்கின்ருன். அவனை அந் நாட்டினர் தேரோட்டுந் தொழிலினும் அடுதற் ருெழிலினும் மிகச் சிறந்தவன் என்று கூறுகின்ருர்கள். அவனிடத்திற்குச் சென்று அங்கு ஒரு புறந் தங்கி நீ கூறியதைக் கூறினேன். அவன் உடனே என்னெதிரில் வந்து அதற்கு மறு மாற்றந் தந்தனன். அவனது வாக்கின் திறம் நிடத நாட்டிறைவர் தம் வாக்கின் திறத்தையே ஒத்திருக்கின்றது. அவனது யாக்கையை நோக்கின் அஃது அவனே அவர்தான் என்று துணிதற்கு இடந்தரவில்லை," என்று கூறினுன்.

### தமயந்தி வாகுவனைக் குண்டின புரத்திற்கு வருவிக்க ஒருபாயங் கூறிச் சுவேதனை அயோத்திக்கனுப்பல்

தமயந்தி அம்மொழிகளைக் கேட்டு, "மறைவல்லீர், நீர் கூறிய அத்தேர்ப்பாகனே எம்முடைய அரசர் என்பதில் ஐயுறவில்லை. அவரது உருவம் மாறியிருத்தற்கு

ஏதேனுங் காரணம் இருக்கும். அவர் இங்குவரின் அது நமக்கு நன்கு விளங்கும். நீர் மீண்டும் அயோத்தி நகருக்குச் சென்று, அந்நகரின் இறைவனாகிய இருதுபன்னனைக் கண்டு, "செங்கோலாய், நளன் தமயந்தியைக் கானகத்திற் காரிருளிற் கைவிட்டுச் சென்றமையால் அவள் இரண்டாம் சுயம்வரத்தை விரும்பினாள். அவள் தந்தையாகிய எங்கள் அரசர் அவ்வாறே அவளுக்கு இரண்டாம் சுயம்வரத்தை ஏற்படுத்தி இருக்கின்றார். அந்நாள் நாளையே," என்று கூறுக. அங்ஙனம் கூறுவீராயின் அம்மன்னன் நமது நகருக்கு வர உடனே புறப்பட்டு நாளைக்குள்ளாக இங்குவந்து சேருதற் பொருட்டுத் தன்பால் உள்ள தேர்ப்பாகர்களில் மிகவுஞ் சிறந்தவராகிய நிடத நாட்டிறைவருக்குத் தேரை யோட்டும்படி கட்டளை இடுவான். அவர் அம்மன்னனுக்குத் தேரை யோட்டிக்கொண்டு இந்நகருக்கு வருவார்," என்றுரைத்தனள். சுவேதன் அதனைக்கேட்டு, "அறிவுடைய செல்வியே, அவ்வாறே சென்று அறிவிக்கின்றேன்," என்று சொல்லி, அவள் பால் விடைபெற்றுச் சென்று, வீமனைக்கண்டு, "அரசே, நான் பலஇடங்களிலுஞ் சென்று தேடினேன். நம்முடைய செல்வியின் கொழுநர் காணப்பட்டிலர். ஆதலின், நம் செல்வியை அவர் விட்டுப் பிரிந்த இடத்தைக் கேட்டறியக் கருதி இங்குவந்து அவ்வாறே நம் செல்வியைக் கேட்டு அவ்விடத்தை நன்கறிந்து கொண்டேன். யான் மீண்டுஞ் சென்று அம்மன்னர் மன்னரைத் தேடக் கருதுகின்றேன். நம்முடைய செல்விக்கு நலமுறுக," என்று கூறினன்.

வீமன், "நான்மறையாளா, அங்ஙனமே சென்று அவ்வேந்தர் வேந்தரைத் தேடி அழைத்துவருக; விரைவிற் செல்க," என்றான்.

### சுவேதன் அயோத்தியை அடைந்து, 'தமயந்திக்கு இரண்டாஞ் சுயம்வரம் ஏற்படுத்தப்பட்டது,' என்று இருதுபன்னனிடம் கூறுதல்

சுவேதன், அங்ஙனமே விரைந்து சென்று, அயோத்தி நகரை அடைந்து, அந்நகரின் மன்னனாகிய இருது பன்னனைக் கண்டு, "வேந்தே, விதர்ப்ப நாட்டு வேந்தருடைய திருமகளாகிய தமயந்தி இரண்டாஞ் சுயம் வரத்தை விரும்பினள். அம்மன்னரும் அதற்கிணங்கித் தம்முடைய நகரின்கண் முரசறைவித்துப் பல மன்னர் களுக்கும் திருமுகமனுப்பி உமக்கு நேரிற் கூறும்படி என்னை அனுப்பினர். அந்நாள் நாளையே; ஆதலின், திண்டோள் வேந்தரே, நீர் விரைந்து சென்று குண்டின புரத்தை அடைவீர். உமக்கு நலமுண்டாகுக," என்று கூறினான்.

### இருதுபன்னன் வாகுவனைச் சாரதியாக அமைத்துக் கொண்டு தேரேறிக் குண்டினபுரத்துக் கேகல்

இருதுபன்னன், அதனைக் கேட்டு, 'வேதமொழி வாணன் வீமன் திருமடந்தைக்கு நாளைத்தினம் இரண் டாம் சுயம்வரம் என்று கூறினான். இஃதுண்மை யாகவே இருக்கும். நான் குண்டினபுரத்திற்குச் சென் ருல் இம்முறை அப் பொற்பாவையை அடைதல் திண் ணம். ஆனல், நாளைக்குள்ளாக இந்நகரிலிருந்து குண் டின புரத்திற்குச் செல்லவேண்டுமே! அதற்கு என் செய்வது?' என்று தனக்குள் கூறிக்கொண்டான். அப் போது அருகில் இருந்த வாகுவன் அம்மொழிகளைக் கேட்டு, "வன்திறல் மன்னரே, குறையாத கற்பினை யுடையவளும் தன் கொழுநனாகிய நளனிடத்தன்றிப் பிறரிடத்துச் செல்லாத மனமுடையவளுமாகிய அப் பொற் கொடியைப்பற்றி இச்சொல் சொல்லுதல் தகுமோ?" என்றான்.

O-,1GPU,N:9
N45

இருதுபன்னன், "வாகுவ, நீ நன் காய்தலின்றி இவ்வாறு கூறினாய். அம்மாதராள் முதற் சுயம்வரத்தில் என்மேல் எறிந்த மாலையானது தவறி நளன் கழுத்தில் விழுந்துவிட்டது. அம்மடமங்கைக்கு இங்ஙனம் இரண்டாம் சுயம்வரம் நடக்கும்படியமைந்த ஊழே அதற்குக் காரணமாகும். பாகரிற் சிறந்த வாகுவ, நீ தான் நாளைக் காலைப் பொழுதிற்குள்ளாக யான் குண்டின புரத்தை அடையும்படி செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்தல் உன்னாலன்றிப் பிறரால் முடியாது. நீ விரைந்து சென்று, தக்கனவாகிய பரிகளைப் பூட்டித் தேரைக் கொணர்க," என்றான்.

வாகுவன், அவ் உரைகளைக் கேட்டு, 'இஃது இம் மன்னன் கூறியபடி முன்னை வினையினால்தான் முடிந்ததோ? அன்றி அம்மொய்குழலாள் என்னைக் காணும் பொருட்டுச் செய்த சூழ்ச்சியோ? யாதென்றறிகிலேனே!' என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு சென்று, சிறந்தனவாகிய வாம்பரிகளைப் பூட்டித் தேரைக் கொணர்ந்து நிறுத்தி, "வேந்தரே, இதில் ஏறுக," என்று இருதுபன்னனை நோக்கிக் கூறினான்.

இருதுபன்னனும் தேரில் ஏறினான். பிரிந்திருந்த தமயந்தியை அடைதற்குரிய நல்வினை நளனை அணுகினமையின், அப்பொற்கொடியை அடைய விரும்பிய இருதுபன்னனது மனத்தினும் விரைவாக அத்தேர் சென்றது. அங்ஙனந் தேர் செல்கையில் இருதுபன்னனது மேலாடை தப்பித் தரையில் விழுந்துவிட்டது. இருதுபன்னன், "வாகுவ, எனது மேலாடை தரையில் விழுந்துவிட்டது; எடு," என்றான். அம்மன்னன் அச் சொல்லைச் சொல்லி முடித்தற்குள்ளாக அத்தேர் அவ்வாடை விழுந்த இடத்திற்குப் பத்துக் காத தூரத்தில் வந்துவிட்டது. அவ்வேந்தன் அதனை அறிந்து வியப்பெய்தி, 'இவனிடமிருந்து இந்த வித்தையை அறிந்து கொள்ளுதற்குரிய

விதம் யாது ?' என்று தனக்குள்ளே கருதலானன். பின்பு, 'நாம் அறிந்துள்ள விஞ்சைகளிற் சிறந்ததொன்றை இவ னுக்களித்து இவனிடத்திலிருந்து இவ் விஞ்சையைப் பெறு தல் வேண்டும்,' என்று கருதி, வாகுவனை நோக்கி, அங் கிருந்ததொரு தான்றி மரத்தின் அருகில் தேரை நிறுத் தச் சொல்லி, "வாகுவ, இத் தான்றி மரத்தில் பதினையிரங் கோடி காய்கள் உள ; எண்ணிப் பார்," என்ருன்.

வாகுவனும், அவ்வாறே அம்மரத்தின்மேல் ஏறி, அக்காய்களை எண்ணிப் பார்த்து, இருதுபன்னன் அருகில் வந்து, "மன்னரே, அம்மரத்தின் காய்கள். பதினையிரங் கோடி தான்," என்ருன்.

இருதுபன்னன், "வாகுவ, நீ தேர் நடத்தும் விஞ் சையை எனக்குக் கொடுப்பின், நான் அட்ச இருதயம் என்னும் இக் கணித விஞ்சையை உனக்களிப்பேன்," என்ருன்.

வாகுவன் அதற்கியைந்து, தேர் நடத்தும் வித்தையை இருதுபன்னனுக்குக் கூறினன். இருதுபன்னன் அவ்வித் தையைப் பெற்றுக்கொண்டு, வாகுவன் என்று மாறு பெயர் பூண்டுள்ள வேந்தர் வேந்தனகிய நளனுக்கு அட்ச இருயம் என்னும் வித்தையைக் கூறினன். உடனே கலிபுரு டன் நளனை விட்டு நீங்கினன்.

## இருதுபன்னன் குண்டினபுரத்தை அடைந்து வீமன் அரண்மனையில் தங்கல்

பிறகு, வாகுவன் தேரைச் செலுத்த இருதுபன்னன் குண்டினபுரத்தை அடைந்தான். பின்பு, அம்மன்னன் வீமனது அரண்மனையின் முற்றத்தில் தேரை நிறுத்தி, வாயிற் காவலரை நோக்கி, "உங்கள் வேந்தர்க்கு எனது வருகையைக் கூறுமின்," என, அவர்கள் அவ்வாறே வீம னிடஞ்சென்று இருது பன்னனது வருகையைக் கூற, அம்மன்னன், "அவ்வேந்தனை இங்கு வர விடுமின்," என்று

அவர்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்கள் வாயின் முற்றத்திற் சென்று அதனைத் தெரிவிக்க, உடனே இருதுபன்னன் வீமனிடஞ் சென்றான். வீமன் இருதுபன்னனை உபசரித்து, "தாமரை மலரின் கண் உள்ள இனிய தேனை உண்டு அதிற்றுயின்ற வண்டு மற்றுஞ் சென்று நெய்தற் பூவிலுள்ள தேனை அருந்த விரும்புந் திருநாடாகிய கோசல நாட்டு வேந்தரே, நீர் என்பால் எய்துதற்குக் காரணம் யாது?" என்றான்.

தமயந்தியின்பால் மனஞ் சென்றதனால் நன்கு ஆய்தலின்றி அந்நகருக்கு வந்த அம்மன்னன் நாணமும் திகைப்பு மனத்திற்கொண்டு, வீமனை நோக்கி, "தாம் உண்ணுங்கனி என்றெண்ணி விளக்கினைப் பற்றச் செல்லுங் குழவிகளைத் தாய்மார் எடுத்துக்கொண்டு நிலா முற்றத்திற் சென்று அவர்கட்கு மதியினைக் காட்டும் மாடங்களையுடைய விதர்ப்ப நாட்டிறைவரே, யான் உம்மைக் காணவேண்டும் என்னும் விழைவினால் இங்கு வந்தேன்," என்றான். வீமன், அதனைக் கேட்டுப் புன்முறுவல் புரிந்து, இருதுபன்னனை நன்குபசரித்துத் தக்கதொரு மாளிகையில் அமர்ந்திருக்கச் செய்தனன்.

## தமயந்தி நன் தோழியை அனுப்பித் தேர்ப்பாகன் செயலை ஆய்தல்

இருதுபன்னன் இங்ஙனம் இருக்க, வாகுவன் என்னும் பெயர் பூண்டுள்ள நளன், தேரிற் பூட்டிய குதிரைகளை அவிழ்த்து அவற்றின் இளைப்பை ஆற்றித் தக்கதோரிடத்தில் அவற்றைக் கட்டிவிட்டு உணவு சமைத்தற் பொருட்டு மடைப்பள்ளியை யடைந்தான். தேவர்களிடம் வரம் பெற்றவனாகிய நளனாகிய பாகன் அடைந்த மடைப்பள்ளியில் அவனால் தீ, விறகு முதலிய பொருள்கள் சேர்க்கப்படாமலே உணவுப் பொருள்கள் எல்லாம் நிரம்பிவிட்டன. "அப்பாகன் செய்வனவற்றைக் கண்டு வருக," எனத் தமயந்தியினால் அனுப்பப்பட்ட தோழி, அங்ஙனம்

அவன் உணவு சமைத்தலைக் கண்டு சென்று தமயந்தியினிடங் கூறினாள். தமயந்தி, "அங்ஙனம் நெருப்பு முதலியனவின்றி அடிசில் அடுதல் நம் மன்னர்க்கன்றிப் பிறர்க்கு முடியாத செயலே. அது தேவர்களாலே அவருக்கு அளிக்கப்பட்ட வரமாகும். ஆதலின், அவர் நம்முடைய மன்னரேயாதல்வேண்டும். நீ நம்முடைய மக்களை அழைத்துச் சென்று அவர் முன் விடுத்து, மேல் நடக்குஞ் செயலை அறிந்து வருக," என்று கூறினாள். அத்தோழி அவ்வாறே தமயந்தியின் மக்களாகிய இந்திரசேனன், இந்திரசேனை என்னும் இருவரையும் அழைத்துச் சென்று, அவர்களை அப்பாகன்முன் போகவிட்டு, தான் ஓர் ஒதுக்கிடத்தில் மறைந்து நின்று அப்பாகன் செயலை நோக்கிக்கொண்டிருந்தாள்.

பாகனாய் வந்துள்ள அம்மன்னர் மன்னன் தன் மக்கள் தன் முன்னே வருதலைக் கண்டவுடன் மனம் நடுங்கினான். வெப்பமாக மூச்சுவிட்டான். அவன் கண்களில் நீர் பெருகியது.

"தொடர்ந்த மும்மல முருக்கிவெம் பவக்கடல் தொலையக்
கடந்து ளோர்களுங் கடப்பரோ மக்கள்மேற் காதல்?"
(நைடதம்)

அவன் உடனே சென்று, அம் மக்களை வாரி எடுத்துத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு, "அருமை மக்களே, நீங்கள் என் மக்களைப்போன் றிருக்கின்றீர்கள்; யார் மக்கள்?" என்றான்.

அம்மக்கள் அம்மொழிகளைக் கேட்டு, "ஐய, நாங்கள் நிடதநாட் டிறைவருடைய மக்கள். அவர் எங்கள் அன்னையைக் காட்டிலே விட்டுச் சென்றமையின் நாங்கள் இந்த நகரிலே வந்து வாழ்கின்றோம்," என்று அழுது கொண்டே கூறினார்கள். அவ்வேந்தர்பிரான் அம்மக்கள் சொன்ன சொற்களைக்கேட்டுக் கண்ணீர் உகுத்து மன

மழிந்து நின்ருன். பிறகு, அவ்வேந்தர் வேந்தன் அவர்களுள் இந்திரசேனனை நோக்கி, "இளவரசே, உங்கள் அரசை அயலான் ஆள, நீங்கள் ஓடிவந்து இந்நகரில் உறைதல் உங்களுக்கு மானக்கேடான செயலன்ருே?" என்று கேட்டான். இந்திரசேனன் அம்மொழியைக் கேட்டு மனமழன்று, அம்மன்னர்பிரானை நோக்கி, "அடிசில் அடும் மடையா! புன்தொழில் புரிவோனே! நீ அற்பனுதலின் இச்சொல்லைச் சிறிதும் அஞ்சாமற் சொல்லி விட்டாய். அரசர்கள் இச்சொல்லை நினைக்கவும் அஞ்சுவார்கள். எங்கள் மன்னர்தம் திண்டோள்களின் ஆற்றலுக்குத் தேவர்களும் வெருவுவார்கள். அவர் நாடு முதலிய செல்வங்களை வாய்மையைக் காத்தற்பொருட்டுத் துறந்தாரே யன்றிப் பிறர்க்கஞ்சித் துறந்தவரல்லர். பிற அரசர்கள் வந்து வணங்குகையில் அம்மன்னர்களுடைய மணிமுடிகள் படுதலாற் றேய்ந்த வடுவை அவருடைய திருவடிகளில் எப்பக்கத்திலுங் காணலாம். அவருக்கு வாய்மையே வன்மை என்றறி," என்று கூறினுன். நளன் அதனைக் கேட்டு மனமுருகி, கண்களிலிருந்து நீரொழுக அம்மைந்தனை நோக்கி, "இளவரசே, மன்னர் பெருமையை மடையர் அறிவரோ? உன் பெருமையை அறியாமல் உரைத்த மொழிகளுக்காக என்னை முனியற்க," என்று கூறி முடி சாய்த்து நின்ருன்.

அம்மக்களைக் கண்டு அம்மன்னன் கூறியவற்றையெல்லாம் தமயந்தியின் தோழி கேட்டு, விரைந்து சென்று தமயந்தியினிடங் கூறினுள். தமயந்தி அவற்றைக் கேட்டவுடன் அழுது விழுந்தாள்; பிறகு எழுந்து மனம் பதைத்து "என், மணங்கமழும் கூந்தலையும், காதணியையும் திருத்தி ஒப்பனை செய்யும் உம்முடைய கைகள் அடிசில் சுடும் புகையினுற் கருகி விட்டனவோ?" என்று அழுதாள்; பிறகு தன் தந்தையின்பாற் சென்று, "எந்தையே இந்நகருக்கு வந்த மன்னனுக்குத் தேரை ஓட்டிக்கொண்டு

வந்து இப்பொழுது அடுதற்றொழில் புரிந்து கொண்டிருப்பவரே எங்கள் நிடதநாட்டிறைவர்,'' என்று கூறித் தான் தன்மக்களை அவன்பால் அனுப்பியதையும் அவன் அம்மக்களைக் கண்டுரைத்தவற்றையும் உரைத்தனள்.

நளன் முன்னுரு அடைதல்

வீமன் தமயந்தி கூறியவற்றைக் கேட்டு, உடனே தன் சுற்றத்தவர்கள் தன்னைச் சூழ்ந்துவரச் சென்று, வேந்தர் வேந்தனாகிய நளனைக் கண்டு, அவனை அறிய முடியாமல் திகைத்து நின்று, பிறகு நன்குநோக்கி, 'இவன் தன் சொல், செயல், சிந்தைகளுக்கு ஒவ்வாதபடி வேறுபடக் கொண்ட உருவமே இது,' என்று துணிந்து, அவனை நோக்கி, "குரங்கு கமுக மரத்தினது பசும்பாளையை, 'ஐந்து தலையையுடைய நாகத்தின் பணம்,' என்று ஐயுற்றுப் பார்க்கும் திருநாடரே, உம்முடைய உருவை ஒளியாமற் காட்டும்,'' என்று கூறினான்.

உடனே வேந்தர் வேந்தனாகிய நளன் அரவரசனாகிய கார்க்கோடகன் கொடுத்த துகில்கள் இரண்டனுள் ஒன்றை அரையில் உடுத்து, மற்றொன்றை மேலே போர்த்துக்கொண்டான். அவ்வேந்தர் வேந்தன் அங்ஙனம் அத் துகில்களைப் புனைந்துகொண்ட மாத்திரத்தில் அம்மன்னனது வேற்றுருவம்,

> ''மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
> புக்கோ ரருவினைபோற் போயிற்று.''

இந்திரசேனனும், இந்திரசேனையும் தங்கள் தந்தையைக் கண்டவுடன் அவன் தாள்களில் விழுந்து தங்கள் கண்புனலால் அத் தாள்களைக் கழுவினார்கள். தமயந்தி, பாதித் துகிலொடும் பெருகி வழியும் கண்ணீரொடும் அம்மன்னனுடைய திருவடிகளில் விழுந்தாள். அதனைக் கண்ட அம்மன்னனுடைய கண்களில் நீர் பெருகியது. துயில் கொள்ளும்போது காட்டிலே அக் கற்பரசியை விட்டுச் சென்ற

அம் மன்னவனை அவள் கண்கள் பார்க்க விரும்பாதன போல் தம்மை நீரான் மறைத்துக்கொண்டன. அப்போது தேவர்கள் வானில் தோன்றி, "இம்மன்னவனை ஒப்பார் நானிலத்தில் ஒருவரும் இல்லை," என்று கூறி வாழ்த்தி அம்மன்னன்மீது பூமாரி பெய்தார்கள்.

### கலிபுருடன் நளனுக்கு வரங்கொடுத்தல்

அப்போது கலிபுருடன் அம்மன்னர் மன்னர் முன் தோன்றி, அவனை நோக்கி, "காவலனே, தேவி இவளுக்கு ஒப்பான கற்புடைய மங்கையரும் உனக்கு ஒப்பான செங்கோன் முறைமையுடைய மன்னரும் பூவுலகில் யாவர் உள்ளார்? இத்தகைய உங்களை யான் பலவாறு வருத்தினேன். அதற்காக என்னை முனியாது மன்னித்து என்பால் உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக் கொள்க," என்றான். நளன், கலி புருடனை நோக்கி, "தேவனே உன்னுடைய ஆளுகை முட்டின்றி உலகில் நடக்கையிலும் என் சரிதங் கேட்டாரை நீ அடைதலாகாது; இதுவே யான் நின்பால் வேண்டும் வரம்," என்று கூறினான். கலி புருடன், "நின் சரிதங் கேட்டாரை எப்பொழுதும் யானடையேன். நீ நின் மனைவி மக்களுடன் இனிது வாழ்க," என்று கூறிச் சென்றான். வீமன் மகிழ்ந்து வேந்தர் வேந்தனாகிய நளனையும் தமயந்தியையும் அவள் மக்களையும் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று விருந்து செய்தான்.

பிறகு, இருதுபன்னன் நளனை நோக்கி, "வேந்தர் வேந்தரே, உம்மை யான் அறியாமல் உரைத்தவற்றையெல்லாம் பொறுத்தருளுவீர்," என்று கூறி வீமனிடத்தும் அம்மன்னர் மன்னனிடத்தும் விடைபெற்றுக் கொண்டு தன் தேரிலிவர்ந்து அயோத்திக்குச் சென்றான்.

நளன் சில நாட்கள் குண்டினபுரத்தில் தங்கி இருந்தான். அப்போது ஒரு நாள் சுவேதன் வீமனை அடைந்து நளனைக் கண்டறிந்து அழைத்து வருவதற்குத் தமயந்தியும்

தானும் செய்த சூழ்ச்சிகளை யெல்லாங் கூறினன். வீமன் மகிழ்ந்து தான் கூறியபடி அவனுக்குப் பல சன்மானங்களைப் புரிந்து, அவனைத் தூதன் என்னும் உத்தியோகத்திற்கு உயர்த்தினன். நளனும் சுவேதனைப் பல இன்மொழிகள் கூறி உபசரித்தான்.

## நளன் நாடு, நகர முதலிய எல்லாச் செல்வங்களையும் பெற்றின்புறல்

சிலநாட்கள் சென்ற பிறகு, ஒரு நாட் காலை, நளன் விதர்ப்பர் கோனாகிய வீமனிடம் விடைபெற்றுக்கொண்டு தேவியோடும் மக்களோடும் தேரிலிவர்ந்து நாற்படைகளும் தன்னைச் சூழ்ந்துவர நிடதநாட்டை நோக்கிப் புறப்பட்டு, மாலையில் நிடத நாட்டை யடைந்து, பின்பு மாவிந்த நகரை அணுகி, அன்றிரவு ஒரு சோலையில் தங்கியிருந்தான். நளன் மாவிந்த நகரை யடைந்து மேற்செய்வனவற்றைப் பார்க்க விரும்பியவனைப்போல் செங்கதிர்ச் செல்வன் குணதிசையை அடைந்தான். நளன், "'மறு சூதுக்கு ஏற்ற பந்தயப் பொருள் எம்மரசரிடம் இருக்கின்றது,' என்று சொல்லிப் புட்கரனை அழைத்து வாருங்கள்," என்று சில தூதர்களைப் புட்கரனிடம் அனுப்பினன். அதனை அறிந்த நகரமாந்தர்கள், "எம்மரசனாகிய நளனுக்கு நன்மை யுண்டாக வேண்டும்," என்று தத்தங் கடவுளரை வணங்கிப் போற்றி வேண்டினர்கள். நளனால் அனுப்பப்பட்ட தூதர்கள் சென்று, அம்மன்னன் கூறியவற்றைக் கூறப் புட்கரான் நளன் தங்கியுள்ள சோலையை அடைந்து அவ்வேந்தர் வேந்தனை நோக்கி, "நின் மனைவி மக்கள் முதலிய அனைவரும் சுகமோ?" என்று வினவிப் பிறகு அவனுடன் சூதாடத் தொடங்கி, "வேந்தே, நீ வைக்குப் பந்தயம் யாது?" என்றான். உடனே அறவாழி வேந்தனாகிய நளன், திருமகள் நாதரை வணங்கிக் கைவிரலாழியைப் பணயமாக

வைத்தனன். புட்கரனும் சிறந்த அணிகளைப் பணயமாக வைத்தான். அவற்றை நளன் வென்று கொண்டான். பிறகு புட்கரன் தான் முன் வென்ற நாடு, நகரம், நிதி முதலிய யாவற்றையுந் தோற்றுத் தான் முன் வந்தபடியே தன் நகருக்குச் சென்றான்.

நளன் அங்ஙனம் தன் செல்வங்களை யெல்லாம் வென்றுகொண்டு, அமைச்சர் முதலானவர்கள் எதிர் கொள்ளத் தன் மனைவி மக்களுடன் நகரினுட்புக்கு, அரண்மனையை யடைந்து சிங்காதனத்தில் இனிது வீற்றிருந்தான்.

"கார்பெற்ற தோகையோ? கண்பெற்ற வாண்முகமோ?
நீர்பெற் றுயர்ந்த நெடும்புலமோ?—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர்!"

# அரும்பத உரை

பக்கம் 7

பாதகண்டம் - பரதனல் ஆளப்பட்ட நிலப்பிரிவு; இந்து தேசம். இப் பரதனைச் சட பரதன் என்றுங் கூறுவர். சங்கீத சாஸ்திர மியற்றிய பரதனும், குரு வம்சத்தின் தலைவனுகிய பரதனும், ஸ்ரீ ராமபிரானுடைய தம்பியாகிய பரதனும் இவனுக்கு வேறுனவர்கள்.

பண்டைக்காலம் - பழைய காலம்.

புனல் - நீர்.

நெற்று - முற்றிய தேங்காய்.

மதகு - ஆறு, ஏரி முதலியவற்றில் கட்டப்பட்டிருக்குஞ் சல தாரை.

மள்ளர்கள் - உழவர்கள்.

படல் - தட்டி.

பாகன் - யானை, தேர், குதிரைகளைச் செலுத்துவோன்.

தோட்டி - அங்குசம்.

ஒலி } - ஓசை.
கலிப்பு }

சும்மை - ஒலி.

அவன் தம்பி - காமன் தம்பி. (சாமன்)

பக்கம் 8

இரிய - (அஞ்ச) ஓட.

முழக்கம் - பேரொலி, குமுறல்,

அகவ - ஆட.

மருதப்பண் - மருத நிலத்தில் வாசிக்கும் பண்.
(பண் - ஒருவகையான தமிழிசை)

மான - ஒப்பாக.

தேன்இறால் - தேன் கூடு.

பக்கம் 9

தூயனவாக்கி -சுத்த முடையனவாகச் செய்து.

பொலி - தூற்ருத நெற் குப்பை. (குப்பை - குவியல்)

வானேறு-இடி; வானில் உள்ள சிங்கம். (சிலேடை)

பொலியும் - விளங்கும்.

முழைஞ்சுகள் - குகைகள்.

முழவு - மிருதங்கம். (பறைப் பொதுவுமாம்.)

பேணும் - உபசரிக்கும்.

வியப்பு எய்துவன் - ஆச்சரியபடைவான்.

தென்புலத்தார் - தெற்காகிய இடத்தில் உள்ளவர்கள்; பிதிர்கள். (பிதிர் தேவர்கள் என்றுங் கூறுவர்.)

பக்கம் 10

நீலோற்பலங் கண் மலர்தல் - நீலோற்பலப் பூக்கள் மலர்

தல்; நீலோற்பலங் கண்விழித்தல். (சிலேடை)

ஆய்தல் - ஆராய்ச்சி செய்தல்.

செறிந்த - மிக்குப்பொருந்திய.

அகழி - கோட்டையின் மதிலைச் சூழ்ந்திருக்கும் நீரரண்.

வெண்சுதை - வெண்மையாகிய சுண்ணாம்பு.

இருபாலும் - இரண்டு பக்கத்திலும்.

பக்கம் 11

திகழ்தல் - விளங்குதல்.

ஒருபால் - ஒரு பக்கம்.

அங்காடிவீதிகள் } - கடைத்
ஆவண வீதிகள் } தெருக்கள்.

ஒருசார் - ஒரு பக்கம்.

அலறும் - அழும்.

சுவடு - அடையாளம்.

பக்கம் 12

வாம்பரிகள் - (வாவும்பரிகள்) தாவி ஓடும் குதிரைகள்.

இவர்ந்து - ஏறி.

பக்கம் 13

ஆற்றல் - வல்லமை.

துயிலும்போது- தூங்குகையில்.

ஆணை - கட்டளை.

நிகர்த்தவன் - ஒப்பானவன்.

'தாயொக்கும்' என்னுஞ் செய்யுள்.

அன்னன் - அவ்வரசன்,

அன்பின் - அன்பினால்,

தாய் ஒக்கும்-தாயை ஒப்பான்:

நலம்பயப்பில் - நன்மையைச் செய்தலில்,

தவம்ஒக்கும் - (வேண்டியாங்கெய்தச் செய்வதாகிய தவத்தை ஒப்பான் ;

முன் நின்று - முன்னிலையாக நின்று,

ஒரு - ஒப்பற்ற,

செல்கதி - செல்லுதற்குரிய நற்கதியில்,

உய்க்கும் நீரால் - (மாந்தர்களைச்) செலுத்துந் தன்மையால்,

சேய்ஒக்கும் - (பெற்றோரை நற்கதியிற் சேரச்செய்யும்) புத்திரனை ஒப்பான் ;

நோய் ஒக்கும் என்னின் - நோயைப் போலப் பகைவர்களை வருத்தப்புகுவானாயின்,

மருந்து ஒக்கும் - (பகைவர்கள் கொண்ட பகைமை நீங்கி உய்யச்செய்ததால்) மருந்தை ஒப்பான் ;

நுணங்கு-நுட்பமாகிய,

கேள்வி - கேட்டற்குரிய நூற்களை,

ஆயப்புகுங்கால்-ஆராயப் புகுமிடத்து,

எவர்க்கும் - எல்லாருக்கும்,

அறிவு ஒக்கும் - ஆராய்ச்சி செய்பவர்களுக்குத் தெளிவை யுண்டாக்குதலில்) அறிவை ஒப்பான்.

ஓச்சிய - செலுத்திய.

பெருமிதக் குணங்கள் - மேன்மையாகிய குணங்கள்.

எழில் - அழகு.

விழைவு - ஆசை.

பொற்பு - அழகு.

பாவை-பதுமையைப் போன்ற வளாகிய பெண் (தமயந்தி.)

உரிமை - சொந்தம்.

வெய்யோன் - சூரியன் (வெப்ப முடையான்.)

புகல் இடம் - அடைக்கலம்; அடைதற்குரிய இடம்.

பொய்கை - குளம்

வனப்பு - அழகு.

பக்கம் 14

திண்தோள் - வன்மையாகிய தோள்.

மூப்பு - கிழத்தனம்.

கொழுநர் - நாயகர் (கொழுமை யைச் செய்பவர்.)

கலுழ்தல் - அழுதல்.

நீத்ததனே - விட்டதை.

குடும்பை - கூடு.

பார்ப்புகள் - குஞ்சுகள்.

அஞ்சல் - பயப்படாதே.

பொற்றொடியாள் - பொன்னு லாகிய வளையை அணிந்தவள்.

பக்கம் 15

புள் அரசே - பறவைகளுக் கரசே.

இயல்கள் - லக்ஷணங்கள்.

ஆய் இழை-ஆராய்ந்து செய்யப் பட்ட ஆபரணங்களை அணிந்தவள் (தமயந்தி.)

கொழு - காறு.

பேறு - செல்வம்.

வதன ஒளி - முக ஒளி.

முறுவல் - பற்கள், சிரிப்பு.

8

நான் முகன் - நான் முகங்களை உடையவன் (பிரம்மா.)

பக்கம் 16

ஐம்பொறிகள் - பஞ்சேந்திரியங் கள் (அவை: மெய், வாய், கண், மூக்கு, செவி என் பன.)

ஓதிமம் - அன்னம்.

பக்கம் 17

புவி - பூமி.

செவ்விய-செம்மையையுடைய.

வாய்மை - சத்தியம்.

கொற்றவை - துர்க்கை.

பக்கம் 18

நுதல் - நெற்றி.

அரும்ப - உண்டாக.

பக்கம் 19

வள்ளுவர் - ஒரு வகுப்பினர்.

பரிவாரங்கள் - சுற்றி யிருப்ப [வர்கள்.

ஒருங்கு - ஒன்றாய்.

உறைந்தார்கள் - வசித்தார்கள்.

இரக்கும் - யாசிக்கும்.

விழைவு - விருப்பம்.

பக்கம் 20

அணை - படுக்கை.

விளித்து - கூப்பிட்டு.

யாழ் - ஒருவகை வீணை.

பக்கம் 21

காலின் - காற்றினுடைய.

கடுகிய விரைவு - விரைந்த விரைவு (மிக்க விரைவு.)

வானவர் கோன் - தேவர்களுக் கரசன் (இந்திரன்.)

பக்கம் 22

போதுகள் - பூக்கள்.

அழல் கடவுள்-அக்கினிதேவன்.

கடல் அரையன் - கடலுக்கு அரசன் (வருணன்.)

தருமன் - எமன்.

ஐந்தரு - (சுவர்க்கத்தில் உள்ள) ஐந்து விருக்ஷங்கள், (அவை: கற்பகம், பாரிசாதம், மந்தாரம், சந்தானம், அரிச் சந்தனம் என்பன.)

பக்கம் 23

பா - நெசவுபா, (தறி.)

நெய்குழல்-துணி நெய்தற்குரிய ஒரு கருவி. (அதில் நூல் சுற்றப்பட்டிருக்கும். அதனைத் தறியில் இப் புறத்திலிருந்து அப்புறமும் அப்புறத்திலிருந்து இப்புறமாகச் செலுத்தித் துணி நெய்வார்கள்.)

தளிர் இயல் - தளிரைப்போலு மென்மையாகிய தன்மை யுடைய பெண், தமயந்தி.

சினங்கொள்ளாமல் - கோபங் கொள்ளாமல்.

ஒருப்பட்டு - சம்மதித்து.

பக்கம் 24

விஞ்சைக் கிறைவன் - மாய வித்தைக்குத் தலைவன்.

பக்கம் 25

அமரர்கோ-தேவர்களுக்கு அரசன்; (இந்திரன்.)

கவரும் - கொள்ளும்.

புரக்கும் - காக்கும்.

அமலர் - பரிசுத்தர் (மலமற்றவர்.)

குமிழி - நீரிற் றோன்றும் மொக்குள்.

விழைகிலது - விரும்பிலது.

பருகி - குடித்து.

வென்றி - ஜெயம்.

பக்கம் 26

உறையுள் - இருப்பிடம்.

அவி-யாகத்தில் தேவர்களுக்குக் கொடுக்கும் உணவு.

வையம் - பூமி.

வெங்கதிரோன் - வெப்பமான கிரணங்களை உடையவன் (சூரியன்.)

பக்கம் 27

உடுக்குலங்கள் - நக்ஷத்திரக் கூட்டங்கள்.

தண் கதிர்ச் செல்வன் - குளிர்ந்த கிரணங்களாகிய செல்வத்தை யுடையவன் (சந்திரன்.)

கச்சு - இடைக்கட்டு.

பக்கம் 28

குணக்கு - கிழக்கு.

தாறு - குலை.

கமுகமரம் - பாக்குமரம்.

நுகர்தல் - உண்ணுதல்.

பக்கம் 29

பாலிகை - வட்டம், (முளைகளை வைக்கும் ஒருவகைத் தட்டு.)

பொன்தகளி - பொன்னாற் செய்த அகல்.

முகப்பில் - முன்னிடத்தில்.

அகில் - ஒருவகை வாசனைக் கட்டை.

மதி - சந்திரன்.

நூற்று - (நூலாக) நூற்று.

முகபடாம் - (யானையின் முகத்திலணியும் போர்வை.)

கல்லணை - குதிரை மேற்றவிசு, (சேணம்.)

ஒப்பனை - அலங்காரம்.

கோ மறுகு - ராஜவீதி.

கொடிஞ்சி - தேர்மொட்டு.

கைபுனைந்து - அலங்கரித்து.

கார் - மேகம்.

மேகலை - பெண்கள் இடுப்பில் அணியும் ஒருவகை அணி. இது மணிகள் ஏழு கோவை யாகக் கோக்கப்பட் டிருப் பது; (எழு, கோவை மேகலை' என்பது காண்க.)

சில்லரி - சிலம்பின் பருக்கைக் [கல்.

திலகம் - பொட்டு.

பக்கம் 30

நறிய - வாசனையையுடைய.

மது - தேன்.

மஞ்சு - மேகம்.

இன் அடிசில் - இனிய உணவு.

நாழிகை வட்டில் - கால அளவைக் காட்டும் ஒரு கருவி (இது வட்ட வடிவமாயிருப் பது; ஆதலால், இதனை நாழிகை வட்டம் என்றுங் கூறுவர்; சூரிய கடிகாரம் என்று கூறுதலுமுண்டு.)

பக்கம் 33

காளை - காளையைப் போன்ற வன்; (காளை - இளமைப் பருவத்தினை உடைய எருது.)

பக்கம் 34

புரவலன் - அரசன்; (புரத்த லில் வல்லவன்; புரத்தல் - காத்தல்.)

அடல்கரி - வன்மையையுடைய யானை.

முகில் - மேகம்.

குரைகழல் - ஒலிக்கின்ற வீர கண்டை.

பக்கம் 36

உம்பல்கள் - யானைகள்.

பக்கம் 37

ஆகண்டலன் - இந்திரன்; (சத் துருக்களைக் கண்டிப்பவன்.)

கவசம் - இரும்பு முதலியவற் றாற்செய்த ஒருவகைச் சட் டை. (இது போர் வீரர்கள் மார்பில் அணிவது.)

பக்கம் 38

இராகு - நவக் கிரகங்களில் ஒன்று; (கரும் பாம்பு; இது சந்திரனைப் பற்றுவதால் சந் திர கிரகணம் உண்டாகின் றது என்பது புராணக் கூற்று.)

மறவர்கள் - வீரர்கள்.

அரிமா - சிங்கம்.

மீளிகள் - வெற்றியுடைய யுடைய வீரர்கள்; (வன் மையை யுடையவர்கள்.)

இரண்டு அரவுகள் என்ன - இரண்டு பாம்புகளைப்போல.

களிறு - ஆண் யானை. (பெண் யானை பிடி எனப்படும்.)

நாண் - கயிறு; (வில் நாண்-வில் லின் கயிறு; வில்லின் ஒரு

முனையில் இக்கயிற்றின் ஒரு முனை கட்டப்பட்டிருக்கும்; வீரர்கள் பாணம் எய்கையில் வில்லை வளைத்து அதன் மற்றொரு முனையில் அக்கயிற்றின் மறு முனையைப் பூட்டுவார்கள்.)

ஊழித்தீ - உலக முடிவில் உண்டாகும் நெருப்பு.

பக்கம் 39

உருத்து - கோபித்து.

கவந்தம் - தலைக் குறை உடம்பு; (முண்டம்.)

வெந்நிட்டோடி - முதுகாட்டி ஓடி (வெந் - முதுகு.)

இமில் ஏறு - முசுப்பினை உடைய எருது; (இமில், முசுப்பு, ஏரி என்பன ஒரு பொருளன.)

பொருது - போர் செய்து.

பக்கம் 40

பிறங்கின - விளங்கின.

ஞாயிறு - சூரியன்.

சிச்சிலிக்குருவி - ஒருவகைக் குருவி; (இதனைப் பொன்வாய்ப் புள் எனவும், சிரற் புள் எனவுங் கூறுவர்.)

பிறழ்தல் - திரும்புதல்.

திகழ்ந்தன - விளங்கின.

பக்கம் 42

கேடகம்-பரிசை; (இதைக் கேடயம் எனவுங் கூறுவர்; பகைவர்கள் வீசும் வேல் வாள்களைத் தம்மேற்படாமல் தடுத்தற்கு வீரர்கள் வைத்திருக்கும் வட்டவடிவமான ஓர் ஆயுதம்.)

அவுணர்கள் - அசுரர்கள்.

பக்கம் 45

பேழை - பெட்டி,

அண்மை - அருகு, (சமீபம்.)

அண்மைத்து - சமீபமானது.

சிகழிகை - ஒருவகை மாலை, (தொடுத்த மாலை.)

பக்கம் 46

அநங்கன் - மன்மதன்; (அங்கமில்லாதவன். உருவில்லாதவன்.)

அனிச்ச மலர்-ஒருவகை மலர்; (இது மிகவும் மென்மையானது.)

நுவல்வது - சொல்வது.

ஒற்றர்கள் - வேவுகாரர்கள்.

மருங்கு - பக்கம்.

பக்கம் 47

ஓரை - சமயம், இலக்கினம்.

மணத் தவிசு - மணமக்கள் உட்காரும் பீடம்.

பல்லியம் - வாத்தியங்கள் (அன்றி பல் இயம் என்று பிரித்துப் பல வாத்தியம் என்று கூறுதலுமாம்.)

ஆசி - வாழ்த்து.

பக்கம் 48

ஆலாத்தி - (ஆலத்தி என்பதன் மரூஉ; ஆலத்தி - ஆல நீர் உள்ள தட்டு.)

பக்கம் 50

பாதிரி - ஒருவகை மரம்.

ஞாழல் - குங்கும மரம்.

புன்கு-புனமுருங்கை; (புன்னக மரம்.)

புன்னாகம் - புன்னை மரம்.

பக்கம் 55

விபுதரே - அறிஞரே; தேவரே. (சிலேடைப் பொருள்.)

ப்ராமுகமாக - அலக்ஷியமாக.

திண்ணிய - வலிய.

பக்கம் 56

வல் - சூதாடு கருவி.

பக்கம் 57

ஓலக்கம் - சங்கமண்டபம், அரசன் திருச்சமுகம்.

ஒருப்பட்டனர் - சம்மதித்தனர்.

தொண்டு - குற்றேவல், பணிவிடை; (தொண்டு செய்தல்-பணி செய்தல்.)

பக்கம் 58

'கர்தல்' என்னுஞ் செய்யுள்:—

போதில் - தாமரைப் பூக்களில்,

சினை ஆமை - சூல் கொண்ட ஆமைகள்,

வைகும் - தங்குகின்ற,

திருநாடா - செல்வத்தினையுடைய நிடதநாட்டை யுடையவனே!

காதல்-அயல் மாதர்மேல்ஆசை கொள்ளுதலும்,

செம்மை - நடுவு நிலைமையை,

நினையாமை பூண்டார் - கருதாமையை மேற்கொண்டவருடைய,

நெறி - ஒழுக்கங்களாம்.

'அறத்தை வேர் கல்லும்' என்னுஞ் செய்யுள் :—

அறத்தை - (சூது) தருமத்தை,

வேர்கல்லும்-அடியுடன் கெடுக்கும்;

அருநரகில் - மீளாத நரகத்தில்,

திறத்தையே கொண்டு - (வெல்லும்) வகையையே (தன்னுள்) கொண்டு,

அருளைத் தேய்க்கும் - அருளை அழிக்கும்;

மறத்தையே பூண்டு - கோபத்தையே மேற்கொண்டு,

விரோதம் செய்யும் - பகையை உண்டாக்கும்;

பொய்ச்சூதை - பொய் நிகழ்தற்கிடமாகிய சூதாட்டக் கருவிகளை,

மிக்கோர் - அறிவிற் சிறந்தவர்கள்,

தெரிந்து -(அதன் தன்மையை நன்றாய்) அறிந்திருந்தும்,

தீண்டுவரோ-தொடுவார்களோ? (தொடார்கள்.)

'உருஅழிக்கும்' என்னும் செய்யுள்:—

ஒன்று அல்ல - (சூது செய்யும் செய்கை) ஒன்று அல்லவாம்.

உரு அழிக்கும் - (அது ஆடுவோனது) அழகை அழிக்கும்;

உண்மை - உண்மையையும்,

உயர்வு அழிக்கும் - மேன்மையாகிய அறிவையும் அழிக்கும்;

வண்மைத் திருஅழிக்கும் - வளப்பமாகிய செல்வத்தையும் அழிக்கும்;

மானம் சிதைக்கும் - பெருமையைக் கெடுக்கும்,

மருவும் - நட்புக்கொள்ளும்,

ஒருவரோடு - ஒருவரிடத்திலுள்ள,

அன்பு அழிக்கும் - அன்பை நீக்கும்;

தக்கோர் - உயர்ந்தவர்கள்,

புரிந்து - விரும்பி,

சூதுபொருவரோ - சூதாடுவார்களோ? (ஆடார்கள்.)

'ஆயம் பிடித்தாரும்' என்னுஞ் செய்யுள் :—

ஆயம் பிடித்தாரும் - சூதாடு கருவியைப் பற்றினவர்களும்,

அல்லல் - துன்பத்துக்குக் காரணமாகிய,

பொதுமகளிர் - வேசியர்களிடத்தில்,

நேயம் பிடித்தாரும் - சிநேகத்தைக் கொண்டவர்களும்,

நெஞ்சிடை - (புறத்தே தோன்ருமல்) மனத்தில்,

மாயம் பிடித்தாரின் - வஞ்சனையைக் கொண்டவர்களினும்,

வேறு அல்லர் - வேறனவர்கள் அல்லர்,

என்று உரைப்பது அன்றே என்று சொல்லுதலன்ருே ?-

வடித்தாரின் - முனிவராற் சொல்லப்பட்ட,

நூலோர் - நூலைக் கற்றவர்களது,

வழக்கு - ஒழுக்கம்.

கனன்று - கோபித்து,

வாளா இருந்தனர் - சும்மா இருந்தார்கள்.

பக்கம் 59

தீயஊழ் - தீவினை.

சேமம் நிதி - சேர்த்து வைத்த பொருள்.

இற்கிழத்தி-மனைக்கு உரியவள் (மனைவி.)

பணையம் - பந்தயம்.

பக்கம் 60

'ஆருயிரின்' என்னுஞ் செய்யுள் :—

தங்கண்ணின் - (அக்குடிகள்) தங்களுடைய கண்ணினது.

நீர்வார்த்து - அழுகை நீரை வடித்து,

கால்கழுவா நின்று - (நளனது) கால்களைக் கழுவிக் கொண்டே,

அறத்தின் - தருமத்தினது,

பெருந்தவமே - உயர்ந்த தவப் பயனே,

பேர் அருளின் கண்ணே-மிக்க அருளினது கண்ணே, (பெருமானே,)

பார்இடத்தை - பூமியை; (நிடத நாட்டை.)

யார்காக்க - யாவர் காக்கும்படி (விட்டு,)

நீ போவது - நீ போதல்,

யாங்கு - எங்கு? (என்ருர்.)

'வடியேறு' என்னும் செய்யுள் :—

வென்று-(பகைவரை) வென்று,

இருந்த-(பார்பெருமல் சோம்பி) இருந்த,

தோளான் - தோள்களை உடையவனுகிய நளனுடைய,

தாள்வீழ்ந்து - திருவடிகளில் விழுந்து,

வடிவுறு - கூர்மை மிகுந்த,

மன்னுவோ - அரசனே, ஓ - இரக்கப்பொருளது,

உன்றன் - உன்னுடைய,

அடியேங்கட்கு - அடியவர்களாகிய எங்களுக்கு,

ஆதரவுதீர - (நீ இங்கு இருக்க வேண்டும் என்னும்) ஆசை நிறைவேற,

கொடி நகரில் - கொடிகளையுடைய இந்நகரத்தில்,

இன்று இருந்து - இத்தினம் தங்கி,

நாளை எழுந்தருள்க - நாளைத் தினம் செல்க;

என்று உரைத்தார் - என்று சொன்னார்கள்.

பக்கம் 12

'கைதவந்தான்' என்னுஞ் செய்யுள்:—

மாதராய் - பெண்ணே !

கைதவம் நீக்கி - (பிறரை) வஞ்சிப்பதை ஒழித்து,

கருத்தில் - மனத்திலுள்ள,

கறை அகற்றி-(காமம், வெகுளி மயக்கம் என்னும்) அழுக்கை நீக்கி,

எத்தனையும் - எவ்வளவு மிகுதியாயினும்,

தவம் - செய்தற்குரிய

சய்தாலும் - செய்த போதிலும்,

மைதீர் - குற்றமற்ற,

மகப்பெரு மானிடர்கள் - மக்களைப் பெருத மனிதர்கள்,

வானவர்தம் - தேவர்களுடைய,

ஊர்க்கு - சொர்க்கத்தில்,

போந்து - பிரவேசித்து,

புகப்பெருர் - (அவ்வுலகத்தின்பம் தம்பால்) வரப்பெருர்கள்.

'பொன்னுடையர்' என்னுஞ் செய்யுள்:—

புக்கு - அருகே வந்து,

இன் அடிசில் - இனிமையாகிய சோற்றை,

அளையும் - அளைகின்ற,

தாமரைக்கை- தாமரைமலரைப் போன்ற கைகளையும்,

பூநாறும் - (குமுத) மலர்போலத் தோன்றுகின்ற,

செய்யவாய் மக்களை - சிவந்த வாயையும் உடைய மக்களை,

இங்கு - இவ்வுலகத்தில்,

இல்லாதவர் - இல்லாத மாந்தர்கள்,

பொன் உடையார் எனும் - (மிகுதியும்) செல்வத்தை உடையவர்களா யிருப்பினும்,

புகழ் உடையர் எனும்-புகழை உடையவர்களா யிருப்பினும்,

மற்று - வேறு,

என் உடையர் ஏனும் - எதை உடையவர்களாயிருப்பினும்,
உடையரோ - உடைவர்களா வார்களோ? (ஆகார்)
'சொன்ன கலையின்' என்னுஞ் செய்யுள் :—
முன்னம் - எதிரில்,
இன் முகத்து - இனிய முகத்தையும்,
குறுகு - குறுகிய
தலை - தலையையுடைய,
கிண்கிணி - கிண்கிணி என்னும் அணியை அணிந்த,
கால் - கால்களையும் உடைய,
கோமக்கள் - சிறந்த பிள்ளைகளுடைய
பால்வாய் - பால் மணத்தினையுடையவாயினின்று வரும்,
சிறுகுதலை - நிறம்பாத மென் சொற்களை,
கேளாச் செவி - கேட்காத காதுகள்,
சொன்ன - பெரியோர்களால் சொல்லப்பட்ட,
கலையின் துறை அனைத்தும் - நூற்களின் வகை முழுதும்,
தோய்ந்தாலும் - நிரம்பப் பெற்றாலும்,
என்ன பயன் - யாதுபயனை,
உடைத்தும் ஆம் - உடையது ஆகும்.

பக்கம் 63

'சினக்கதிர்வேற்கண்' என்னுஞ் செய்யுள்:—
சினம் கதிர்வேல் - கோபமாகிய கிரணங்களையுடைய வேலைப் போன்ற,
கண்மடவாய்- கண்களையுடைய பெண்ணே!
செல்வர்பாற் சென்று - செல்வமுடைபவர்களிடத்திற் போய்,
எனக்கு ஈ என்னும் - (ஏழையாகிய) எனக்கு ஈவாய் என்று இரக்கும்,
இம்மாற்றம் - இச் சொல்,
தனக்கு உரிய-தனக்குரியதாக நிலைத்த,
தானம் துடைத்து - தானத்தினால் வந்த புகழை அழித்து,
தருமத்தை - இல்லறத்தை,
வேர்பறித்து - முற்றுங் கெடுத்து
மானம் துடைப்பது - மானத்தைக் கெடுக்க வல்லதாகிய,
ஓர்வாள் - ஒரு வாளாகும்.
'மன்னராய்' என்னுஞ் செய்யுள்:—
அரும்பேடை மானே - உயர்வாகிய பெண் மானைப் போன்றவளே,
மன்னராய் - தாம் அரசராயிருந்து,
மன்னர்தமை - வேறு அரசர்களை,
அடைந்து - (வறியாராய்ச்) சேர்ந்து,
வாழ்வு எய்தி - (அவர்களால்) தரப்படும் செல்வத்தை அடைந்து,
இன் அமுதம் - (நாவுக்கு) இனிமையாகிய உணவை,

தேக்கி - நிரம்ப உண்டு,

இருப்பரேல்-உயிர் வாழ்ந்திருந் பார்களானல்,

அவர் - அத்தன்மை யானவர் கள்,

சொன்ன - (உலகத்தாரால் இழித்துச்) சொல்லப்பட்ட,

பெரும் பேடிகள் - ஆண்மை விட்டுப் பெண்மை அவாவும் சிறந்த பேடிகளாவர்.

அலரேல் - அல்லராயின்,

பித்தரே அன்றே - பித்தர்களே யாவார்கள்.

பக்கம் 64

திவலே - துளி.

கடுஞ்சுரம் - கொடிய காடு.

பக்கம் 5

குவடு - சிகரம்.

இழிந்து - இறங்கி.

பக்கம் 67

தண் துழாய் அலங்கல்-குளிர்ச்சி யாகிய துளசியினலாகிய மாலே.

பக்கம் 68

'அறம் பிழைத்தார்' என் னுஞ் செய்யுள்:—

அறம் பிழைத்தார் - தருமத் தைத் தவறி நடந்தவர்களும்,

பொய்த்தார் - பொய் பேசியவர் களும்,

அருள் சிதைத்தார் - அருளேக் கெடுத்தவர்களும்,

மானம் திறம் பிழைத்தார் - மானமாகிய வகையை விட்ட வர்களும்,

தெய்வம் இகழ்ந்தார் - தெய்வத் தைப் பழித்தவர்களும்,

புறங் கடையில் சென்ருர் - (மேற்கூறியவர் களுடைய) தலேவாயிலிற் சென்றவர்களு மாகிய இவர்கள்,

புகும் நரகம் சேர்வாய் - சேரும் நரகத்தைத் சேர்வாய்.

ஊழ் - பழவினே.

நல்நெறி - நன்மையாகிய வழி,

கண்டுயில்வோம் - தூங்குவோம்.

பக்கம் 69

கொதுகு - கொசுகு.

நுகர்ந்தே - அநுபவித்தே.

நள் இருள் - நடு இரவு.

பக்கம் 70

துகில் - ஆடை.

பக்கம் 72

'நேரலார்' என்னுஞ் செய் யுள் :—

நேரலார்—பகைவர்களாகிய யானேகளுக்கு,

போர் ஏறே - போரில் ஆண் சிங்கம் போன்றவரே,

நிடதத்தார்-நிடத நாட்டிலிருப்ப வர்களுடைய,

கோமானே - அரசனே,

ஆரம் வரை மார்பா - முத்து மாலேயை அணிந்த மலேயைப் போன்ற மார்பை யுடைய வனே,

அளியேன் - (உன்) அருளுக் குரியவளாகிய என்னுடைய,

கார் இருள் வாய் - மிக்க இருட்டில், (வாய் - ஏழனுருபு.)

இன்னும் சாரலை-இன்னும் வந்திலாய்; (ஆல்-அசை.)

நின் தண் அளி - உன்னுடைய குளிர்ச்சியாகிய அருள்,

இதுவோ - இதுதானோ?

'நெஞ்ச மெலிவேன்' என்னுஞ் செய்யுள்:—

நெஞ்சம் மெலிவேன் - (உன்னைக் காணமல்) மனந் தளர்கின்றவளாகிய யான்,

தடந்தோள் - விசாலமாகிய தோள்,

கஞ்ச மலர் முகம் - தாமரை மலர்போன்ற முகம்,

காணது - காணமையால்,

கண்பனிப்ப -(என்) கண்களில் நீர் பெருக,

மஞ்சு தவழ் - மேகங்கள் தவழும்,

வெற்பு எறிந்த - மலைகளின் (சிறகுகளை) அரிந்த,

வச்சிரத்தோன்-வச்சிரப் படையை யுடையவனுகிய இந்திரன்,

விஞ்சை பயின்று-வித்தையைப் பழகி,

விளையாட்டயருதியோ - விளையாடுகின்ருயோ?

'ஞாலத்திருணடப்ப' என்னுஞ் செய்யுள்:—

ஞாலத்து - பூமியிலுள்ள,

இருள் நடப்ப - இருள் நீங்கவும்,

நாள் கமலம் - புதிய தாமரை முகைகள்,

வாய் நெகிழ - மலரவும்,

வேலை - கடலினது,

திரை முகட்டில் - அலைகளின் உச்சியில்,

வெய்யோன் - சூரியன்,

எழுந்தனன் - உதித்தான்; (ஆல் - அசை.)

மாலைக் கதிர் வடிவேல்-(வெற்றி) மாலையையும், ஒளியையும், கூர்மையையு முடைய வேலை ஏந்திய,

மன்னர் பெருமானே - அரசர்களுக் கரசனே,

காலை - காலையில்,

கடவ - செய்யத்தக்க,

கடன் - நித்திய கருமங்களை,

கழிக்க - செய்து முடிக்க,

வாராய் - வருவாயாக.

பக்கம் 73

'வெறித்த விளமான்காள்' என்னுஞ் செய்யுள்:—

வெறித்த - மயங்கிய,

இளமான்காள் - இளமையாகிய மான்களே,

மென்மயில்காள் - மென்மைத் தன்மை வாய்ந்த மயில்களே,

ஊழி - ஊழிக் காலமட்டும்,

நெடிது வாழ்வீர் - மிகுதியும் வாழ்ந்திருப்பீர்கள்,

இந்த நெறிக் கண் - இந்த வழியில்,

எம்மைப் பிரித்து - எம்மை விட்டு நீங்கி,

போனரைக் காட்டுதிர் - போனவரைக் காட்டுங்கள்.

அப் பாந்தள் - அந்த மலைப் பாம்பு.

புல்வாய் - மான்.

பக்கம் 74

சங்கக் குழை - சங்கினாற் செய்யப்பட்ட காதணி.

காலத்தினால்-(ஒருவனுக்கு இறுதிவந்த) காலத்தில்,

செய்த - (ஒருவன்) செய்த,

உதவி - உபகாரம்,

சிறிது எனினும்-சிறியதாயிருப்பினும்,

ஞாலத்தின் - பூமியை விட,

மாணப் பெரிது - மிகவும் பெரிதாகும்.

மனம் அழன்று-மனத்திற் கோபங்கொண்டு, (மனம் வெதும்பி என்றலுமாம்.)

பக்கம் 75

கொழுநர் - நாயகர் (கொழுமையைச் செய்பவர்.)

பக்கம் 76

அற்ற - (பாதியாக) அறுந்த

புனை இழையாய் - அழகாகச் செய்யப்பட்ட ஆபரணத்தை அணிந்தாளே!

ஒற்றர்கள் - வேவுகாரர்கள்.

இனிது இருத்தி - சுகமாயிரு.

ஒருப்பட்டு - சம்மதித்து.

பக்கம் 77

கலம் - கப்பல்.

கவன்றது - கவலைப்பட்டது.

பக்கம் 80

பொற்பின் செல்வி - அழகினுக்கோர் செல்வம் போன்றவள்.

பக்கம் 81

அரவு அரசு-பாம்புகளுக்கு அரசன்.

எயிற்றை-பற்களை (எயிறு-பற்கள்.)

வாகுகள் - தோள்கள்.

நளன் காட்டினின்று அயோதிக்குச் செல்கையில் கடற்கரைக்குச் சென்றனன் என்பது நளவெண்பா, நைடதமாகிய இரு நூற்களினுங் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலின் இந் நூலினும் அஃது எழுதப் பட்டது- ஆயினும் அஃது ஆயத்தக்கது. (நெய்தற்றிணையின் பொருளாகிய இரங்குதற் பொருளமைத்துப் பாடுதற்கு இங்ஙனங் கூறினார்கள் போலும் எனத் தோன்றுகின்றது.)

பக்கம் 82

போதுகள் - புஷ்பங்கள்.

ஆள் அரவம் - மனிதன் வரும் ஒலி.

பக்கம் 83

அலவன் - நண்டு.

'பானலே' என்னுஞ் செய்யுள்:-

பானலே - நீலோற்பலமே!

சோலை - (மருத முதலிய நிலங்களில் உள்ள) சோலைகளிற் படிந்துவருகின்ற,

பசுந்தென்றல்- குளிர்ச்சியாகிய தென்றற்காற்று,

வந்து உலவும் - வந்து உலாவுகின்ற.

கானலே - கடற்கரைச் சோலையே!

வேலை-கடற்கரையைச் சார்ந்த,

கழிக்குருகே - கழியின்கண் உள்ள நாரையே!

யான் உடைய - (எனக்குரியவளாக) யான் கொண்ட,

மின் இமைக்கும் பூணுள் - மின்னலைப்போல் விளங்கும் ஆபரணத்தை அணிந்த தமயந்தி,

அவ்வீங்கு இருள்வாய் - அந்த மிகுந்த இருளில்,

ஆங்கு - அக் காட்டில்,

உணர்ந்தால் -விழித்துக்கொண்டால்,

என் நினைக்கும் - யாது நினைப்பாள்?

எனக்குச் சொல்வீர்-எனக்குச் சொல்லுங்கள்.

'போவாய் வருவாய்' என்னுஞ் செய்யுள்:—

தீவாய் - தீயில் அகப்பட்ட,

அரவு - பாம்பை,

அகற்றும் - அத்தீயினின்று நீக்கிய,

என்போல - என்னைப்போல,

ஆர்கலியே - கடலே!

வருவாய் - (கரைக்கு) வருவாய்,

போவாய் - (மீண்டு) போவாய்,

புரண்டு விழுந்து - புரண்டு (மேலெழுந்து) விழுந்து,

இரங்கி - ஒலித்து,

நாவாய் - மரக்கலம்,

குழற - (உன்மேல்) தடுமாற,

நடுங்குறுவாய் - அசைவாய்.

மாதை - (உன்) மனையாளை,

இரவு அகற்றிவந்தாய் கொல் - (என்னைப் போல) இரவிலே பிரிந்து வந்தாயோ?

(போவாய் என்பது முதல் நடுங்குறுவாய் என்பது வரையினும் கடலுக்கும் நளனுக்குஞ் சிலேடை. நளனுக்குச் சொல்லுங்கால் 'நான் தமயந்தியைப் பிரிகையில் அவள்பாற் செல்லுதலு மீளுதலுமாக விருந்து பூமியில் விழுந்து புரண்டு வருந்தி நாவினையுடைய வாய் தடுமாற நடுங்கினேன். அதுபோல நீயும் அங்ஙனம் நடுங்குகின்றாய் என்க.)

அரும்பொறை-பிறரிடம்காண்பதற்கு அரிய பொறுமை.

பக்கம் 84

இலகுறும் - விளங்கும்.

மதியினன் - அறிவினையுடையவன்.

விழைவினன் ஆகி - விருப்பமுடையவனாய்,

அடுதல் - சமைத்தல்.

பக்கம் 85

அளி என்னும் - கொடு என்று கேட்கும், வண்டுகள் என்று சொல்லப்படும் (சிலேடை.)

பகலவன் - சூரியன்.

கூம்புதல் - குவிதல், வாடல், (சிலேடை.)

விதானம் - மேற்கட்டி.

உடுக்குலங்கள் - நக்ஷத்திரக் கூட்டங்கள்.

பக்கம் 86

நீர்மையது - தன்மையது.

பக்கம் 88

எகின அரசு - அன்னங்களுக்கு அரசு.

முகில் - மேகம்.

பிணி - நோய்.

பரற்கல் - பருக்கைக்கல்.

பொலிவு - விளக்கம், அழகு.

பக்கம் 91

கரி-யானை (கரத்தை யுடையது)

புரத்தற்கு - காத்தற் பொருட்டு.

'கானகத்து' என்னுஞ் செய்யுள்:—

காரிகை - பெண்,

எந்நிலையள் - எவ்வித நிலைமையை உடையவளா யிருக்கின்ருள்?

தேன் அகத்து - தேனைத் தன் கண்கொண்ட,

பைந் தொடையீர் - பசுமையாகிய மாலையை அணிந்தவரே!

தேர்வம் - நன்கறிவோம்,

வான் அகத்து - வானின் கண் உள்ள,

புலவர் என-தேவர்களைப்போல்

மாயம் - இந்த மாயத்தை (மறப்பை)

எவன் செய்தீர் - எதற்காகச் செய்தீர்?

'காரிருள்' என்னுஞ் செய்யுள்:

கார் இருள் - மிக்க இருள்,

கார் அனைய - (ஈகையினால்) மேகத்தைப் போன்ற,

திருக்கரத்தீர்-அழகிய கைகளையுடையவரே!

காண்கும் என - பார்ப்போம் என்று

ஈரம் அறு - அன்பு அற்ற.

நெஞ்சனர்-மன முடையவர்கள்

ஏதம் - (இந்த) துன்பத்தை.

பக்கம் 92

ஐயுறவு - சந்தேகம்,

பக்கம் 93

'காரிருளில்' என்னுஞ் செய்யுள்:—

தேர்வேந்தர்க்கு-தேர்ச் சேனையை உடைய அரசர்க்கு,

துணிவு - துணிவு என்பது,

தம் காதலியை - தம்முடைய அன்புள்ள மனைவியை,

சோர்துயிலில் - அயர்ந்த நித்திரையில்,

நீத்தல் அன்ரே-விட்டுப் பிரிதல் அல்லவா?

பக்கம் 94

அச்சுதன் - அழிவில்லாதவன், (சுதம் - அழிவு.)

பக்கம் 96

குவடு (- மலையின் சிகரம்.)

பக்கம் 98

பயின்றவன் - கற்றவன்.

பக்கம் 1)

திருமுகம் - கடிதம்.

பக்கம் 103

தான்றி மரம் - ஒரு மரம்.

அட்ச இருதயம் - கண்ணுற் பொருள்களைக் கண்டவுடன் அவை இத்துணை என மனத்தாலறியும் வித்தை.

விஞ்சை - வித்தை.

பக்கம் 106

மடையன் - அறிவில்லாதவன்.

புன்மை - அற்பம்.

வெருவுவார்கள்-அஞ்சுவார்கள்.

பக்கம் 107

கமுகமரம் - பாக்குமரம்.

நாகத்தின் பணம் - பாம்பின் படம்.

பக்கம் 108

பூமாரி -புஷ்பமாகிய மழை.

பக்கம் 109

திருமகள் நாதர் - இலக்குமியின் நாயகர் (திருமால்.)

பக்கம் 110

'கார்பெற்ற' என்னுஞ் செய்யுள் :—

பார்பெறு - தன்னாட்டைப் பெற்று,

மாதோடு - தமயந்தியுடன் (மன்னன் வருதலைப் பார்த்த,)

மாநகர்க்கு - சிறந்ததாகிய மாவிந்த நகரமாந்தர்களுக்கு)

எதிர் - உவமை,

கார் பெற்ற-மேகம்வரப்பெற்ற,

தோகையோ - மயிலோ?

கண்பெற்ற-(இழந்த) கண்களை அடைந்த,

வாள் முகமோ-ஒளியையுடைய முகமோ?

நீர் பெற்றுயர்ந்த - (மழை) நீரைப்பெற்று (பயிர்) வளர்ந்த,

நிறை புலமோ - குறைபில்லாத வயலோ,

ஏதோ உரைப்பன்-(இவற்றுள்) எதைச் சொல்லுவேன்?

No. 104108
LIBRARY
EGMORE, MADRAS
D-JGPU, N29

21B
7-39